2965

To N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: 36 NO: 1

APRIL 1th 1987

D
V211,31 N87
N87.36.1
126510

வெளியீடு 31-10-1987 Issued 31-10-87

2465

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

529/AL/88

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 1, 1987-தொகுதி 36-எண் 1
Wednesday, the 1st April 1987-Volume 36-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George, Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

184.31 N87
N87.36.1
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம்
136510
சென்னை-600 009.

உள்ளடக்கம்.

1-4-1987

	பக்கங்கள்.
தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்	i
Personnel of the Government of Tamil Nadu	ii—iii
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	iv—v
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல்	vi—xv
1. வினாக்கள்—விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1—33
2. தகவல் கோரல்—	
(அ) கல்லூரிகளில் தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிப்பது குறித்து	34
(ஆ) மாற்றியமைக்கப்பட்ட சொத்துவரி அமல்செய்வது குறித்து	34—35
(இ) முட்டாள்கள் தினம் என்பதால் எழுப்பப்பட்டவை	35
(ஈ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் வசதி	35—36
(உ) திரு. குமரி அனந்தன் இந்திரா காங்கிரசில்சேர்ந்ததாகச்சொல்லப்படுவது குறித்து	36
(ஊ) காஞ்சி ஏகாம்பரேசுவரர்திருக்கோயில் வண்ணப் பூச்சுகளின் மீது சுண்ணாம்பு பூசுவதாகக் கூறப்படுவது குறித்து	36—37
(எ) திண்டுக்கல் நகராட்சியில் நடைபெற்ற பள்ளி திறப்பு விழாவிற்கு உறுப்பினரை அழைக்காதது	37—38
(ஏ) தகவல் கோருவதற்குப் பேரவைத் தலைவரின் முன் அனுமதி	38
3. கவன ஈர்ப்பு—	
(அ) மாதாப்பட்டணத்தில் பிற்பட்டோர் மாணவியருக்கான விடுதி துவங்க வேண்டியதன் அவசியம்	38—39

	பக்கங்கள்.
(ஆ) தஞ்சை மாவட்டம் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் ஏற்பட்டுள்ள நிலை	40—42
(இ) மறைமலை நகரிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டியதன் அவசியம்	41—43
(ஈ) திண்டுக்கல் தொகுதி, தாடிக்கொம்பு சௌந்திரராஜப் பெருமாள் கோவில் திருப்பணிகள்	43—4
(உ) புதூர் நாடு மலைவாழ் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் குறைபாடுகள்	45—48
4. அறிக்கை அளித்தல்—	
பொதுக் கணக்குக் குழு	48—49
5. அறிவிப்பு—	
1987–88 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிதல்	49
6. வரவு செலவுத் திட்டம், 1987–88 வாக்கெடுப்பு	
கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் – நிர்வாகம்	49
* மாண்புமிகு திரு. த. இராமசாமி	49—51
* திரு. எ. தெய்வநாயகம்	51—55
* திரு. மா. சின்னராசு	55—61
திரு அ. மலர்மன்னன்	61—74
திரு. ஜே. ஹேமச்சந்திரன்	75—79
* திரு. கே. சுப்பராயன்	79—84
* திரு. வி. பாலகிருஷ்ணன்	84—87
* திரு. எஸ். ஏ. ஆறுமுகம்	87—93
டாக்டர் கே. சமரசம்	93—97
திரு. என். எஸ். வி. சித்தன்	98—108
7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	120—121

தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1.	முதலமைச்சர்	மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்
2.	நிதி அமைச்சர்	மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
3.	உணவு அமைச்சர்	மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
4.	தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. க. இராசாராம்
5.	மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்
6.	கல்வி மற்றும் சட்ட அமைச்சர்	மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
7.	போக்குவரத்துத் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
8.	வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு
9.	சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன்
10.	மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்
11.	வணிக வரித்துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. த. இராமசாமி
12.	ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. எ. அருணாசலம்
13.	பொதுப் பணித் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR

THIRU SUNDAR LAL KHURANA

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1.	The Chief Minister	Hon. Dr. M. G. Ramachandran
2.	The Minister for Finance	Hon. Dr. V. R. Nedunchezhian
3.	The Minister for Food	Hon. Thiru S. Ramachandran
4.	The Minister for Industries and Agriculture	Hon. Thiru K. Rajaram
5.	The Minister for Health	Hon. Thiru P. U. Shanmugam
6.	The Minister for Education and Law	Hon. Thiru C. Ponnaiyan
7.	The Minister for Transport	Hon. Thiru S. Muthusamy
8.	The Minister for Housing and Handlooms	Hon. Thiru S. Thirunavukkarasu
9.	The Minister for Tourism, Prohibition and Electricity	Hon. V. V. Swaminathan
10.	The Minister for Noon-Meal, Social Welfare and Khadi	Hon. Thiru R. Soundarajan
11.	The Minister for Commercial Taxes	Hon. Thiru T. Ramasamy
12.	The Minister for Adi-Dravidar Welfare	Hon. Thiru A. Arunachalam
13.	The Minister for Public Works	Hon. Thiru K. K. S. S. R. Ramachandran

2965

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு

டாக்டர் கே. சமரசம்

திரு. கே. குப்புசாமி

திரு. செ. செய்யமலை

திரு. டி. ஆர். வெங்கடரமணன்

செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி

பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி.)

பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல்.	கூடுதல் செயலாளர்
பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர்
சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி.	முதுநிலைக் குழு அலுவலர்
சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல்.	துணைச் செயலாளர்
டில்லிதுரை, திரு. த.ப., பி.எஸ்ஸி., பி.எல்.	துணைச் செயலாளர்
ஜானகிராமன், திரு. செ.சு., பி.ஏ., பி.எல்.	துணைச் செயலாளர்
சீனிவாசன், திரு. கு.அ., பி.ஏ.	குழு அலுவலர்
இராமச்சந்திரன், திரு. ஆர்.கே., பி.ஏ.	சார்புச் செயலாளர்
கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., பி.எல்.	சார்புச் செயலாளர்
கேசவராம், திரு , பி.ஏ.	சார்புச் செயலாளர்
சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ.	சார்புச் செயலாளர்
சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்.	சார்புச் செயலாளர்
சுந்தரராஜன், திரு. கா.செ., பி.ஏ., பி.ஜி.எல்.	சார்புச் செயலாளர்
தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல்.	சார்புச் செயலாளர்
பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம்.	சார்புச் செயலாளர்
ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ.	சார்புச் செயலாளர்
ஜான், திரு வ.சா., பி.ஏ	சார்புச் செயலாளர்

ஜேக்கப் ஆர்தர், திரு.டி., பி.ஏ., பி.எல்.	சார்புச் செயலாளர்
ஜோசப், திரு. மா.கு., பி.ஏ.	சார்புச் செயலாளர்
வெங்கட்டராமன், திரு.கோ.,	பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்
சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ.	தலைமை நிருபர் (குழுக்கள்)
நம்பி ஐயங்கார், திரு.எஸ்.	தலைமை நிருபர் (பேரவை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	அ	
1	அண்ணாதாசன் திரு. எம்.	திருவரம்பூர்
2	அப்துல் சமத் திரு. ஆ. கா. அ.	திருவல்லிக்கேணி
3	அப்துல் மஜீத் திரு. எச்.	வாணியம்பாடி
4	அரங்கநாயகம் திரு. செ.	தொண்டாமுத்தூர்
5	அரிக்குமார் திரு. இரா.	பெரணமல்லூர்
6	அருணாசலம் திரு. இரா.	நாமக்கல் (செ.வ.)
7	அருணாசலம் திரு. எ.	வரகூர் (செ.வ.)
8	அன்பழகன் திரு. கே.	ஓமலூர்
9	அன்பழகன் திரு. தி.	நாட்ராம்பள்ளி
10	அன்பழகன் திரு. பொ.	இளையான்குடி
	ஆ	
11	ஆண்டி அம்பலம் திரு. மெ.	நத்தம்
12	ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி திரு.	ஆண்டிமடம்
13	ஆறுமுகம் திரு அ.	வந்தவாசி
14	ஆறுமுகம் திரு. எச். ஜி.	பென்னாகரம்
15	ஆறுமுகம் திரு. ஆர். எஸ்.	ஓட்டப்பிடாரம் (செ.வ.)
16	ஆறுமுகம் திரு. எ. எஸ் ஏ	விருதுநகர்
17	ஆறுமுகம் திரு. மு	சேலம்-2
18	ஆனந்த கிருஷ்ணா திரு ஜி.	பூந்தமல்லி
19	ஆனந்தன் திரு. மு.	உளுந்தூர்பேட்டை
	இ	
20	இரகுபதி திரு. கோ.	காட்பாடி
21	இரத்தினம் திரு. எம். வி.	பொள்ளாச்சி
22	இரத்தினவேலு திரு. செ.	முசிறி
23	இராசமாணிக்கம் திரு. ஆர்.	அரூர் (செ. வ.)
24	இராசமாணிக்கம் திரு. எல்ல.	தாம்பரம்
25	இராசரத்தினம் திரு. எப். எம்.	கொளச்சல்
26	இராசரத்தினம் திரு. எம்.	விழுப்புரம்

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	இ—தொடர்ச்சி.	
27	இராசாங்கம் திரு. மு.	திருவிடைமருதூர்
28	இராசாம்பாள் திருமதி த.	தலைவாசல் (செ.வ.)
29	இராசாராம் திரு. க.	பனமரத்துப்பட்டி
30	இராசாராமன் திரு. எஸ்.	பாபநாசம்
31	இராசேந்திரன் திரு. எஸ். என்.	தூத்துக்குடி
32	இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி.	ஆண்டிப்பட்டி
33	இராமச்சந்திரன் திரு. கே. எஸ். எம்.	போடிநாயக்கனூர்
34	இராமச்சந்திரன் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	சாத்தூர்
35	இராமச்சந்திரன் திரு. ச.	பண்ருட்டி
36	இராமச்சந்திரன் திரு. சோ. மா.	அண்ணா நகர்
37	இராமச்சந்திரன் திரு. ப. ந.	பட்டுக்கோட்டை
38	இராமசாமி திரு. எஸ். என்.	சாத்தான்குளம்
39	இராமசாமி திரு. த.	இராமநாதபுரம்
40	இராமலிங்கம் டாக்டர் கே. பி.	ராசிபுரம்
41	இளங்கோவன் திரு. ஈ. வே. கி. ச.	சத்தியமங்கலம்
	ஈ	
42	ஈஸ்வரன் திரு. ஆர்.	வாசுதேவநல்லூர் (செ.வ.)
	உ	
43	உச்சி திரு. கே.	கூடலூர்
44	உத்திராபதி திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
	எ	
45	எத்திராசன் திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ. வ.)
	க	
46	கணபதி திரு. கே. ஆர்	சிதம்பரம்
47	கதிர்வேலு திரு. மா	ராணிப்பேட்டை
48	கந்தசாமி திரு. கா. சே.	கிணத்துக்கடவு
49	கந்தசாமி திரு. பி.	பொங்கலூர்

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	க—தொடர்ச்சி.	
50	கல்லன் திரு. கே.	உதகமண்டலம்
51	கலிதீர்த்தான் திரு. சோ.	சங்கராபுரம்
52	காளிமுத்து டாக்டர் கா.	மதுரை கிழக்கு
53	கிருஷ்ணசாமி திரு. கே. ஏ.	ஆயிரம் விளக்கு
54	கிருஷ்ணசாமி திரு. வி. இரா.	அணைக்கட்டு
55	கிருஷ்ணமூர்த்தி திரு. வி.	கும்பகோணம்
56	கிருஷ்ணராஜ் திரு. ஜி.	சேலம்-1
57	குப்புசாமி திரு. கே.	ஒட்டன்சத்திரம்
58	குப்புசாமி திரு. வே.	செய்யாறு
59	குமர குருபர ராமநாதன் திரு. ச.	விளாத்திகுளம்
60	குமரி அனந்தன் திரு.	ராதாபுரம்
61	குமாரதாஸ் டாக்டர் தே.	கிள்ளியூர்
62	கோமதி சீனிவாசன் திருமதி	வலங்கையான் (செ.வ.)
63	கோவிந்தசாமி திரு. ஆர்.	குடியாத்தம்
64	கோவிந்தசாமி திரு. ச.	எடப்பாடி
65	கோவேந்தன் திரு. எம். ஆர்.	பேராவூரணி
	ச	
66	சங்கரலிங்கம் திரு. ச.	சங்கரநாயனார் கோவில் (செ.வ.)
67	சண்முகம் திரு. இரா.	திருத்தணி
68	சண்முகம் திரு. என்.	சோளிங்கர்
69	சண்முகம் திரு. ப. உ.	மேல்மலையனூர்
70	சண்முகையா பாண்டியன் திரு. எம்.	ஆலங்குளம்
71	சந்திரசேகரன் திரு. ஆ.	சோழவந்தான்
72	சந்திரசேகர் திரு. மு.	முகையூர்
73	சம்சுல் ஆலம் திரு. வி. எஸ். டி.	பாளையங்கோட்டை
74	சமரசம் டாக்டர் தே.	காவேரிப்பட்டினம்
75	சரோஜா திருமதி இரா.	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
76	சாமிக்கண்ணு திரு. தா.	செங்கம் (செ.வ.)
77	சித்தன் திரு. என். எஸ். வி.	தி மங்கலம்
78	சிந்தன் திரு. வி. பி.	வில்லிவாக்கம்
79	சிவக்குமார் திரு. ஆ.	சமயநல்லூர் (செ. வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	ச—தொடர்ச்சி.	
80	சிவக்குமார் திரு. எம்.	கூனூர் (செ.வ.)
81	சிவஞானம் திரு. ந.	திருவோணம்
82	சிவப்பிரகாசம் திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ வா)
83	சிவராமன் திரு. எஸ்.	சின்னசேலம்
84	சிவராஜ் திரு. சு.	ரிஷிவந்தியம்
85	சின்னக்குழந்தை திரு. மு.	ஆரணி
86	சின்னசாமி திரு. வே. கு.	பவானிசாகர்
87	சின்னராசு திரு. க. இரா.	கிருஷ்ணகிரி
88	சின்னராசு திரு. மா.	மேட்டுப்பாளையம்
89	சுந்தரதாஸ் திரு. மா.	விளவன்கோடு
90	சுப்பராயன் திரு. கு.	திருப்பூர்
91	சுப்பிரமணிய ஆதித்தன் திரு. எஸ். ஆர்.	திருச்செந்தூர்
92	சுப்பிரமணியன் திரு. உ.	சிவகங்கை
93	சுப்பிரமணியன் திரு. வீ.	கண்டமங்கலம் (செ.வ.)
94	சுப்புராயர் திரு. சி.	கம்பம்
95	சுவாமிநாதன் திரு. வி. வி.	புவனகிரி
96	செங்காளியப்பன் திரு. ஆர்.	சிங்காநல்லூர்
97	செங்கோட்டையன் திரு. கு. அ.	கோபிச்செட்டிபாளையம்
98	செங்கோட்டையன் திரு. பெ.	கபிலர்மலை
99	செம்மலை திரு. செ.	தாரமங்கலம்
100	செல்லமுத்து திரு. எம்.	திருவாரூர் (செ. வ.)
101	செல்லப்பா திரு. வி. கோ.	கடலூர்
102	சேகர் திரு. கே. பி. கே.	பொன்னேரி (செ.வ.)
103	சொர்ணலிங்கம் திரு. கா.	திருவாடானை
104	சோலைராசு திரு. க.	மருங்காபுரி
105	சௌந்திரராஜன் திரு. ஆர்.	ஸ்ரீரங்கம்
106	சௌரிராஜன் டாக்டர் கே.	தியாகராயநகர்
	ஞா	
107	ஞானசுந்தரம் திரு. சா.	மன்னார்குடி
	ட	
108	டேனியல்ராஜ் திரு. எஸ்.	ஸ்ரீ வைகுண்டம்

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	த	
109	தங்கமணி திரு. மு.	மாயூரம்
110	தங்கமணி திரு. கே. எம்.	திண்டிவனம்
111	தங்கராசு திரு. ஏ.	குறிஞ்சிப்பாடி
112	தங்கராசு திரு. செ.	மங்களூர் (செ. வ.)
113	தங்கவேல்ராஜ் திரு. பி. எம்.	கிருஷ்ணராயபுரம் (செ. வ.)
114	தங்கவேலு திரு. வி.	வால்பாறை (செ. வ.)
115	தமிழ்மணி திரு.	திருப்போரூர் (செ. வ.)
116	தமிழரசன் திரு. கு.	பேரணாம்பட்டு (செ.வ.)
117	தனபால் திரு. ப.	சங்கரி (செ. வ.)
118	தாமரைக்கனி திரு. இரா.	ஸ்ரீவில்லிபுத்தூர்
119	தியாகராசன் திரு. ஆர்.	விருத்தாசலம்
120	திருஞானம் திரு. பி. ஆர்.	ஏற்காடு (ஆ. வா.)
121	திருநாவுக்கரசு திரு. எஸ்.	அறந்தாங்கி
122	திருமலைசாமிக் கவுண்டர் திரு. சு.	உடுமலைப்பேட்டை
123	தீர்த்தகிரி கவுண்டர் திரு. டி.	மொரப்பூர்
124	தீர்த்தராமன் திரு. ப.	பாலக்கோடு
125	துரை அன்பரசன் திரு.	நெல்லிக்குப்பம்
126	துரை கிருஷ்ணமூர்த்தி திரு.	தஞ்சாவூர்
127	துரை கோவிந்தராசன் திரு.	திருவையாறு
128	துரைசாமி திரு. சைதை சா.	சைதாப்பேட்டை
129	துரைராசு திரு. எஸ். பி.	கீரைக்குடி
130	துரை ராமசாமி திரு.	வெள்ளக்கோவில்
131	தெய்வநாயகம் திரு. எ.	மதுரை சென்ட்ரல்
132	தேவராஜ் திரு. வி. எம்.	வேலூர்
	ந	
133	நடராசன் திரு. ஆ.	பேரூர்
134	நரசிம்ம பல்லவன் திரு. க.	உத்திரமேரூர்
135	நரசிம்மன் திரு. பூ. மு	பள்ளிப்பட்டு
136	நல்லமுத்து டாக்டர் க.	பெரம்பலூர் (செ. வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	ந—தொடர்ச்சி	
137	நல்லுசாமி திரு. எஸ்.	திருச்சிராப்பள்ளி-2
138	நாச்சிமுத்து திரு. கே. பி.	கோட்டூர்
139	நாராயணன் திரு. பு. கோ.	பவானி
140	நெடுஞ்செழியன் டாக்டர் இரா.	ஆத்தூர்
	ப	
141	பஞ்சவர்ணம் திரு. வி. எஸ்.	அருப்புக்கோட்டை
142	பட்டாபிராமன் திரு. செ.	திருவள்ளூர்
143	பரமசிவம் திரு. பா. ந.	பல்லடம்
144	பழனி திரு. ந.	ஆற்காடு
145	பழனிச்சாமி திரு. கா. செ.	காங்கேயம்
146	பழனிமுத்து திரு. கே. சி.	[illegible]ர்
147	பாண்டியன் திரு. பி. எச்.	சேரன்மாதேவி
148	பாண்டுரங்கன் திரு. மு.	கடசப்பாக்கம்
149	பாப்பா சுப்பிரமணியன் திரு.	குத்தாலம்
150	பாரதி திரு. ஜி. கே. ஜெ	திருவொற்றியூர்
151	பாரமலை திரு. க.	மானாமதுரை (செ. வ.)
152	பாலகிருஷ்ணன் திரு. ச.	மொடக்குறிச்சி
153	பாலகிருஷ்ணன் திரு. வி.	சிவகாசி
154	பாலசந்திரன் திரு. வை.	பத்மநாபபுரம்
155	பாலசுப்பிரமணியன் திரு. க.	சீர்காழி (செ. வ.)
156	பாலசுப்பிரமணியன் திரு. எஸ்.	அம்பாசமுத்திரம்
157	பாலசுப்பிரமணியன் திரு. வேடசந்தூர் வி. பி.	வேடசந்தூர்
158	பாலாஜி திரு. கே.	காஞ்சிபுரம்
159	பாலுச்சாமி திரு. ஏ.	பரமக்குடி (செ.வ.)
160	பாலுசாமி திரு. அ.	நிலக்கோட்டை (செ. வ.)
161	பிரணவநாதன் திரு. அ.	கடலாடி
162	பிரேம்குமார் திரு. ஆ.	திண்டுக்கல்
163	புருஷோத்தமன் திரு. எஸ்.	அரியலூர்
164	புஷ்பராசு திரு. த.	திருமயம்
165	பெரியசாமி திரு. அ.	தாராபுரம் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	ப—தொடர்ச்சி	
166	பெரியசாமி திரு. ரா.	தொட்டியம்
167	பெருமாள் திரு. தெ.	கடையநல்லூர்
168	பெருமாள் பிள்ளை திரு. கோ.	கன்னியாகுமரி
169	பொன் முத்துராமலிங்கம் திரு.	மதுரை (மேற்கு)
170	பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ்.	பழனி (செ. வ.)
171	பொன்னுசாமி டாக்டர் அ.	பெருந்துறை
172	பொன்னையன் திரு. சி.	திருச்செங்கோடு
	ம	
173	மணவாளன் திரு. எஸ். பி.	திருப்பத்தூர்
174	மணிமாறன் திரு. மா.	நன்னிலம் (செ.வ.)
175	மலர்மன்னன் திரு. அ.	திருச்சிராப்பள்ளி—1
176	மனோகரன் திரு. கி.	புரசைவாக்கம்
177	மனோகரன் திரு. தி. நா. கோ. அ.	திருநாவலூர்
178	மாசிலாமணி டாக்டர் ந.	ஜெயங்கொண்டான்
179	மாதவன் திரு. செ.	திருப்பத்தூர்
180	மாதையன் திரு. பு. பி.	அந்தியூர் (செ.வ.)
181	மாரிமுத்து திரு. த.	குளத்தூர் (செ.வ.)
182	மாரிமுத்து திரு. மு.	திருப்பரங்குன்றம்
183	மீனாட்சிசுந்தரம் திரு. மா.	வேதாரண்யம்
184	முகம்மது கனி திரு. ஜே.	புதுக்கோட்டை
185	முகம்மது சலீம் டாக்டர் த.	பெரியகுளம்
186	முசிறிபுத்தன் திரு. பி.	குளித்தலை
187	முத்துசாமி திரு. சு.	ஈரோடு
188	முத்துராமலிங்கம் திரு. பி. கே. எம்.	உசிலம்பட்டி
189	முத்துவேல் திரு. கே.	முதுகுளத்தூர்
190	முத்தையா திரு. இரா.	சேடப்பட்டி
191	முருகானந்தம் திரு. டி. என்.	செஞ்சி
192	முனிரத்தினம் திரு இரா. சா.	கும்மிடிப்பூண்டி

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
	ய	
193	யசோதா திருமதி டி.	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.
	ர	
194	ரகுமான்கான் திரு. அ.	சேப்பாக்கம்
195	ரமணி திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு
196	ரவீந்திரன் திரு. ஏ. எஸ்.	திருவண்ணாமலை
197	ராமஜெயம் திரு. ம. நா.	வானூர் (செ.வ.)
198	ராமன் திரு. கி.	ராஜபாளையம் (செ.வ.)
199	ராஜாபாபு திரு. ஜெ.	போளூர்
200	ரெங்கசாமி திரு. ஆர்.	கோவில்பட்டி
201	ரெத்தினராஜ் திரு. எஸ்.	நாகர்கோவில்
	ல	
202	லட்சுமி திருமதி பி.	அவினாசி (செ.வ.)
	வ	
203	வடிவேல் திரு. கு.	கரூர்
204	வளர்மதி திருமதி பா.	மயிலாப்பூர்
205	விஜயபாலன் திரு. என்.	பூம்புகார்
206	விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி	வீரபாண்டி
207	வீரானம்பலம் திரு. க. வெ.	மேலூர்
208	வீரய்யன் திரு. கோ.	நாகப்பட்டினம்
209	வீரப்பன் திரு. ஆர். எம்.	திருநெல்வேலி
210	வீராசாமி திரு. தா.	ஒரத்தநாடு
211	வெங்கடரெட்டி திரு. டி.	ஒசூர்
212	வெங்கடாசலம் திரு. அ.	ஆலங்குடி
213	வெங்கடாசலம் திரு. கி.	லால்குடி
214	வெங்கடாசலம் திரு. டி. எம்.	பரகூர்
215	வெங்கடரமணன் திரு. டி. ஆர்.	தென்காசி
216	வேணுகோபால் திரு. எஸ்.	டாக்டர் இரா[illegible] நகர்
217	வேணுகோபால் திரு. கே. வி.	தல்லி
218	வேலு திரு. கூடலூர் இ. வி.	தண்டராம்பட்டு

தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1)		தொகுதியின் பெயர் (2)
	ஜ	
219	ஜகதீசன் திரு. ஆனூர் பு.கோ.	செங்கல்பட்டு
220	ஜான் வின்செண்ட் திரு. மு.	நாங்குநேரி
221	ஜெகதீசன் திரு. சு.	அரவக்குறிச்சி
222	ஜெயச்சந்திரன் திரு. சா.	காட்டுமன்னார் கோவில் (செ.ஒ.)
223	ஜெயராமன் திரு. வே. இரா.	தேனி
	ஹ	
224	ஹேமச்சந்திரன் திரு. ஜே.	திருவட்டாறு
225	பிரான்சிஸ் திரு. ஜி. கே.	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி ... அரசு தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, ஏப்ரல் 1, புதன்கிழமை

பங்குனி 18, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பருவத்தொடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.''

காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல், நில்லாத இயல்புடைய செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு பயிற்சி நிலையம்

231—(*வினா எண். 8798) **திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நெல்லிக்குப்பத்தில் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நெல்லிக்குப்பத்தில் புதிய கூட்டுறவுப்பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

பெரியார் மாவட்டம் சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

232—(*வினா எண். 10153) **திரு. கா. செ. பழனிச்சாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலையில் ஏராளமான கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களும், கைத்தறியை நம்பி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே, புதிய பயிற்சிக் கல்லூரியை அப்பகுதியில் ஆரம்பிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஈரோட்டில் ஒரு ஒருங்கிணைந்த கூட்டுறவுப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. அதைத் தவிர, கோவையில் ஏற்கனவே ஒரு பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது, தனியாக சென்னிமலைக்கு ஒன்று தேவையில்லை.

தீ பிடித்து சேதமான வீடுகளுக்கு அளிக்கப்படும் தொகை.

253—(*வினா எண். 11604) திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இயற்கையால் தீ பிடித்து வீடுகள் சேதமானால் தற்போது வழங்கப்படும் தொகையை அதிகரித்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான செயற்குறிப்பு இப்போது அரசின் ஆய்வில் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கிறபொழுது இப்பொழுது பரிசீலனையில் இல்லையென்று சொன்னார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில், குறிப்பாக, சென்னை மாநகரத்தில், வெயில் காலங்களில், திடீர், திடீரென்று தீ விபத்தால் இலட்சக்கணக்கான குடிசைகள் சேதம் ஆகிவிடுகின்றன. இன்றைக்கிருக்கக் கூடிய விலைவாசிகளைப் பொறுத்தவரைக்கும் 100 கீத்து ரூ. 100-க்கு விற்கிறது; ஒரு மூங்கில் ரூ 20-க்கு விற்கிறது; 100 பாளைகள் ரூ. 15-க்கு விற்கிறது; கயிறு ஒரு கிலோ ரூ. 15-க்கு விற்கிறது. அதற்குக் கொடுக்கிற ரேட்டையும் விலைவாசியையும் பார்க்கும்போது, எரிந்த பிறகு வீடு கட்ட முடியாத நிலைமைதான் இருக்கின்றது. ஆகவே, இப்பொழுது இருக்கிற ரேட் எவ்வளவு? எதிர்காலத்தில், அத்தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு, அவ்வப்போது, இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, ஓரளவுக்குத் தொகை உயர்த்திக் கொடுக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. ரூ. 30-ஆக

இருந்தது. ரூ. 60, ரூ. 80, ரூ. 100, ரூ. 150, ரூ. 200 என்று ஆகி, இப்பொழுது ரூ. 300 என்று உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆனாலுங்கூட, அதை மீண்டும் ஓரளவுக்கு உயர்த்த வேண்டுமென்று சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும் வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரும் வருவாய்த் துறை சிறப்பு ஆணையருக்கு எழுதியிருக்கிறார்கள். வருவாய்த் துறை சிறப்பு ஆணையர் அரசுக்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார். அரசுக்கு வந்த பிறகு, அரசு அதுபற்றி ஆய்வு செய்யும். ஆனால், ஒருவருக்கு ஏற்பட்ட நஷ்டம் அத்தனையையும் ஈடுகட்டுகின்ற அளவுக்கு நிவாரணம் அளிப்பது என்பது இயலாத ஒன்று. உடனடியாக அவர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்கு ஓரளவுக்குத்தான் நாம் தீ விபத்து, வெள்ள விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை அளிப்பதும், 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் தருவதும், புடவை, வேட்டி ஆகியவை தருவதுமாக வைத்திருக்கிறோமே தவிர, அவர்களுக்கு ஏற்படுகிற நட்டஈடு முழுவதையும் சமாளிப்பது என்பது இயலாத ஒன்றாகத்தான் அமையும். ஆனால், இப்பொழுது இருக்கிற தொகையை ஓரளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கருத்து சில மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலிருந்து வருவாய்த் துறை சிறப்பு ஆணையருக்கு வந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசுக்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே கொஞ்சம் கூடுதலாகக் கொடுப்பது பற்றிப் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். அதே நேரத்திலே இந்த மாதிரிக் குடிசைகள் எரிந்ததற்குப் பிறகு இன்றைக்கு கொடுக்கப்படுகிற 300 ரூபாயோடு 200 ரூபாய் சேர்த்து 500 ரூபாயாகக் கொடுத்தாலும்கூட முழுமையாக அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்ளமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த அடிப்படையில் 500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து அதோடு வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு தேவைப்படும் பற்றாக்குறைக்கு உடனடியாகப் பக்கத்திலே உள்ள பாங்க் மூலமாகவோ அல்லது எந்த வழியாகவோ ஏற்பாடு செய்து வட்டியில்லாத கடன்களை வழங்குவதன் மூலம் அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்குமா? அது மட்டுமல்ல, இப்படி தீ விபத்துக்கள் ஏற்படுகிறபோது சிறு கடைகளும் எரிந்து விடுகின்றன. அதனால் சிறு வியாபாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள். சில பேர்களுக்கு 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய்கூட நட்டம் ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் அவர்களுக்கு அதற்காக அரசாங்கம் நட்ட ஈடு கொடுப்பது கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம் ரூபாய் அவர்கள் கேட்கக்கூடிய அளவுக்கு—கடனாகப் பெறுவதற்கு ஏற்பாடு செய்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அந்த மக்களை வாழவைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலபல இடங்களில் தீயிற்கு இரையாகியோ அல்லது வேறு பல வகைகளிலோ கஷ்டப்பட்டு வீட்டைப் புதுப்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறபோது அவர்களுடைய நிலைமை ஆராய்ந்து அறிந்து கடன் உதவிகள் வழங்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆனால், அவர்களுடைய நிலைமையைப் பொறுத்தும் திருப்பிக் கட்டுகிற வாய்ப்பு, வசதி, திறன் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. தீ விபத்து ஏற்பட்ட இடங்கள் புறம்போக்கு நிலமாகவோ தனியாருக்குச் சொந்தமான நிலமாகவோ இருக்கிறபோது அதே இடத்தில் வீட்டைத் திருப்பிக் கட்டமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறபோது மாற்று இடங்கள் தேட வேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது அப்படிப்பட்ட கடன் வசதிகள் செய்யமுடியாத நிலையும் பேங்குகள் அதற்கு முன் வராத நிலையும் ஏற்பட்டு விடுகின்றன. இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன. ஆனால், சிலபல இடங்களில் அப்படிப்பட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆங்காங்கு ஏற்படுகிற சூழ்நிலையைப் பொறுத்தும் அவரவர்களுடைய நிலைமைகளைப் பொறுத்தும் அந்தக் கடன் உதவிகள் அளிக்கப்படுகின்றன.

டாக்டர் கெ. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையால் தீப்பிடித்துவிட்டு சேதம் ஏற்பட்டால் நாம் உதவித் தொகை வழங்குவது மனிதாபிமானம் ஆகும். ஆனால், சோஷல் பிசினஸ் என்ற முறையில் நகரங்களில் சமூக விரோதிகள் பல்வேறு நேரங்களிலே அதுபோன்ற நிலையை உருவாக்கி 30 வீடுகள் 40 வீடுகள் எரிந்தன என்று சொல்லப்படுகிறது. ஆனால், உயிர்ச் சேதம் இல்லை என்று சொல்லப்படுகிறது. சமூக விரோதிகள் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வீடுகளை நாசமாக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அதுபற்றிய புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா? அவைமீது எடுத்த நடவடிக்கை என்ன? இல்லையென்றால், சமூக விரோதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஏதாவது சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் குறிப்பிட்டு எந்தப் புகாரும் வந்ததாகக் கூறுவதற்கு இல்லை. ஆனாலும் சில நேரங்களிலே அப்படி சூழ்நிலை ஏற்படுவதாக சில பகுதிகளிலிருந்து புகார்கள் வருகின்றன. சில இடங்களில் அறியாமையின் காரணமாக இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றன. சில இடங்களில் தெரியாத்தனமாக தீப்பற்றும் என்ற தன்மையை உணராத தன்மையின் காரணமாக தீ பரவுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. முழு அளவுக்கு அவர்களுக்கு நாம் நட்ட ஈடு கொடுக்கிற நிலைமை ஏற்பட்டு விடுமேயானால், அந்தப்

பகுதியிலே இருப்பவர்களே தீ வைக்கவும் ஆரம்பித்துவிடுவார்கள். ஏனென்றால், முழுவதையும் அரசாங்கம் செய்யத் தயாராக இருக்கும்போது அந்தப் பகுதியை நிலைத்து, கொளுத்தி தீக்கிரையாக்கி விடுவோமேயானால் முழு வாய்ப்பும் கிடைக்கும். வீடுகளைப் புதுப்பிக்கவும், கூரைகளைப் புதுப்பிக்கவும் முடியும் என்ற எண்ணம்கூட வந்துவிடக் கூடும். ஆகவே, அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படும் என்பதன் காரணமாக அத்தகைய இடங்களில் ஆங்காங்கு இருக்கிற சூழ்நிலையை ஒட்டித்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இப்போது அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசிற்கு வரவில்லை.

திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையால் தீப்பிடித்து சேதம் அடையும் வீடுகளுக்கு அவ்வப்போது விலைவாசியேற்றத்தை ஒப்பிட்டுப் பார்த்து ஆண்டுக்காண்டு தொகையைக் கூட்டிக்கொண்டே வருகிறோம். இந்த நிலையிலே சென்னையிலே மட்டுமாகிலும் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படுமா? அது மட்டுமல்லாமல், எரியாத வீடுகளைக் கட்ட மாஸ்டர் பிளான் போட்டு படிப்படியாக சென்னையிலே மட்டுமாகிலும் கட்டுகிற திட்டம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பிடிக்காத கற்களால், ஆன வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற முயற்சி ஒருபக்கம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. மற்றொரு பக்கம் குடிசைகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு 400 குடிசைவாழ் பகுதிகள்தான் சென்னையிலே இருந்தன. இப்போது ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேல் குடிசை வாழ்ப் பகுதிகள் வளர்ந்து இருக்கின்றன. அந்த அளவையில் வெளி மாவட்டங்களிலிருந்து ஏராளமானவர்கள் பிழைப்புத் தேடி, வேறு வகைகளிலே இங்கு வந்து குடியேறுகிறபோது, அவர்கள் குடிசை போடுகிற அளவுக்கும் நிலை ஏற்படுகிறது. சிலபல இடங்களில் நாம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தாலும் அவர்கள் வருமானம் கருதி அவர்களுக்குத் தரப்பட்ட வீடுகளை வாடகைக்கு விட்டுவிட்டு மறுபடியும் குடிசைக்கே வந்து சேருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் குடிசைகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. ஒரு பக்கம் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டுகிற முயற்சியும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. மற்றொரு பக்கம் வறுமையின் காரணமாக, ஏழ்மையின் காரணமாக வேலை தேடுகின்ற நிலைமை காரணமாக குடிசைப் பகுதிகளும் வளர்ந்துகொண்டே வருகின்றன.

(முற்பகல் 10-10)

திரு. ந. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரிசி, சேலை, மண்ணெண்ணெய், வேட்டி கொடுக்கின்றபொழுது சில இடங்களிலே

கொடுப்பதில்லை. பணம் கொடுக்கின்றபொழுது, கையெழுத்து வாங்குகின்ற நிலையிலே, அதையும் சேர்த்து, கையெழுத்து வாங்கிக் கொண்டு அந்தக் கொடுக்காத நிலை இன்றும் இருக் கிறது. அதைப் போக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையிலோ அல்லது வருவாய்த்துறை அதிகாரி முன்னிலை யிலோ அந்தப் பொருள்களை ஒரே நேரத்தில் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால் உரிய மேலதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே ஒரு சிறு பகுதியிலே அப்படிப் பட்ட விபத்துக்கள் ஏற்படுமானால் உயர்மட்ட அதிகாரிகள் வந்து தங்கியிருந்து அந்தப் பணியைச் செய்யலாம். பெரிய அளவில் வெள்ளங்கள் ஏற்படுகின்றபொழுது, சென்னையில் ஏற்படுகின்றபொழுது, நாலா பக்கங்களிலும் அந்தப் பணிகளைச் செய்யும்போது, மாவட்ட ஆட்சித் தலைவரோ, வருவாய்த்துறை அதிகாரியோ எல்லா இடங்களுக்கும் போய்ச் செய்ய இயலாது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று கையெழுத்தையும் வாங்கிக் கொண்டு, வேட்டியும், புடவையும் மற்றவையும் தராத தன்மையில் எந்த அலுவலராவது நடந்து கொள்வாரேயானால் அவர்கள் பெயரையும் குறிப்பிட்டு, மற்ற வகைகளில் புகார் செய்வார்களானால், உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படலாம். வெள்ளச் சேத காலத்தில் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் தடுத்த கிட்டத்தட்ட 100-க்கு மேலானவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, அவர்களைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கியிருக்கிறோம். சில பேர் களை வேலையிலிருந்துகூட நீக்கியிருக்கிறோம். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தால் பாதிக்கப்படுகின்ற குடிசை களுக்காக ஒரு கதவு இலக்கத்தில் 10 குடிசைகள் இருந்தால், வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகை ரூ. 300-ஐப் பங்கிட்டு, ரூ. 30-ஆகத் தருகின்றார்கள். ஆகவே, அந்த முறையை மாற்றி, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையைக் கொண்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அந்தத் தொகையை வழங்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சாதகமாக இருக்கும். எனவே, அந்த முறையிலே நடவடிக்கை எடுக்கப் படுமா ?

அடுத்து, எல்லா குடிசைகளையும் இன்ஷூர் செய்ய வேண்டு மென்று கட்டாய நடவடிக்கையை மேற்சொண்டால் அவர் களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். அந்த முறையிலே நடவடிக் கைகள் எடுக்கப்படுமா ?

அடுத்து, திரு. பொ. உத்திராபதி அவர்கள் கேட்டதைப் போல், வங்கிகளின் வாயிலாகக் கடன் உதவி வழங்க வேண்டு மென்று அரசே ஜீ.ஓ.-வாகப் போட்டு, எல்லா தாசில்தார்கள் அலுவலகங்களிலும் பாதிக்கப்பட்டவர்களின் கணக்கெடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும்போது அவர்களது குறிப்புகளை வங்கிகளுக்கு அனுப்பிக் கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, குடிசைகளைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியுமே தவிர, குடும்பங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கில்லை. முழு குடிசையும் எரிந்து விடுமானால் அதற்கு ரூ 300 தருகிறோம். அதில் ஒரு குடும்பத்திற்குப் பதிலாக, 2 குடும்பங்கள் இருக்கிறோம் என்று சொல்லும்போது, பாதியாகக் கொடுக்கிறோம். அந்த குடிசைக்குள்ளேயே 4 குடும்பங்கள் இருக்கின்றன என்று 4 பேர்கள் போட்டி போட்டுக்கொண்டு வரும் போது, நான்காகப் பிரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று எந்த ஒரு கதவு இலக்கத் திலும் 10 குடிசைகள் இருப்பதாகத் தெரியவில்லை. அது 'எச்ஸாஜரேஷன்'. கற்பனையினுடைய உச்ச கட்டத்திற்குப் போயிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்து, குடிசைகளை இன்ஷூர் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். குடிசைகளைப் பொறுத்தவரையிலும் இன்ஷூர் செய்வதற்கு எந்த இன்ஷூரன்ஸ் கம்பெனியும் முன் வரவே வராது. அப்படியே வந்தால்கூட இன்ஷூரன்ஸ் கட்டணத்தை அம்மக்கள்தான் செலுத்தி வரவேண்டும். அது அவ்வளவு சாத்திய மாக வராது. கல் கட்டிடமாக இருந்தால் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் இன்ஷூரன்ஸ் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசைகள் எல்லாம் கிராமப்புறத்திலே அதிகமாக எரிந்து விடுகின்றன. அவற்றிலே வசதி படைத்தவர் களும் இருக்கிறார்கள், வசதியற்றவர்களும் இருக்கிறார்கள். இப்பொழுது புரட்சித் தலைவர் ஆட்சியிலே இலவசமாக வீடு கட்டுகிற திட்டம் நாட்டிலே நடைபெறுகிற இந்த நேரத்தில், வசதியற்றவர் எந்த இனத்தவர் என்று பார்க்காமல், வசதியற்றவர் குடிசை எரிந்து விட்டால், அவருக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஏழை எளியவர்களாக இருப்பவர்களுக்கு, குறிப்பாக ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள்,

பழங்குடி மக்கள் ஆகியோருக்கு இலவச வீட்டுமனைகள், இலவச வீடுகள் கட்டித் தருகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அது மட்டுமல்லாமல், மீனவப் பெருங்குடி மக்களிலும் ஏழை எளியவர்களாக இருப்பவர்களுக்கும் அந்தப் பணிகள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. ஆகவே, ஏழை எளியவர்களாகவும், வசதி யற்றவர்களாகவும் நலிந்தவர்களாகவும் இருப்பவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. வசதி உள்ளவர்களுக்கு அந்த வாய்ப்புகள் அளிக்கப்படுவதில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைநாயகர் அவர்களே, 'கெட்டும் பட்டணம் போ' என்பார்கள். இல்லை, இல்லை 'கிட்டினால் பட்டணம் போ' என்று சொல்லும் வாய்ப்பு இப்போது இருக்கிறது. இப்போது புதிதாக சென்னைக்கு வருகிறவர்கள் குடிசைகள் புதியதாகக் கட்டுகிறார்கள். இப்படி குடிசைகள் கட்டப்படுகின்றபோதே அந்தந்த பகுதிகளில் இருக்கின்ற அதிகாரிகள் மூலம் அவற்றை அகற்றுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? தனியார் சிலர் குடிசைகள் கட்டு கிறார்கள். சில தீய சக்திகள், தனியார்கள், செல்வாக்கு உள்ளவர்கள் குடிசைகளை தீக்கு இரையாக்கி அந்த இடத்தை கையகப்படுத்துகின்ற நிலைமை இருக்கிறதே, அத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, மாநகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் சரி, அரசுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் சரி, நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து குடிசைகளைக் கட்டினால் அவ்வப்போது அவற்றை அகற்ற வேண்டும், அகற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று ஆணைகள் இருக்கின்றன. சிலபல இடங்களில் அகற்றியும் வருகிறார்கள். பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடங்களிலும், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களிலும் இவ்வாறு அகற்று கிறார்கள். சிலபல இடங்களில் அசட்டை காரணமாக அகற்றப் படாமல் குடிசைகள் போட்டுவிடுகிறார்கள்.

சென்னையைப் பொறுத்தவரையில் சாலை ஓரங்களில் கூட குடிசைகள் போடுகிறார்கள். இவ்வாறு குடிசைகளைப் போடுவது வழக்கமாக இருக்கிறது. அதைத் தடுக்க ஸ்குவாட் ஒன்றைத் தனியாக அமைத்து, சென்னையை 6,7 பிரிவாகப் பிரித்து தனி யாக போலீஸ், வேன் எல்லாம் கொடுத்து அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் ரோந்து வந்தால், அதன்மூலம் குடிசைகளை எங்கே கட்டினாலும், கட்டிக்கொண்டிருக்கும்போதே உடனேயே அகற்று வதற்கான, பறிமுதல் செய்வதற்கான அதிகாரத்தையும் தந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் உடனுக்குடன் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்கும் வகையில் தடுக்க முடியும். அதற்கென தனியாகதான் முயற்சி எடுக்க வேண்டும்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தால், வெள்ளத்தால் குடிசைகளுக்கு சேதம் ஏற்படுகின்றபோது பணமும், பொருளும் கொடுக்கப்படுவதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு புடவை வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் 2,3 பேர் இருப்பதோடு குழந்தைகளும் தங்கள் துணி மணிகளை இழந்துவிடுவதால் குடும்பத்தில் உள்ள அத்தனை பேருக்கும் தலா ஓர் உடை கொடுப்பது பற்றி அரசு பரிசீலித்து ஆணையிடுமா? மேலும் 300 ரூபாய் என்பது இரண்டு ஆண்டு களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. அதனை மறுபரிசீலனை செய்து 500 ரூபாய் வழங்க இந்த அரசு ஆணையிட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டேன். வருவாய் துறை சிறப்பு ஆணையர் இதுபற்றிய விவரம் தர இருக்கிறார்கள். அது வந்தால் பரிசீலிப்பதாக எடுத்துச்சொல்லி யிருக்கிறேன். ஒரு குடும்பத்தைச் சார்ந்த அத்தனை பேருக்கும் வேட்டி, புடவை வழங்குவது மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கும் சேர்த்து வழங்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது கனிவாக பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறும்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வேட்டி, ஒரு சேலை என்று சொன்னார்கள். ஆனால் ஒரே குடிசையில் பல குடும்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் பல நபர்கள் இருக்கின்ற காரணத்தினால் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு வேட்டியும், சேலையும் கொடுக்கப்படுமா என்பதோடு பெரியவர் என்று வயது பார்க்காமல் துணி மணிகளை இழந்துவிட்ட சிறுவர் களுக்கும் அதனை கொடுக்கக்கூடிய வகையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, குடிசைக்கு ஒரு வேட்டி, ஒரு புடவை என்று நான் கூறவில்லை. ஒரு குடிசையில் ஒன்றிரண்டு குடும்பங்கள் இருந்தால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வேட்டி, ஒரு சேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். வயது முதிர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. அதுபோல் வயது [illegible] அத்தனை பேர்களுக்கும் அது உண்டு.

[1987 ஏப்ரல் 1

பட்டுக்கோட்டை அரசினர் பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு.

234—(*வினா எண் 3894) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அரசினர் பொது மருத்துவமனையில் (Intensive Coronary Care Unit) தீவிர சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையை சுற்றியுள்ள பேராவூரணி, முத்துப்பேட்டை, திருவோணம் ஆகிய ஊர்களிலுள்ள மக்கள் ஹார்ட் அட்டாக் போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெற வேண்டுமானால் உடனடியாக 80 கிலோ மீட்டர் தூரமுள்ள தஞ்சை மாவட்ட மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. இதய நோய்க்காரர்களைப் பொறுத்தவரையில் அந்த நோய் கண்ட உடன் காரிலோ வேனிலே இவ்வளவு தொலைவுக்கு அவர்களை அழைத்துச் செல்வது அந்த நோயாளிகளுக்கு உகந்ததல்ல. உடனடியாக மரணம் சம்பவித்து விடுகிறது. ஆகவே, பட்டுக்கோட்டையை மையமாகக் கொண்டு, பேராவூரணி, முத்துப்பேட்டை, திருவோணம், ஒரத்தநாடு ஆகிய பகுதி மக்கள் சிகிச்சை பெறுகின்ற வகையில் வருகின்ற நிதியாண்டிலேயாவது அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து ஒரு இன்டென்சிவ் கேர் யூனிட்டை ஆரம்பிக்க உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரத்திலே இருக்கின்ற மருத்துவமனைகளிலே முதலிலே துவக்க வேண்டுமென்று முடிவெடுத்து, இப்பொழுது காமராஜர் மாவட்டத்தில் விருதுநகரிலும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகரான சிவகங்கையிலும் துவக்கவிருக்கிறோம் அது முடிந்ததற்குப் பிறகுதான் தாலுக்காவில் இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு வர வேண்டும். முதலிலே மாவட்ட மருத்துவமனைகளுக்கெல்லாம் செய்து முடிக்க வேண்டும். இரண்டு மாவட்ட மருத்துவமனைகளுக்குச் செய்து முடிந்தபிறகு இவை பரிசீலிக்கப்படும்.

1987 ஏப்ரல் 1]

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த இன்டென்சிவ் கேர் யூனிட் ஆரம்பிப்பதற்கு என்ன வரைமுறைகளை நிர்ணயித்திருக்கிறார்கள்? அப்படி மாவட்ட மருத்துவமனைகளிலே மட்டும்தான் இவற்றை ஆரம்பிக்க இயலுமா? தாலுக்கா மருத்துவமனைகளிலே இந்த வசதி வருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? ஏனென்றால் கிராமப் பகுதி மக்கள் இப்படிப்பட்ட நோய்களால் தாக்கப்படுகின்றபொழுது அந்த மக்களுக்கு சிகிச்சை எளிதாகக் கிடைப்பதற்கு கிராம மக்கள் மீது அக்கறை கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவரின் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சையை ஏற்பாடு செய்து முடித்த பிறகுதான் தாலுக்கா மருத்துவமனைகளுக்கு வர வேண்டும். இதற்காகத் தனியாக விதிகள் ஒன்றும் கிடையாது. மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் முடித்ததற்குப் பிறகு, தாலுக்கா மருத்துவமனைகளுக்கு வரலாம் என்றுதான் அரசு உத்தேசித்திருக்கிறது. தடங்கலாக இருப்பது நிதி ஆதாரமே தவிர வேறு எதுவுமில்லை.

துறையூர் அரசு மருத்துவமனையில் படுக்கைகளை அதிகரித்தல்.

235—(*வினா எண் 7005) திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் அரசு மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் அவர்களே, (அ & ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் அரசு மருத்துவமனை மிகவும் பின்தங்கிய நிலைமையிலே இருக்கிறது. அங்கே நவீன அறுவை சிகிச்சை அரங்குக்கும், அதற்கடுத்தாற்போல நீரிழிவு போன்ற நோய்களை ஆராய்ச்சி செய்வதற்கு நவீன இயந்திரங்களை அங்கே பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே அங்கே ஒரு அறுவை சிகிச்சை அரங்கு இருக்கிறது. சிறிய அறுவை சிகிச்சைகள் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 350 நடைபெற்று வருகின்றன. இதை விரிவுபடுத்துகின்ற யோசனை தற்போது இல்லை.

[1987 ஏப்ரல் 1

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் பகுதியில் இயற்கை முறையில் மூங்கில் போன்ற பொருட்களை வைத்து கை முறிவு, கால் முறிவு ஏற்பட்டவர்களுக்கு எளிய முறையில் சிகிச்சை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நாட்டு வைத்தியம் என்று சொல்லக்கூடிய ஒரு முறையை இந்த அரசு மருத்துவமனைகளில் அமல்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத் துறை என்று நாம் வைத்திருக்கிறோம். அதிலே இவற்றையெல்லாம் பரிட்சார்த்தமாக செய்து பார்க்கிறோம். அந்த மருத்துவர்கள் மூங்கிலை மட்டும் வைத்துக் கட்டுவதில்லை, சில மூலிகைகளையும் வைத்துக் கட்டுகிறார்கள். அந்த மூலிகைகளைப்பற்றி மற்றவர்களுக்கு அவர்கள் சொல்லாமல் இருந்து விடுகிறார்கள், எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த மருத்துவர்களைக் கொண்டு வந்து அதைப்பற்றி அரசுக்குத் தகவல் கொடுப்பார்களேயானால் பொதுவாக அது பயன்படும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் என்னுடைய தொகுதியைச் சார்ந்ததாகும். என்னுடைய தொகுதியின் தலைநகரமாக இருக்கின்றது. அந்தத் துறையூர் பகுதியிலே அதிகம்பேர் மருத்துவமனைக்கு வருகிறார்கள். எனவே, வரும் ஆண்டிலேயாவது இந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்குத் திட்டங்களை அதிகமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் சரியாக இருக்கும்பொழுது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

கோவை சிங்காநெல்லூரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

236—(*வினா எண். 8411) திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிங்காநெல்லூரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் தனியார் நடத்துகிற மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடைமுறைப் பயிற்சி பெற அனுமதிக்கப்படும் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அது அமுலாக உள்ளது?

(இ) ஈ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷன் அதற்கு அனுமதி அளித்துள்ளதா?

1987 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) கோவையில் உள்ள பி.எஸ்.ஜி. இன்ஸ்டிடியூட் ஆப் மெடிகல் சயின்சஸ் மாணவர்கள் கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையை பயன்படுத்திக் கொள்ள அக்கல்லூரி நிர்வாகம் அரசினை அனுமதிக் கோரியுள்ளது. அக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. சுப்பராயன் : தலைவரவர்களே, கோவை சிங்காநெல்லூரிலுள்ள ஈ.எஸ்,ஐ. மருத்துவ மனையில் பல்வேறு துறைகளுக்கு டாக்டர்கள் இல்லை; பொதுவாக டாக்டர்கள் அங்கே போதுமான அளவுக்கு இல்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது என்பதை அரசு அறியுமா? எந்த எந்தத் துறை டாக்டர்கள் இல்லாமல் இடங்கள் காலியாக இருக்கின்றனவோ அந்த அந்தத் துறைக்கு பொருத்தமான டாக்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சிவில் சர்ஜன் பதவிகள் நிரப்பப்படாமல் சுமார் 60, 70 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதற்குக் காரணம் சிவில் சர்ஜன் ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றிருக்கிறார். அந்தத் தடை ஆணை மீது விசாரணை நடைபெற்று. வழக்கு முடிந்தவுடன், தடை ஆணையின்மீது நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அன்றைக்கே கூட காலியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. வி. பி. நந்தன் : தலைவரவர்களே, எப்போது காலியிடங்களுக்கு மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் எதுவும் சொல்லவில்லை. மருந்துகளும் போதுமான அளவுக்கு இல்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே, தேவையான மருந்துகளையும் போதுமான அளவுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எந்த மருத்துவமனையில் மருந்து இல்லை என்று சொன்னால், நிச்சயமாக மருந்து இல்லை என்று சொல்லுகின்ற டாக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் எல்லா மருத்துவமனைகளுக்கும் நிறைய மருந்துகள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்; மருந்துகள் இல்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை. கிராமத்தில் இருக்கிற கிளை மருந்தகங்களுக்குக்கூட நிறைய மருந்துகள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஆர் ரெங்கசாமி : தலைவரவர்களே, பொதுவாக ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளிலும் டிஸ்பென்சரிகளிலும் மருந்துகள் இல்லை என்று புகார் வருகிறது. குறிப்பாக கோவில் பட்டி மருத்துவமனையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக காலியாக இருக்கின்ற டாக்டர் பதவி நிரப்பப்படவில்லை. இப்படி பல

இடங்களில் பல டாக்டர் பதவிகள் காலியாக இருக்கின்றன. எல்லா மருத்துவமனைகளிலும் போதுமான மருந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் கோவில் பட்டி மருத்துவமனையில் போதுமான அளவுக்கு மருந்துகள் இல்லை; போதுமான அளவுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எந்த மருத்துவமனையில் அல்லது மருந்தகத்தில் மருந்து இல்லை என்று சொல்லி விவரமாக எழுதிக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். எல்லா மருத்துவமனைகளிலும் மருந்துகள் குறைவற்றிருக்கின்றன என்பதை அழுத்தம் திருத்த மாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடவாசல் ஊராட்சி ஒன்றிய செருகளத்தூர் சித்த மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக உயர்த்தல்.

237—(*வினா எண் 10553) **திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செருகளத்தூர் சித்த மருத்துவ மனையை அரசு மருத்துவமனையாக உயர்த்தி, படுக்கை வசதி களை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவரவர்களே, பிரைமரி ஹெல்த் சென்டர் அல்லது அரசு மருத்துவமனை தொடங்கும் நோக்கம் நம்முடைய அரசின் பரிசீலனையில் உள்ளதா? தமிழ் நாட்டில் எத்தனை இடங்களில் தொடங்கும் திட்டம் உள்ளது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற மூலக் கேள்வி சித்த மருத்துவமனையைப் பற்றியது. இப்போது கேட்பது ஆரம்பச் சுகாதார நிலையம் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு 149 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தொடங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவரவர்களே, குத்தாலம் தொகுதி குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செருகளத்தூர் ஊரில் இருக்கிற சித்த மருத்துவமனையை, இந்த ஆண்டு கிட்டத்தட்ட 158 பிரைமரி ஹெல்த் சென்டர்களைத் தொடங்க அரசு முடிவு செய்திருப்பதைக் கருத்திற்கொண்டு,

செருகளத்தூரைச் சுற்றி ஏறத்தாழ 50 குக்கிராமங்கள் இருப்ப தால் அந்தக் குக்கிராமங்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நிதிநிலைமை சங்கடமாக இருந்தாலும்கூட, இந்த ஆண்டு அல்லது வருகின்ற ஆண்டு அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தி, படுக்கை வசதிகளை அதிகப்படுத்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சித்த மருத்துவமனை என்பது ஆரம்பச் சுகாதார நிலையத்தில் தொடங்கப்படுகின்ற ஒரு கிளை ஆகும். தனியாக இதற்கு ஒரு மருத்துவமனை தொடங்கப்படவில்லை. ஆகவே, ஆரம்பச் சுகாதார நிலையம் எங்கெங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் சித்த மருத்துவமனை, மருத்துவர் தேர்வு பெற்று வருவதற்கு ஏற்ப, ஆரம்பிக்கப்படும். அப்படி வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திலும் அமைக்கப்படும்.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஓடும் பாலாறு.

238—(*வினா எண் 11312) **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் ஓடும் பாலாற்றில் கலக்கும் இரசாயனம் மற்றும் கழிவு நீரால் 25 ஆண்டுகளில் அந்தத் தண்ணீர் கெட்டுவிடும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தகவல் உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து அரசின் கவனத்திற்கு வரவில்லை.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடியிலிருந்து இராணிப்பேட்டை வரையில் பாலாற்றில் கழிவுநீர் கலப்பதால் தற்போது குடிநீருக்குப் பாதிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக தோல் சம்பந்தமான வியாதிகள் வருகின்றன. இந்தக் குறையைத் தீர்க்கின்ற வகையில் வெளி யேற்றப்படுகின்ற கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற அங்கே இருக்கிற தொழிற்சாலைகள் முன்வந்திருக்கின்றனவா? இல்லை என்றால் அப்படிப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 1

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது அனைத்தும் உண்மை. அந்தக் கழிவுநீரால் விவசாயம் பாதிக்கப்படுகிறது; குடிநீரும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. வாணியம்பாடியைப் பொறுத்தமட்டில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டிகூட பாதிக்கப்பட்டு அதனை வேறிடத்தில் அமைக்கவேண்டிய துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இவ்வாறு பெரும் பாதகத்தை விளைவித்துக்கொண்டிருக்கிற இதைப்பற்றி அரசு ஆய்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்க ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. வாணியம்பாடியைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையின் மூலம் கழிவுநீரை சுத்திகரிப்பு பண்ணுகின்ற ஆலையை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்தனை பேருக்கும், அவர்கள் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு கிரிமினல் குற்றம் சாட்டப்படுவார்கள் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரையில் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களுக்கு இறுதியாகத் தெரிவிக்கிறோம். அரசு கடுமையான நடவடிக்கையை இன்னும் ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள்ளாக நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இதைப்போன்று சாயப்பட்டறை மற்றும் சேகோ ஃபேக்டரி போன்றவற்றிலிருந்து வெளிவருகிற கழிவுநீர் காரணமாக பக்கத்தில் இருக்கின்ற பகுதிகளின் குடிநீர் பாதிக்கப்பட்டு, பாழ்பட்டுவிடுகிற நிலைமை ஏற்படுகிறது. இதைப் பொறுத்தவரையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? இவர்களைப் பொறுத்தவரையில் தனியாக உரிமம் பெற வேண்டுமென்ற வகையில் தனிச்சட்டம் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சாயப்பட்டறை மற்றும் சேகோ ஃபேக்டரி போன்றவற்றிலிருந்து வெளிவருகிற கழிவுநீரால் விவசாயம் பெருமளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியும். இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இதிலே இருக்கின்ற சங்கடம் என்னவென்றால் சாயப்பட்டறை வைத்திருப்பவர்கள் சிறு, சிறு வியாபாரிகளாக இருக்கிறார்கள். சுத்திகரிப்பு ஆலை அமைக்கவேண்டும் என்றால் அதற்கு இலட்சக் கணக்கில் செலவாகும். இவர்களால் அது முடியாது. ஆகவே தான் கூட்டு முயற்சியாக கூட்டுறவுத் துறையிலே அமைக்க முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யுமாறு பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டை அரசாங்கம் கேட்டிருக்கிறது. பதில்

1987 ஏப்ரல் 1]

வந்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். இருந்தாலும் அவர்கள் இப்படி அந்தக் கழிவுநீரை ஆற்றிலோ, குளத்திலோ விடுவதன் மூலமாக மக்களுக்குப் பெரும் பாதகத்தை விளைவிக்கும் என்பதால் விடக்கூடாது என்று எச்சரிக்கை செய்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம்.

திரு. க. பரமலை: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வடாற்காடு மாவட்டத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் தமிழகம் முழுவதும் இந்த நிலை இருக்கிறது. குறிப்பாக திண்டுக்கல்லுக்கு அருகே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதன் காரணத்தால் அண்ணா மாவட்டம் அமைக்கப்பட்டதற்குப் பிறகும் தெற்கே 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு விஸ்தரிக்க முடியாமல் இருக்கிறது. மேலும் குடிநீர்ப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் வைகை ஆற்றில் கூட இப்படிப்பட்ட கழிவுநீர் விடப்படுகின்ற காரணத்தால் அவற்றை குடிநீருக்கு உபயோகப் படுத்த முடியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு படுமோசமான நிலைமை அதிகமாகி வருகிற காரணத்தால் ஏதாவது ஒரு தீவிரத் திட்டத்தின் கீழ் இந்தத் தண்ணீரைக் கலக்காமல் தடுக்க, மாற்று வழி செய்வதற்கு அரசு யோசிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற தண்டனை சிறைத்தண்டனை. அதைத்தவிர வேறு எதுவும் இல்லை. சட்டத்தின்படி கைது செய்து குற்றம் சாட்டி நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றால் சிறைத்தண்டனை கொடுக்கப்படுகிறது. இதைவிடக் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும் என்றால் அதாவது கடுமையாக ஆக்கவேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசுதான் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். மத்திய அரசினுடைய ஆலோசனைக் கூட்டம் நடக்கும்போது இதைப்பற்றி விரிவாகப் பேசலாம் என்று இருக்கிறேன். தமிழ்நாட்டில் பல்வேறிடங்களில் இப்படி பாதகம் விளைவிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறோம். இதை எப்படி தீர்ப்பது என்பது தான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. சிறு, சிறு தொழில் செய்பவர்களை எல்லாம் இலட்சக்கணக்கில் செலவிட்டு சுத்திகரிப்பு ஆலை அமைக்கவேண்டும் என்று வற்புறுத்துவது சரியாக இருக்காது. எனவே, அவர்களுக்காக அரசாங்கமே முயற்சி எடுத்து கூட்டுறவுத் துறையில் செய்யலாமா, அல்லது அரசே நிறுவி அவர்களிடத்திலிருந்து கட்டணம் வசூலிக்கலாமா, அல்லது அவாகள் அத்தனை பேரையும் வற்புறுத்தி, வங்கிகளிலிருந்து அவர்களுக்குக் கடன் கொடுக்கச் சொல்லி அந்த வகையில் சுத்திகரிப்பு ஆலை அமைக்கலாமா என்பதுபற்றி எல்லாம் அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. கோ. இரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புற சூழ்நிலைக்கேற்ப வடாற்காடு மாவட்டத்திலுள்ள தோல் ஷாப் போன்றவற்றிற்கு அனுமதி தரவேண்டும். சுற்றுப்புறச் சூழல் துறையினுடைய அனுமதி பெற்றுத்தான் ஊராட்சி மன்றங்கள் அனுமதி கொடுக்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அப்படி சுற்றுப்புறச்சூழல் துறையினுடைய அனுமதி பெறாமலே ஊராட்சி மன்றங்களால் அனுமதிக்கப்பட்டு பல தோல் ஷாப்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அவ்வாறு நடைபெறுகின்ற தோல் ஷாப்கள் சுற்றுப்புற சூழ்நிலையைக் கெடுக்கிற நிலைமையை உருவாக்கக்கூடிய தன்மை உடையனவாக இருப்பதால் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும், அந்த வகையில் எத்தனை நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கின்றன? அதுபற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

அடுத்து சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்ப அங்கே இருக்கிற சுற்றுப்புறச் சூழல் துறை நடவடிக்கை எடுத்து மாநில அளவில் இருக்கிற சுற்றுப்புறச்சூழல் துறைக்கு அதாவது போர்டுக்கு அது வருகிறது. போர்டு அனுமதி தருவது அல்லது ரத்து செய்வது என்ற வகையில் முடிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு ஓராண்டு அல்லது இரண்டாண்டுகள் ஆகின்றன. இங்கே அரசினிடத்தில் கேட்டால் போர்டு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்கிறார்கள். கீழ் அதிகாரிகள் அனுப்பிவிட்டார்கள், போர்டு முடிவு இன்னும் தரவில்லை என்று சொல்கிறார்கள். இவ்வாறு நீண்டகாலம் நிர்வாகத்தில் தாமதம் ஏற்படுகிற காரணத்தால் மக்கள் நன்மை கருதி உடனடியாக நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொல்யூஷன் கன்ட்ரோல் சட்டம் வருவதற்கு முன்பாகவே தொழிற்சாலைகள் தமிழ் நாடெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தியா எங்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த தொழிற்சாலைகள் எல்லாம் இந்த பொல்யூஷன் கன்ட்ரோல் சட்டத்தின் கீழ் வர வேண்டும் என்று ஒரு கால வரம்பு நிர்ணயித்து அதற்குள் அவர்கள் மனு செய்ய வேண்டும் என்று சொன்னோம். மனு செய்யாதவர்கள் மீது குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் அனைவரும் நீதி மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். 23 தோல் தொழில் அதிபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. என்னை வந்து சந்தித்தார்கள். நிச்சயமாக அரசாங்கம் இதைப் பரிசீலிக்க முடியாது என்று நான் தெரிவித்திருக்கிறேன். ஆனாலும் ஏதேனும் புதிதாக ஆரம்பிப்பதாக இருந்தால் பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டினுடைய அனுமதியைப் பெறத்தான் வேண்டும். அனுமதி பெறாது ஒன்றை ஆரம்பிக்க முடியாது. அப்படி ஆரம்பித்திருப்பார்களானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடஆற்காட்டை பொறுத்தவரையில் பாலாற்றிலிருந்து வருகிற குடிதண்ணீர் முழுவதும் பாதிக்கப்பட்டு, குடிதண்ணீர்கூட கெட்டுப் போய் மக்கள் பெரும் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே அந்த மாவட்டத்தில் இருக்கிற தோல் பதனிடும் தொழில் அதிபர்கள் சீக்கிரமாக முன் வந்து ஒரு பரிகாரம் தேடாவிட்டால் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று இந்த நேரத்திலே நான் எச்சரிக்கிறேன்.

குமரி மாவட்டத்தில் புதிய தொழிற்சாலை அமைத்தல்.

*239—(*வினா எண் 6532எ)* **டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக கயிறு தொழிற்சாலையோ, மரவள்ளிக்கிழங்கை கச்சாப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலையோ அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதியதாக தொழிற்சாலை வருமா என்று கேட்டாலே இல்லை என்ற பதில் வரும் என்பது எனக்குத் தெரிந்ததுதான். இருந்தாலும் அந்த மாவட்டத்தில் பெரும் தலைவர் காமராஜர் ஆட்சிக்குப் பின்னர் தொழிற்சாலைகளே ஆரம்பிக்காத காரணத்தால் அங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தது இந்த அரசு என்னும் பெருமையை உரிமையாக்கவாவது நீங்கள் ஆரம்பித்து தர முன் வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இல்லை என்று சொல்கிறபோதே எதை அடிப்படையாக வைத்துச் சொல்லுகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்கெனவே 14 கயிறு தொழிற்சாலைகள் அங்கே கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அமைக்கப்பட்டு நடந்துக் கொண்டிருக்கின்றன. எனவே இதை எல்லாம் கருத்திலே வைத்துத்தான் அதற்கு மேலே அங்கே அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அடுத்து இன்னொன்றும் கேட்டார்கள். புதியதாக கயிறு தொழிற்சாலையோ அல்லது மரவள்ளிக் கிழங்கு தொழிற்சாலையோ கேட்டிருந்தார்கள். மர வள்ளிக்கிழங்கு சம்பந்தமாக அங்கே ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளும் சாத்தியக்கூறுகளும் இல்லை என்ற காரணத்தினால்தான் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[1987 ஏப்ரல் 1

டாக்டர். தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயிறு தொழிற்சாலைகளைப் பொறுத்தவரைக்கும் 14 கூட்டுறவுத் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். கூட்டுறவுத் தொழிற்சாலை இருந்தாலும் நாங்கள் கேட்பதெல்லாம் அரசு சார்பில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் தான் தெரிவித்தோம். எனவே அதை கருத்தில் கொண்டு செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு மரவள்ளிக் கிழங்கைப் பொறுத்தவரைக்கும் அங்கே இருந்து சேலத்திற்கு கூட கச்சாப்பொருளாக வாங்கிச் செல்லுகிறார்கள். அந்த அளவுக்கு செழிப்பாக விளைவதன் காரணத்தாலே அங்கே தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே 14 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தின் சார்பாக ஒன்று வேண்டும் என்று கேட்பது அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக அமையும் என்று நான் கருதுகிறேன். எனவே ஏற்கெனவே இருப்பது ஒழுங்காக நடக்க வேண்டும் என்று சொன்னால் புதிய போட்டிகள் இல்லாமல் இருப்பதே நல்லது என்று கருதுகிறேன். அடுத்து சேலம், தர்மபுரி, பெரியார், கோவை போன்ற இடங்களில் தான் மரவள்ளிக்கிழங்கு மிக அதிகமாக விளைந்து கொண்டிருக்கிறது. இதற்காக மட்டும் கன்னியாகுமரியில் தனியாக ஒரு பேக்டரி ஆரம்பிப்பது என்றால் அது லாபகரமாக, வெற்றிகரமாக இருக்காது என்று நான் கருதுகிறேன். அதனால்தான் சாத்தியக் கூறுகள் இல்லை என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் அம்மாக்குவளை என்று சொல்லக்கூடிய பகுதியில் ஒரு பெரிய கயிறு தொழிற்சாலை இருக்கிறது. அந்த தொழிற்சாலையில் உற்பத்தி ஆகிற பல்வேறுபட்ட பொருள்களை வெளி நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்கிறார்கள். இன்னும் அதிலே கூடுதலான பிரிவுகள் அமைக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே கூடுதலான பிரிவுகளை அந்தத் தொழிற்சாலையில் அமைப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது டயர் தொழிற்சாலை பற்றி என நினைக்கிறேன். இது சம்பந்தமான தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. அது அனேகமாக அவருடைய தொகுதியில் வருவதாக எனக்குத் தெரியவில்லை. அதைப் பார்த்து பிறகு வேண்டுமானால் சொல்கிறேன்.

1987 ஏப்ரல் 1]

தமிழக அரசு ஹெலிகாப்டர்.

240—(*வினா எண் 7114) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டரை சுற்றுலா போக்குவரத்துக்குக் கொடுக்க அரசு முன்வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சுற்றுலா பணிக்காக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டரை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதைப் பயன்படுத்தும் திட்டம் பற்றி முழுமையாக ஆய்வு செய்த பின்பு இந்த ஹெலிகாப்டரை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றிக்கொள்ள இசைவு தந்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, சொந்தமாக ஹெலிகாப்டர் வைத்துக்கொள்வதால் அரசுக்கு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது? இந்தச் செலவை அரசு அதிகமென்று கருதுகிறதா? அல்லது அதனை பராமரிப்பு செய்வதில் ஏதாவது சிரமம் இருக்கிறதா? அப்படியிருக்குமானால் சொந்தத்தில் வைத்துக்கொள்வதை விடுத்து வாடகைக்கு எடுத்துக்கொள்வது சுலபமாக இருக்காதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சொந்தமாக கார் வைத்துக்கொள்வதைவிட அவ்வப்போது வாடகைக்கு எடுத்துக் கொள்வது சில நேரங்களில் மட்டும் வசதியாக இருக்கலாம், ஆனால் சில அவசர காலங்களில் இது தேவைப்படுகிறது என்ற காரணத்தினால்தான் சொந்தமாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. வாடகைக்கு எடுப்பதென்றால் எல்லா நேரங்களிலும் அவசரத்திற்குக் கிடைக்கிற சூழ்நிலை இல்லாமல் இருக்கிற காரணத்தால் இது சொந்தமாக இருக்கவேண்டுமென்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது. ஆண்டுதோறும் பராமரிப்பிற்கு எவ்வளவு செலவாகிறது என்று கேட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், 1982–83-ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் இதன் பராமரிப்புக்குச் செலவாகி இருக்கிறது. எனவே அந்த வகையில் பார்க்கிறபோது அரசுக்குச் சொந்தமாக ஒரு ஹெலிகாப்டர் இருப்பது எப்போதுமே நல்லது தான். பல இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகிற காலங்களில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறதென்ற வகையில் இதைத் தொடர்ந்து வைத்துக்கொள்வது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது.

[1987 ஏப்ரல் 1

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு ஹெலிகாப்டர் மட்டும் இருப்பதால்தான் இது அடிக்கடி ரிப்பேர் ஆகிறது. திடீரென்று தமிழ்நாட்டில் வறட்சி, வெள்ளம் போன்று வருகின்றன. அரசாங்கத்தின் அத்தியாவசியத் தேவையை முன்னிட்டும், வெள்ளக் காலங்களில் பல உயிர்களைக் காப்பாற்றுகிற வகையிலும் மாவட்டத்திற்கு ஒரு ஹெலிகாப்டர் வாங்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச ஆரம்பிக்கிறபோது தொகுதிக்கொன்று கேட்பார்கள் என்று நினைத்தேன். நல்ல வேளை, மாவட்டத்திற்கு ஒன்று என்று நிறுத்திக் கொண்டார்கள். இப்போது அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. அது ஒன்றே போதுமென்று அரசாங்கம் கருதுகிறது.

தருமபுரி மாவட்டம் மொரப்பூரில் ரெயில்வே மேம்பாலம்.

*241—(*வினா எண். 10580)* **திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ரெயில்வே லைனில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, மொரப்பூர் ரெயில்வே லைனில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். காரணம் மொரப்பூரில் மிகவும் முக்கியமான பாதையாக அது இருக்கிறது. குறிப்பாக ஏழெட்டு ஆண்டுக் காலமாக ஹரூர் தாலுக்காவிலிருந்து பாலக்கோடு சர்க்கரை ஆலைக்கு இரவு பகலாக லாரிகளில் கரும்பு எடுத்துப் போகிறார்கள். இரவு நேரங்களில் அந்த ரெயில்வே கேட்டை மூடிவிடுகிறார்கள். இதனால் போக்குவரத்தில் தடை ஏற்பட்டு விவசாயிகளுக்கு குந்தகம் ஏற்படுகிறது. ஆலைக்கு காலாகாலத்தில் போய் சேர வேண்டிய கரும்புப் போக்குவரத்தில் தடை ஏற்படுகிறது. பொது ஜனங்களுக்கு நிறைய இடையூறு ஏற்படுகிறது. ஆகவே அந்த மேம்பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு சாத்தியகூறுகள் இலையென்றால் அந்த ரெயில்வே லைனுக்கு கீழே இருக்கும் கீழ்ப் பாலத்தில் லாரிகளை அனுமதிப்பதற்கு இரயில்வே இலாக்காவுடன் தொடர்பு கொண்டு, அவர்களைத் தக்கமுறையில் அணுகி, அவர்களின் இசைவைப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சமீபத்தில் மத்தியஅரசாங்கம் ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்றால் குறைந்த பட்சம் ஒரு லட்சம் முறை ஒரு ஆண்டிற்கு அதன் வழியாக ரெயில்கள் சென்று வரவேண்டுமென்று ஒரு அளவை நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். அதை பார்க்கிறபோது அந்த அளவை இது எட்டிப் பிடிக்காத காரணத்தால்தான் இதை எடுத்துக்கொள்ள முடியாத நிலையிருக்கிறது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அடுத்து அந்த ரெயில்வே லைனுக்குக் கீழே போக்குவரத்து போகிற அளவிற்கு அமைப்பை ஏற்படுத்த முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்த தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாக நெடுஞ்சாலைத் துறையில் சொல்லி ஆய்வு செய்து தகுந்த பதில் கொடுக்கப்படும்.

திரு. டி. எம். வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இப்படி மேம்பாலம் கட்டுவதில் மாநிலத்தில் எவ்வளவு இடங்களுக்கு அனுமதி கேட்டு இன்னும் கிடைக்காமல் இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன். தேசிய நெடுஞ்சாலையில் பெங்களூர்—ஜோலார் பேட்டை ரெயில்வே பாதைக்கு குறுக்கே, நாட்ராம்பள்ளிக்கும் பர்கூருக்கும் நடுவில் ஒரு மேம்பாலம் மிகவும் தேவையாக உள்ளது. தேசிய நெடுஞ்சாலையாக இருப்பதால் ஏறக்குறைய ஒரு நிமிடந்திற்கு ஒரு லாரி என்ற அளவில் போக்குவரத்து இருக்கிறது. நேற்று இரவுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வழியாக வருகிறபோது 100 லாரிகளுக்கு மேல் அந்த வழியில் நின்று போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்ததைக் கண்டார்கள். அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் அமைக்கஅரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல பாண்டிச்சேரிக்கும், பெங்களூருக்கும் இடையே பர்கூர் தொகுதியில் உள்ள சாமல்பட்டியில் மிகவும் தேவையான ஒரு மேம்பாலம் கட்டவேண்டிய நிலையிருக்கிறது. எனவே, இவை போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிற காரணத்தால், உடனடியாக அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இருக்கின்ற பிரச்சனையை நேரடியாகப் பார்க்கிற வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. ஆனால் நிதிப் பிரச்சனை காரணமாகத் தான் அதை எடுத்துக்கொள்ள முடியாத நிலையிருக்கிறது என்றும், மத்திய அரசாங்கம் சில வரைமுறைகளை நிர்ணயித்து இருக்கிறது என்றும், அந்த வரைமுறையிலே இது வராத காரணத்தால் இதை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்பதையும் நான் ஏற்கனவே சொன்னேன். எனவே இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து, அடுத்த ஆண்டு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறபோது, இதையும் சேர்த்து நாம் பரிந்துரை செய்யலாம். மொத்தமாக நாம் எவ்வளவு அனுமதி கேட்டு இருக்கிறோம் என்ற குறிப்பு தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாகத் தருகிறேன்.

செங்கோட்டையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்துவிடல்.

242—(*வினா எண் 11890) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கோட்டையில் இருந்து இலத்தூர், ஆய்க்குடி, சுரண்டை, ராஜபாளையம் வழியாக சென்னை செல்ல திருவள்ளுவர் பேருந்து வேண்டும் என்ற கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில் வழியாக சென்னைக்கு பேருந்து வசதி கோரி வந்த மனுவின் மீது ஆய்வு செய்யப்பட்டு, சென்னை–செங்கோட்டை (வழி) மதுரை, ராசப்பாளையம், சங்கரல் கோவில், சுரண்டை, டாவூர் சத்திரம், தென்காசி வழியாக பேருந்து இயக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலிருந்தும், தென்காசியிலிருந்தும், குற்றாலத்திலிருந்தும் திருவள்ளுவர் பஸ்கள் அதிகப்படியாக விடப்பட்டு இருக்கின்றன. மீண்டும் சென்னையிலிருந்து தென்காசி, குற்றாலம் செல்வதற்கு சுமார் 15 மணி நேரம் ஆகின்றது. ஆகவே படுக்கை வசதிகளைக் கொண்ட பேருந்துகளை விடும் எண்ணம் அரசுக்கு உண்டா?

அதே நேரத்தில் நெடுஞ்சாலைகளில், விவசாயிகள் கதிர்களை அறுக்கக் கூடிய நேரத்தில்,—நெல், சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களை அறுக்கக்கூடிய நேரத்தில்—களங்களை ரோடுகளில் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இதனால் ஓட்டுநருக்கும், பேருந்தில் பயணம் செய்கிற பிரயாணிகளுக்கும் கண்களில் தூசி விழுந்து விபத்துக்கள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே நெடுஞ்சாலைகளில் களம் வைப்பதை தடுக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே 15 மணி நேரம் அந்தப் பேருந்து செல்லவேண்டியதாகஇருக்கிறது என்று சொன்னார்கள். 15 மணிநேரத்திற்கு படுக்கை வசதியை ஏற்படுத்தினால் அவ்வளவு சரியாக இருக்காது. காரணம் ஏறத்தாழ மாலை 6 மணிக்கு படுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். எனவே இது நடைமுறையில் சரியாக வராது என்ற காரணத்தால், அமர்ந்து செல்கின்ற பஸ்கள்தான் விடப்படும். படுக்கை வசதிகளைக் கொண்ட பேருந்துகளை விடுவது கடினமாக இருக்கும்.

அடுத்து. பாதைகளில் களங்கள் அமைத்துவிடுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். இது விவசாயிகளுக்கு இருக்கிற ஒரு முக்கியப் பிரச்சனை. இரண்டு பக்கமும் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. பாதையிலே செல்கின்றவர்கள் மிகக் கடுமையான பிரச்சனைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்என்றாலும், விவசாயிகளுக்கு

அந்த அமைப்புக்கள் அங்கே இல்லாமல் அவர்கள் சங்கடப்படுகிறார்கள். எனவே இதைப் பற்றி கொஞ்சம் ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே சொல்லி, என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. ச. சங்கரலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலிருந்து ராஜபாளையம் வழியாக திருப்பதிக்குச் செல்கிற திருவள்ளுவர் பேருந்தை சங்கரநாயனார் தேவஸ்தானம் ஒரு முக்கியமான புண்ணியஸ்தலமாக இருப்பதால் சங்கரன்கோவில் வழியாக திருப்பதிக்குச் செல்ல அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி செங்கோட்டையிலிருந்து சென்னைக்கு வருகிற பஸ்பற்றி. உறுப்பினர் திருப்பதிக்குப் போய்க் கொண்டிருக்கிறார். இப்படி ஒவ்வொரு வழித்தடமாக போய்க் கொண்டிருந்தால், இங்கே குறிப்புகள் கொண்டு வருவது கடினம். தனிப்பட்ட முறையில் அவருடைய கோரிக்கையைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மதுரைக்குப் போகக்கூடிய திருவள்ளுவர் பஸ்ஸிலே தூங்கும் வசதி ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதைப் பற்றி தனியாகப் பரிசீலிக்கலாம். தூங்குவதிலே இவ்வளவு அக்கறை காட்டுவது அவ்வளவு சரியாக இருக்காது. இதைத் தனியாகப் பரிசீலனை செய்து, முடியுமா என்று பார்க்கலாம்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்குகிற வசதி கொண்ட பேருந்து, 15 மணி நேரம் பயணம் செய்பவர்களுக்கு தேவையில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஈரோட்டுக்கு 15 மணி நேரத்திற்கு கூடுதலாக ஆகிறதா? அல்லது பெங்களூருக்குச் செல்கிற அந்த தூங்கும் வசதி கொண்ட பேருந்து 15 மணி நேரத்திற்கு மேல பயணம் செய்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 15 மணி நேரம் என்று சொன்னால், அந்த வண்டியிலே படுத்துக்கொண்டு போகிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அமர்ந்து செல்வதற்கு சரியான வாய்ப்பு இருக்காது என்ற காரணத்தினால்தான் இதை நான் குறிப்பிட்டேன். ஈரோட்டுக்குப் போவதற்கு 15 மணி நேரம் ஆகாது. படுக்கிற நேரத்திற்கு இங்கேயிருந்து கிளம்பி, எழுகிற நேரத்திற்கு அங்கே போய் அடைகிறது.

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தூங்குவதற்கு வசதி உள்ள பஸ்களை விடமுடியாது என்று சொன்னார்கள். இப்போது, சென்னையிலிருந்து ராஜபாளையம் வழியாக 2, 3 திருவள்ளுவர் போக்குவரத்து பஸ்கள் சென்றாலும், ஒரு பஸ்ஸில் கூட கொஞ்சம் வசதியான புஷ் பேக் இருக்கைகள் கிடையாது. ராஜபாளையம் வழியாகச் செல்லுகிற பேருந்துகளில், ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினரான நானும், வாசுதேவநல்லூர் தொகுதி உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்களும், தென்காசி தொகுதி உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களும், கடையநல்லூர் தொகுதி உறுப்பினர்........(மணி அடிக்கப் பெற்றது.)

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: There is no Transport committee for Assembly.

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஷ் பேக் இருக்கை வசதியுள்ள ஒரு திருவள்ளுவர் போக்குவரத்து கழக பஸ் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உங்களுடைய தொகுதி என்ற காரணத்தால் அதற்கு நீங்களும் பரிந்துரை செய்கிறீர்கள் என்று கருதுகிறேன். அவர்கள் சூப்பர் டிலக்ஸ் பஸ் விடவேண்டும் என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏன் சூப்பர் டிலக்ஸ் பஸ் விடப்படாமல் இருக்கிறது என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம். நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே அதை நினைத்தாவது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் சொல்லி அங்கே விட முடியுமா என்று ஆய்வு செய்து பிறகுதான் சொல்கிறேன்.

சேரன்மாதேவி மேலச்சேவல் பேரூராட்சி பகுதியில் இணைப்புச் சாலை அமைத்தல்.

*243—(*வினா எண். 12149)* **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) சேரன்மாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சி மன்றப் பகுதியில் பாலையன் கால்வாய் பாலத்திற்கும் தாம்பரபரணி ஆற்றின் குறுக்கே தற்போது கட்டப்பட்டு வரும் பாலத்திற்கும் இடையே ஒரு இணைப்புச் சாலை போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு approach road தான் போடவேண்டும். இந்த சாலை அமைக்கப்படவில்லை என்றால் கோபால்சாமி சமுத்திரத்திலிருந்து சித்தமல்லி, கருங்காடு பகுதி மக்கள் அங்கே போவதற்கு வாய்ப்பு இல்லை. 4, 5 கிலோ மீட்டர் சுற்றித்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இதை கருத்தில் கொண்டாவது இனி மேலாவது அந்தப் பாதையை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவித் தொகுதியின் மேல் நம்முடைய மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நிறைய ஆர்வம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். இந்த அப்ரோச் ரோடு அமைக்க ஏறத்தாழ 10 ஏக்கர் நஞ்சை நிலத்தைக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது என்று எனக்கு கணக்கு சொல்லியிருக்கிறார்கள். 15 லட்ச ரூபாய் இதற்குச் செலவாகும் என்றும் கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த நிதி நிலையின் காரணமாகத்தான் இப்போது முடியாது என்று நான் சொல்லியிருக்கிறேன். எதிர்காலத்தில் நிதி நிலைமைக்கு ஏற்ப அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போக்குவரத்துத் துறை மானியம் வாங்குவதற்கு முன்பு இதை வழங்கிவிடுங்கள்.

தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் சிலை.

*171—(*வினா எண். 49)* **திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் சிலை அமைப்பதற்கு மைய அரசிடமிருந்து அனுமதி வந்துள்ளதா?

(ஆ) புதிய சிலை எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்ற பிறகு இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராஜராஜனின் சிலை அமைப்பதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி வந்து விட்டதாக சொல்லப்படுகிறதே, அது புதிய சிலையாக வைக்கப்படுமா, எப்போது வைக்கப்படும் என்பதை மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து இன்னும் அனுமதி வரவில்லை. அனுமதி வந்தவுடன் சிலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய கோவிலைச் சுற்றி, அதன் வளாகத்தில் நிறைய கடைகள் சாதாரணமாக இருக்கின்றன. ஆனால் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அங்கே வருவதால் புதிதாக அங்கே கடைகள் கட்டுவதற்கு அரசிடம் ஏதேனும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி தனியாக கேள்வி போட்டால் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் திருவரங்கத்தில் திறப்புவிழா நடந்த கோபுரம் இந்தியாவிலேயே உயரமானது என்று கூறுகிறார்கள். விரைவில் உலகப் புகழ் பெறப் போகும் இந்த கோபுரத்தை எழுப்புவதற்கு மிகவும் துணை நின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு திருவரங்கத்தில் சிலை எழுப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய திருவுருவப்படம் அலுவலகங்களில் எங்கும் இருக்கக்கூடாது என்று ஒரு ஆணையை இட்டு இருக்கிறார்கள். அவர் விருப்பப்பட்டால் எங்கும் சிலை இருக்கும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிலையை கோவில் வளாகத்திற்கு உள்ளே வைப்பதற்கு இன்னும் அனுமதி வரவில்லை என்று சொன்னார்கள். இப்போது இருக்கின்ற இடத்திலாவது அந்த மன்னனுடைய புகழ் எழுதப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. அவர் சேரநாட்டை வென்று உளம்பாடி, தண்சைபாடி என்ற இடங்களை ஆக்கிரமித்தார்; சேர நாட்டை வென்று காந்தளூர், விழுமம் என்ற இடங்களை கைப்பற்றினார்; பாண்டிய நாட்டை இரண்டு முறை வென்றார்; மேலை சாளுக்கியனை போட்டியில் தோற்கடித்தார்

தெலுங்கு சோழ நாட்டை கைப்பற்றினார்; அதோடு இலங்கைக்குச் சென்று அனுராதபுரத்தை அழித்து புலன்அருமை என்று சொல்லுகின்ற இடத்தில் சோழ பிரதிநிதியை தங்க வைத்தார். 196 அடி உயரம் உடைய அந்த பெரிய கோபுரத்தையும், நிழலே கீழே விழாத கோவிலையும் நிர்மாணித்தார்; நர்மதை கரையிலிருந்தே கல் எடுத்து வந்து லிங்கத்தையும், நந்தியையும் ஏற்பாடு செய்தார்; .. .. ..

Mr. SPEAKER: Are you taking history class?

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, இந்தச் சிலை வைப்பதே பழம் பெருமையை நிலைநாட்டத்தான். அதை ஒரு மூலையில் போட்டுவிட்டு, அதனுடைய மூலத்தை சொல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அவை எல்லாம் எழுதிவைக்கப்படுமா? அதன்மூலம் நமது பெருமை உலகத்தில் பரவ வழி ஏற்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ராஜராஜனுடைய புகழைப்பாடும் மெய்க் கீர்த்திகள் எழுதிவைக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகம்.

*172—(*வினா எண் 5654)* திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்றும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்ற தற்போது உத்தேசிக்கப்படவில்லை.

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாவது மாற்றுகின்ற உத்தேசம் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 14.40 இலட்சம் தேவைப்படுகிறது. நிதிநிலை சரியானவுடன் அங்கு கட்டிடம் கட்டப்படும்.

செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காட்டில் பறவைகள் சரணாலயம்.

*173—(*வினா எண். 9105)* திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காடு ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், பழவேற்காடு அருகில் உள்ள பழவேற்காடு ஏரி 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டு உள்ளது இச் சரணாலயத்தில் பறவைகளைப் பாதுகாக்கவும், ஏரியில் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், ஒரு வனவரும் மற்றும் வனக் காவலரும் பணிபுரிகின்றனர்.

திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பறவைகள் சரணாலயத்திற்கு எந்தெந்த நாடுகளிலிருந்து பறவைகள் வருகின்றன? இந்த சரணாலயம் பற்றி பொதுமக்களுக்கு நன்கு விளக்குகின்ற வகையில் விளம்பரப் படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே பழவேற்காடு பறவைகள் சரணாலயத்திற்கு சுமார் 102 வகைப் பறவைகள் பல நாடுகளிலிருந்து வருகின்றன. சுற்றுலா மையத்திற்கு வருகின்றவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் வீடியோ தியேட்டர்கள்.

174—(*வினா எண் 13489) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வீடியோ தியேட்டர்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் அனுமதிக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தமிழ் நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒரு வீடியோ தியேட்டர் கட்ட உரிமம் வழங்கப் பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் எவருக்கும் வீடியோ தியேட்டர் கட்ட உரிமம் வழங்கப்படவில்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடியோ தியேட்டர் கட்டுவதற்கு வழங்கப்பட்டிருக்கின்ற அனுமதி எந்த அடிப்படையில் வழங்கப் பட்டிருக்கிறது? இதற்கு வரி விதிப்பு உண்டா? இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்றவைகளுக்கு எல்லாம் அதிகமான வருவாயைத் தருவது திரை அரங்குகள் தான். அப்படி அந்த திரையரங்குகள் தருகின்ற வருவாயைப்

பாதிக்கின்ற வகையில் வீடியோ தியேட்டர் கட்ட அனுமதி வழங்கப்படுமேயானால் திரை அரங்குகள் மூலம் வரும் அந்த வரிக்கு பாதிப்பு ஏற்படாதா? எனவே அதே வரி விதிப்பு முறையானது இந்த வீடியோ தியேட்டர்களுக்கும் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வீடியோ தியேட்டர்களை கட்டவேண்டுமென்று 44 மனுக்கள் வந்திருக்கின்றன. வடாற்காடு மாவட்டத்திற்குத் தான் இந்த மனுவிற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதிக்கப்பட்ட வீடியோ தியேட்டர் சரியான தூரத்தில் இல்லை. அதைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். பொதுவாக தற்போதுள்ள சினிமா திரையரங்குகளிலிருந்து தான் அரசுக்கு அதிக வருமானம் வருகிறது. வீடியோ தியேட்டர் அமைப்பதில் பர்மனென்ட் அல்லது செமி பர்மனென்ட் தியேட்டரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். டூரிங் சென்டரிலிருந்து 1.609 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். இவ்வாறு பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. மாவட்டங்களில் கலெக்டர் அவர்களும், மாநகராட்சியில் போலிஸ் கமிஷனர் அவர்களும் உரிமம் வழங்குவதற்கு தகுதியுள்ளவர்கள்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடியோ தியேட்டருக்கு வரி விதிப்பு உண்டா? அதனுடைய கொள்ளளவு என்ன? எவ்வளவு நபர்கள் அதில் அனுமதிக்கப்படுகிறார்கள்? இன்றைக்கு வீடியோ தியேட்டர் பெருமளவுக்கு வருமேயானால், திரை அரங்குகள் நசுங்கிவிடும் என்ற அச்சம் உள்ளது. திரைப்படத் தொழிலும் பாதிக்கப்படும் என்றுசொல்லப்படுகிறது. எனவே திரையரங்குகள் பாதிக்கப்படாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படுமா? வீடியோ கேசட் திருடுவதைத் தடுக்க, புதியதாக திரைப் படங்கள் திரையிடும்போது அந்த திரைப்படத்தினுடைய அனுமதி பெற்ற கேசட் 4 வாரம் அல்லது 5 வாரம் கழித்து வெளியே வரவேண்டும் என்ற முறையில் சட்டத்திருத்தம் செய்யப்படுமா? அதை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுகின்ற வகையில், இப்போது குண்டாஸ் ஆக்ட் இருக்கிறதே, அதேபோன்று கடுமையான நடவடிக்கை எடுத்தால், திரைப் படத் தொழில் நசுங்காமலும், திரை அரங்குகள் பாதிக்கப்படாமலும்; மாநகராட்சி, நகராட்சி போன்றவைகளுடைய வருமானம் குறையாமலும் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல்-11.00)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழக முதல்வர்தான் வழிகாட்டும் வகையில் தமிழ்நாடு சட்டம் 7/84 என்ற வீடியோ சம்பந்தமான கட்டுப்பாடு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பிரபல நடிகர் ராஜ்கபூர் அவர்கள், இது வழிகாட்டும் சட்டமாக இருக்கிறது. இந்திய அரசில் பல்வேறு மாநிலங்கள் கடைபிடிக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் தண்டனை பற்றிய செக்ஷன் 10-ன் கீழ் இப்போது விதிகளை மீறுவோர் 3 மாதம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும் என்பதை 3 மாதம் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் அல்லது தேவையானால் தண்டனை 3 மாதத்திலிருந்து 6 மாதமாக உயர்த்தலாமா என்று அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது: அண்மையில் திரையரங்கு உரிமையாளர்கள் இந்த வீடியோ கேஸட்டுகள் கள்ளத்தனமாக தயாரிக்கப் படுவதையும், விற்கப்படுவதையும், வாடகைக்கு கொடுக்கப் படுவதையும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். திரைப்பட தயாரிப்பாளர்கள் அயல் நாட்டுக்கு உரிமம் வழங்கு கின்றபோது தமிழ்நாட்டில் அல்லது இந்தியாவில் திரைப் படங்கள் திரையிடப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன்பே அவர்கள் அந்தத் திரைப்படங்களைக் கொடுத்துவிடுவதால், சிங்கப்பூரிலும் கீழ்த்திசையில் அரபு நாடுகளிலும் அவைகள் திருட்டுத்தனமாக வீடியோ கேஸட்டுகளாகத் தயாரிக்கப்பட்டு இங்கு அனுப்புவதாக சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி நேற்றையதினம் கூட பம்பாயில் உள்ள படத் தணிக்கை உயர் அதிகாரிகள் அவர் களும், தமிழ்நாட்டில் உள்ள மண்டல அதிகாரி அவர்களும் உள்துறை செயலாளர் அவர்களும் கலந்து பேசி இதுமாதிரி கள்ளத்தனமாக வீடியோ கேஸட் படம் தயாரிப்பவர்களைக் கடுமையாக தண்டிப்பதற்கு ஆய்வுசெய்து கொண்டு வரு கிறார்கள்

நீலகிரியில் காட்டு வளம்.

175—(* வினா எண் 11758) திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் காட்டுவளம் அழிவதை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் காட்டு வளம் அழியாமல் பாதுகாக்கும்பொருட்டு, 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் ஆகிய சட்டங்கள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு இச்சட்டங்களை மீறு பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வழிவகை செய்யப்பட் டுள்ளது. திருத்தப்பட்ட 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்

சட்டத்தின்படி, "Scheduled Timber" என்று வகை செய்யப் பட்டுள்ள தேக்கு, சில்வர் ஓக், சந்தனம் மற்றும் ஈட்டி ஆகிய மரங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக தண்டனையும் கடுமையாக்கப்பட்டுள்ளது. 1982–83 முதல் இயற்கைக் காடு களில் விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

திருவில்லிபுத்தூர் தொகுதி கட்டயதேவன்பட்டி ராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள.

176—(*வினா எண். 100)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, கட்டயதேவன்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடமக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் இடித்துள்ளதுஅரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இடிந்தவீடுகளை பழுதுபார்த்தல் அல்லது புதிதாகக் கட்டும் பணியை மேற்கொள்ளுவதற்கான காமராசர் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு அரசின் ஆய்விலுள்ளது.

ஆதிவாசிகள் மேம்பாட்டிற்கு சிறப்புத் திட்டம்.

244 (*வினா எண். 7398)—திரு. ம. சின்னராசு: மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஆதிவாசிகள் மேம்பாட்டிற்கு என்று சிறப்புத்திட்டம் எதுவும் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) இத்திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி எதுவும் கோரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மாநில அரசால்1976-77 முதல் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப் பிட்ட நிதி உதவி அளித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

அ) கல்லூரிகளில் தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிப்பது குறித்த

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு டெல்லி உச்ச நீதி மன்றத்தினுடைய நீதிபதி வெங்கட்ட ராமையா அவர்கள் கல்வித்துறையில் காண்ட்ராக்ட் முறையிலே ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது என்று தீர்ப்பு கூறியதற்கு பிறகும் தமிழகத்திலே அரசு கல்லூரிகளில் காண்ட்ராக்ட் முறையிலே ஆசிரியர்களை நியமிப்பதும் 9 மாத காலம் என்று தொழிற்சாலைகளிலே காண்ட்ராக்ட் தொழிலாளர்களை வேலைக்கு வைப்பதுபோல நியமிப்பதும் இப்போது இந்த கோடை விடுமுறையோடு அவர்களை வேலையை விட்டு நீக்கவேண்டும் என்ற உத்திரவை பிறப்பிப்பதும் ஒரு சிக்கலான பிரச்சனை என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து, அரசு தரப்பில் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(ஆ) மாற்றியமைக்கப்பட்ட சொத்துவரி அமுல் செய்வது குறித்து.

திரு. செ. சேம்பலை: தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்பட்ட பிறகு நகராட்சிகளில் புதிதாக பொறுப்புக்கு வந்தவர்கள் தங்களுக்கு நிதியாதாரங்களை அதிகரித்துத்தரவேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோளை வைத்துவிட்டு நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான ஆணையையும் பெற்றுவிட்டு அப்படி வருகின்ற தொகையை தாங்களே செலவு செய்து கொள்ளுகின்ற வகையில் அரசாங்கத்திற்கு அதிலே ஒரு பகுதியைக்கூட கொடுக்காமல் இருக்கின்ற நிலைமையில் பயனைப் பெற்றுக்கொண்டு அரசாங்கத்தின் மீது அரசுதான் வரியை உயர்த்திவிட்டது என்ற பழியை போட்டுவிட்டு மக்களிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை அரசினுடைய கவனத்திற்கு நான் இப்போது கொண்டு வருவதோடு அதுகுறித்து அரசினுடைய நிலை என்ன, என்ன முடிவை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவர் கேட்டதற்கு பிறகு இன்னொருவர் கேட்க வேண்டாம்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, கடந்த பல்லாண்டுகளாக சொத்துவரி திருத்தப்படவில்லை. கடந்த ஆண்டு அரசு ஆணையிட்டு தனி அதிகாரிகளை நியமித்து சொத்துவரி திருத்தப்பட வேண்டும் என்று விரும்பியது அப்படி திருத்தப்பட்ட சொத்துவரி இன்று முதல் (1·4-1987) முதல் அமுலுக்கு வருவதாக ஆணையிட்டது. அவர்களும் அதற்கான ஆவணங்களை எல்லாம் தயாரித்தார்கள். ஆனால்

இதற்கிடையில் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள் பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் வந்து விட்டன. இருக்கின்ற நடைமுறைகளின்படியும், சட்டத்தின் படியும் வரிவிதிப்பு அதிகாரம் மீண்டும் நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் தரப்பட வேண்டும் என்பதும் ஏற்கனவே அரசு ஆணையின்படி மாற்றியமைக்கப்பட்ட சொத்து வரியை அமுல் செய்யவேண்டாம் என்றும் 1-4-1987 முதல் அமுல் செய்யக்கூடாது என்றும், அந்த ஆணையை திரும்ப பெறவேண்டும் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நேற்றையதினம் உத்திரவு இட்டிருக்கிறார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்கள், அவர்களுக்குரிய அதிகாரத்தின் கீழ் நிதி வருவாயைத் தேடிக்கொள்ள வேண்டும். பற்றாக்குறை ஏற்படுமானால். அரசினிடத்திலே அவர்கள் வருகிறபோது எந்த அளவுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டியிருக்கிறார்கள், எவ்வாறு நிதியைச் செலவழித்து இருக்கிறார்கள், எவ்வாறு நிர்வாகம் செய்து இருக்கிறார்கள் என்று, எப்படி மத்திய அரசு மாநில அரசைக்கேட்டு, கடனும், மானியமும் தருகிறதோ அதே போல் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) 'முட்டாள்கள் தினம்' என்பதால் எழுப்பப்பட்டவை.

திரு. கி. மனோகரன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீக்கியாகிவிட்டது. நீங்கள் எதைச்செ ல்லப் போகிறீர்கள் என்று தெரியும். (குறுக்கீடு). முட்டாள்கள் தினம் சம்பந்தப்பட்ட விவாதங்கள் எல்லாமே நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நீக்கப்பட்டுவிட்டது.

(ஈ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் வசதி.

திரு. பொ.உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதிகளில் மூன்று முறையாக தண்ணீர் வழங்கப்படும் என்று ஒரு சுற்றறிக்கை வந்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில் காலை, மத்தியானம், சாயந்திரம் மூன்று தடவை தண்ணீர் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டது ஒரு வார காலமாக, காலை 10 மணிக்குப் பிறகு மறுநாள் காலை 6 மணிக்குத் தான்

தண்ணீர் வருகிறது. இன்றைக்கு 8 மணிக்கே எல்லா விடுதிகளிலும் தண்ணீர் நின்று விட்டது. பாதி குளித்தும், குளிக்காமலும் வந்து இருக்கிறோமே, உடனடியாக தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அல்லது குளிக்காமலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வருவதா என்று அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் எல்லாம் குளிப்பதற்கு தண்ணீர் கொடுக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(உ) திரு. குமரி அனந்தன் இந்திரா காங்கிரசில் சேர்ந்ததாக சொல்லப்படுவது குறித்து.

திரு. ஆ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால், முன் வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு குமரி அனந்தன் அவர்கள் இந்திரா காங்கிரசில் இணைந்து விட்டார்கள் என்று எல்லா பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. ஆனால் இங்கே உங்களுடைய மேலான கவனத்திற்கு அது வந்திருக்கிறதா? இன்னும் அவர் முன் வரிசையிலே இருக்கிறாரே, அவர் இந்திரா காங்கிரசில் சேர்ந்துவிட்டார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு இன்னமும் தகவல் வரவில்லை. (குறுக்கீடு) அவ்வளவுதான். (குறுக்கீடு) என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே நிலைமை மற்றவர்களுக்கு இருக்குமேயானால் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அல்ல. எனக்கு எழுத்து மூலமாக அவர் எழுதி அனுப்பவில்லை. (குறுக்கீடு)

(ஆ) மாற்றியமைக்கப்பட்ட சொத்துவரி அமுல் செய்வது குறித்து—தொடர்ச்சி.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ரிவிஷன் மூலமாகப் போட்ட வரிகளை எல்லாம் நீக்கியிருப்பதாக சொல்வது ஏப்ரல்/செய்தியா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே மாண்புமிகு திரு ஆறுமுகம் அவர்களுக்கு இப்படியெல்லாம் சந்தேகம் வரும் என்று தான் நேற்றையதினமே புரட்சித் தலைவர் அவர்கள் அந்த உத்தரவை வழங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முடிந்தது.

(ஊ) காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் வண்ணப்பூச்சிகளின் மீது சுண்ணாம்பு பூசுவதாக கூறப்படுவது குறித்து.

1987 ஏப்ரல் 1] (திரு. ஜி. கே. ஜெ. பாரதி)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: பேரவையின் தலைநாயகர் அவர்களே, நம்முடைய வரலாற்றுச் சிறப்புடைய பல்லவ நாட்டினுடைய சிறப்புடைய நாகரிகமாக இருக்கின்ற காஞ்சி மாநகரத்தில் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் இருக்கின்றது. அந்த திருக்கோயிலுடைய, தமிழருடைய கலாச்சாரத்தையும், பண்பையும், நாகரீகத்தையும் விளக்குகின்ற வண்ணப் பூச்சுக்களையும் சுதைகளையும் இப்போது இருக்கிற நிர்வாகிகள் சுண்ணாம்பைப் பூசி அழித்துக் கொண்டு வருகிறார்கள்.

காஞ்சி மாநகரத்திலே இருக்கின்ற திருக்கோயில்களிலே அழகான திருக்கோயில் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயி அந்தத் திருக்கோயில் ஐந்தாம் நூற்றாண்டிலே பல்லவர்கள் காலத்திலே கட்டப்பட்டது. அந்தத் திருக்கோயிலிலே வண்ணப் பூச்சுக்களும், வண்ணச் சுதைகளும் இருக்கின்றன. அவைகளை தற்போது இருக்கின்ற நிர்வாகிகள் அங்கே சுண்ணாம்பை வைத்து அழித்து நீக்கிவிட்டிருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல்வேறு பக்தர்கள் வரலாற்றுச் சிறப்புடைய தமிழருடைய நாகரீகத்தை, தமிழருடைய கலாச்சாரத்தை விளக்குகின்ற திருக்கோயிலைப் பாழாக்கலாமா என்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், தங்கள் மூலமாக அறநிலையத்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இதைப்போன்ற நிலைகள் தமிழகத்திலேயுள்ள கலாச்சார கோயில்களிலே நடைபெறுமானால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? இதைப் போன்ற சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' மூலமாக இந்தத் தகவல் கிடைத்த உடனே சம்பந்தப்பட்ட அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டு, அதை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதிரி தவறுகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு கடுமையாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

(எ) திண்டுக்கல் நகராட்சியில் நடைபெற்ற பள்ளி திறப்பு விழாவிற்கு உறுப்பினரை அழைக்காதது.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருக்கிறார் 27—3—87-ஆம் தேதியன்று தன்னிறைவு திட்டத்தின் கீழ் அரசினால் கட்டப்பட்ட பள்ளியின் திறப்புவிழா அழைப்பிதழில் சட்டமன்ற உறுப்பினரின் பெயரைப் போடாமலும், அழைப்பிதழ் தராமலும், அவர்களாகவே திறந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின்

பெயரைப் போடவேண்டுமென்ற விதி இருந்தும், விதியினை மீறி இருக்கக்கூடிய அந்தத் தலைவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(ஏ) தகவல் கோருவதற்குப் பேரவைத் தலைவரின் முன் அனுமதி.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு (குறுக்கீடு) திரு. பொன் முத்துராமலிங்கம், நீங்கள் அனுமதி கேட்கவில்லை. திரு. அ. ரகுமான்கான், நீங்கள் அனுமதி கேட்டீர்களா? (குறுக்கீடு) அவர்கள் எல்லோரும் 9.30 மணிக்கே வந்து என்னிடம் அனுமதி கேட்டார்கள், வினா எழுப்பப் போகிறோம் என்று. நீங்கள் எதைப்பற்றி வினா எழுப்பப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. காலையில் சொல்லியிருப்பீர்களேயானால், நான் அனுமதித்து இருப்பேன். இன்று வந்து சொல்லுங்கள், நாளை காலை அனுமதிக்கிறேன், அமருங்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) மாதா பட்டணத்தில் பிற்பட்டோர் மாணவியருக்கான விடுதி துவங்க வேண்டியதன் அவசியம்.

*திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அம்பாசமுத்திரம் வட்டம், மாதாபட்டணம் ச.ச.வி. மேல்நிலைப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவியர் தங்கி கல்வி பயில, மாணவியர் விடுதி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்-மாணவியருக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் நடத்தப்படும் 557 விடுதிகளில், திருநெல்வேலி மாவட்டத்தில் (புதிதாகப் பிரிக்கப்பட்டுள்ள சிதம்பரனார் மாவட்டம் உட்பட) 48 விடுதிகள் இயங்கி வருகின்றன.

2. ஆண்டுதோறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்—மாணவியருக்காக புதிய விடுதிகள் திறப்பதை இரண்டாம் பகுதி திட்டமாக பரிசீலித்து, நிதி நிலைக்குழுவின் ஒப்புதலை பெற்றவுடன், அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களும் பொதுமக்கள், சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளின் பேரில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்—மாணவியருக்காக புதிய விடுதிகள் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அனுப்பிய முன் மொழிவுகளின் அடிப்படையில் புதிய விடுதிகள் திறப்பது குறித்து ஒருங்கிணைந்த முன்னுரிமைப்பட்டியலை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தன் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பியவுடன், புதிய விடுதிகள் திறக்க வேண்டிய இடங்கள் குறித்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

3. சேரன்மகாதேவி அம்பாசமுத்திரம் வட்டம் மாதா பட்டணத்தில் ச.ச.வி. மேல்நிலைப்பள்ளியில் 250 பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவியர் பயில்கிறார்கள் என்றும், மாதா பட்டணத்தில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவியர் விடுதி திறக்கலாம் என்றும் திருநெல்வேலி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தெரிவித்துள்ளார். இவ்வூரில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர்களுக்கென ஏற்கனவே ஒரு விடுதி இயங்கி வருகிறது. அதில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 50.

4. 1987—88-ம் ஆண்டில் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் 15 பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவ—மாணவியருக்காக புதிய விடுதிகள் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரிடமிருந்து ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியலைப் பெற்று புதிய விடுதிகள் திறக்கப்படும் இடங்கள் குறித்து அரசால் ஆணை வெளியிடப்படும். அவ்வமயம் மாதா பட்டணத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியருக்கான விடுதி துவங்குவது பற்றி கருத்திற் கொள்ளப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலேயே அந்த விடுதியை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரமும் இந்த அறிக்கையிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தொகுதியைப் பற்றி கேள்வி கேட்பதற்கு யாரும் விரும்புவது கிடையாது.

(ஆ) தஞ்சை மாவட்டம் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் தஞ்சை மாவட்டம் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை காலி செய்யவேண்டிய நிர்பந்திப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டம் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி சென்ற 1982-ம் ஆண்டு முதல் அருள்மிகு கொழுந்தீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் சுமார் 340 பேர்கள் படிக்கிறார்கள். இந்த கட்டிடத்திற்கு பள்ளி வளர்ச்சிக்குழு மாதம் ரூ. 200 வாடகை தர அருள்மிகு கொழுந்தீஸ்வரர் தேவஸ்தான அதிகாரியிடம் ஒப்புதல் அளித்து உள்ளதாக தெரிகிறது. ஆனால் இதுவரை பள்ளி வளர்ச்சிக்குழு தேவஸ்தானத்திற்கு எந்தவித வாடகையும் கொடுத்ததாக தெரியவில்லை. இதுபற்றி தேவஸ்தானத்திற்கும் பள்ளி வளர்ச்சி குழுவிற்கும் இடையே சுமுகமான உடன்பாடு ஏற்படுத்த பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. மேற்படி பள்ளிக்கு ரூ. 2.40 லட்சம் செலவில் தனி கட்டிடம் கட்டவும் ஏற்பளிக்கப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கு உரிய இடத்தை தேர்வு செய்து கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 1982-ஆம் ஆண்டு முதல் அருள்மிகு கொழுந்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இந்த பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வாடகைக்காக இருந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோட்டூருக்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளியை நம்முடைய

அரசு கொடுத்து உதவி இருப்பதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கோட்டூர் பகுதி என்பது முழுமையிலும் 70 சதவீதம் கிட்டத்தட்ட ஆதிதிராவிடர்கள், ஏழை விவசாய தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதி என்று கருதித்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தப் பகுதியில் படிக்கக்கூடிய மாணவிகளுக்கு. இந்த வாடகைக் கட்டிடத்திற்காக மாதா மாதம் 200 ரூபாய் கட்டுவது என்பது அங்கு இருக்கக்கூடிய பெற்றோர் சங்கத்தால் முடியவில்லை. இன்றைக்கு 7 ஆயிரம் ரூபாய்க்கு மேல் அதிகமாக தொகை தேக்கம் ஏற்பட்டுள்ளதால், அந்தத் தொகையைக் கட்ட முடியவில்லை என்பதால் காலி செய்யச் சொல்கிறார்கள். இதற்குமுன் இன்னொரு கட்டிடத்திலே வைத்திருந்து, அதிலும் இந்த மாதிரிப் பிரச்சினை வந்து காலி செய்து விட்டார்கள். அதற்குப்பிறகு இவர்கள் மனமுவந்து கொடுத்தார்கள். ஆகவே 7 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக கட்ட முடியாத நிலைமை இருப்பதால், அதற்கு அரசு தரப்பிலிருந்து, ஏதாகிலும் உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி.. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் அதற்குத் தனியாகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதைக்கூட நேற்று 31 ஆம் தேதியோடு திருப்பிக் கொடுத்துவிடப் போவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், அந்தப் பகுதியில் தனியார் இடமோ அல்லது புறம்போக்கான இடமோ ஜாஸ்தி கிடையாது. ஆகவே அந்தக் கோயிலுக்குச் சொந்தமான இடம்தான் 173/3லே 3 ஏக்கர் 95 செண்டும், 173/4லே 64 செண்டும், மொத்தம் 4 ஏக்கர் 59 செண்ட் இருக்கிறது. இந்த இடத்தை அந்தப் பெற்றோர் சங்கச் சார்பாக கேட்கிற போது, தஞ்சை மாவட்டத்தினுடைய கோயில் அதிகாரி, மார்க்கெட் ரேட்டுக்கு நீங்கள் எழுதிக் கொடுத்தால்தான், அறநிலையத்துறை கமிஷனுக்கு எழுதி சிபாரிசு செய்ய முடியும் என்று அவர்கள் வரையறுத்து விட்டார்கள். நான் கேட்டுக்கொள்வது எல்லாம், முழுமையாக அறநிலையத்துறையின் மூலமாக இனாமாகக் கொடுக்க முடியாமல் இருந்தாலும்கூட, அந்தப் பகுதி மக்களிடமிருந்து கொஞ்சம் வசூல் செய்து, அந்த இடத்தை வாங்குவதற்கு நாங்கள் முயற்சி எடுத்திருக்கிறோம். இதை மனதிலே வைத்துக்கொண்டாவது அந்த இடத்தை சர்க்காருடைய விலையின் பாதி விலையையாவது கொடுக்க நாங்கள் முன் வந்திருக்கிறோம். எனவே அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிடப்பணியை முடித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதைப் போலவே

அங்கே அரசுப் புறம்போக்கு நிலம் 41 செண்ட் இருக்கிறது. அதைத் தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதற்கும் அவரும் மேலே பெர்மிஷன் கேட்டு எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆக, அந்த இடங்களை வாங்கியாவது அரசு துரித நடவடிக்கை எடுத்து கட்டிடம் கட்டிக் கொடுத்து பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தை உருவாக்கி பெண்கள் அங்கே நன்கு படிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலமாகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாகவும் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் எழுத்து மூலமாக அரசுக்குத் தந்தால் அதிகாரிகளுக்குத் தக்க ஆணையிட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மறைமலை நகரிலுள்ள உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டியதன் அவசியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. சாமிக்கண்ணு அவர்கள் பெயரில் இருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அவருக்குப் பதிலாக திரு. டி. எம். வெங்கடாசலம் அவர்கள் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில் உள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு வைப்பு நிதியாக அரசுக்கு ரூ. 32,000/-ம் 1986ஆம் ஆண்டே பொதுமக்களால் செலுத்தப்பட்டிருந்தும் இதுவரை அதற்காக எவ்வித ஆணையும் பிறப்பிக்காமலிருப்பதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரசு நிதிநிலை இடந்தருவதற்கு உட்பட்டும் பல்வேறு இடங்களின் தேவைகளை ஒப்பு நோக்கியும் ஆண்டுதோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்த அரசு அனுமதித்து வருகிறது.

2. செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரிலுள்ள அரசு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்காக அந்த வட்டார பொது மக்கள் (பொதுவாக உயர்நிலைப் பள்ளிகள் தொடங்குவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளின் அடிப்படையில்) கட்டிட பங்குத்தொகை ரூ. 2,500—ம் பொது மக்கள் பங்குந் தொகை ரூ.10,000-ம் ஏற்கெனவே செலுத்தியுள்ளனர். மற்றும் போதுமான காலி இடம் போன்ற வசதிகளும் இருப்பதாகத் தெரிய வருகிறது.

3. 1986—87ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளிகள் தொடங்குவதற்காக மாநிலம் முழுவதிலும் இருந்து வந்திருந்த கருத்துருக்களை ஆய்வு செய்து அவ்வாண்டு தொடங்க வேண்டிய உயர்நிலைப்பள்ளிகள் பட்டியலை முடிவு செய்யும்பொழுது மேற்சொன்ன பள்ளியைச் சேர்க்க இயலாமல் போய்விட்டது.

4. எனினும் இனிவரும் ஆண்டுகளில் தொடங்க இருக்கும் உயர்நிலைப்பள்ளிகளின் பட்டியலை அரசு முடிவு செய்யும்பொழுது (ஏனைய இடங்களில் தேவைகளுடன்) மறைமலைநகரின் தேவையும் கருத்தில் கொள்ளப்படும்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இதிலே கேள்வி கேட்க முடியாது.

(ஈ) திண்டுக்கல் தொகுதி தாடிக்கொம்பு சௌந்திரராஜப் பெருமாள் கோயில் திருப்பணிகள்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்திலேயே மிகத் தொன்மையான அழகிய, மிகச் சிறந்த சிற்பங்களை உடைய திண்டுக்கல் தொகுதி தாடிக்கொம்பு அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள் கோயிலினுடைய சுற்றுச் சுவர்களும் மற்றும் சில சுவர்களும் மிகவும் பழுதடைந்து விழுந்துவிடும் நிலையிலுள்ளது பற்றியும், அந்தச் சிற்பங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை குறித்தும்'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாடிக்கொம்பு கிராமம், அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள் திருக்கோவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மை வாய்ந்த ஆலயமாகும். இத்திருக்கோவில் திண்டுக்கல்—கரூர் நெடுஞ்சாலையில், 10 கிலோ மீட்டர் தொலைவில், குடகனாற்றின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோவில் 1538-ல் விஜயநகர மன்னன் அச்சுத தேவராயரால் கட்டப்பட்டது.

2. அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள் திருக்கோவிலில் உள்ள பழுதுபட்டுள்ளதும், வெடிப்புள்ளதுமான திருமதில் சுவர்களுக்கு பக்கத்துணையாக பாதுகாப்பு சுவர் (Bu tress Wall) கட்டவும், இதர திருப்பணி வேலைகளை மேற்கொள்ளவும், இந்து சமய அறநிலையத்துறை மதுரை துணை ஆணையர் செயல்முறை ந.க. 2762/87/அ3, நாள் 20—2—1987-ல் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திருக்கோவிலில் உள்ள சிற்பங்களை சுத்தம் செய்து பாதுகாப்பு அரண் அமைக்க திருப்பணிக்குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருப்பணி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ள, திருப்பணி வேலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(அ) சுற்று மதில் சுவர் கட்டுதல்;

(ஆ) வெடிப்பு ஏற்பட்டுள்ள திருமதில் செப்பனிடுதல்,

(இ) சக்கரத்தாழ்வார் சன்னதி மராமத்து செய்தல்,

(ஈ) கலை வேலைப்பாடுடைய சிற்பங்களுக்குப் பாதுகாப்புஅரண் அமைத்தல்.

(உ) முன் நுழைவு மண்டபம் கட்டுதல்,

(ஊ) கிணறைத் தூரெடுத்து குழாய் இணைப்புக் கொடுத்தல்,

(எ) ராஜகோபுரம் வர்ணம் பூசுதல்,

(ஏ) மண்டபத்தில் மேல் தளம் செப்பனிடுதல்,

(ஐ) பிரகாரம் சுத்தம் செய்தல்,

(ஒ) குடிநீர் வசதி செய்தல், மற்றும்

(ஓ) சில்லரை மராமத்து வேலைகள்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் திருப்பணிக்குழு அமைத்து அதன் மூலம் அந்த வேலை செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திருப்பணிக் குழுவில் யார் யாரை உறுப்பினர்

களாகச் சேர்த்திருக்கிறார்கள் அந்தப் பகுதியில் உள்ள முக்கியஸ்தர்களையும் அந்தப் பகுதியின் சட்டப் பேரவை உறுப்பினரையும் சேர்த்திருக்கிறார்களா என்ற விவரத்தை அறிய விரும்புவதோடு எவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தத் திருப்பணியை முடிக்க வேண்டும் என்றும், அந்தப் பணிக்காக எவ்வளவு செலவாகும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும் விவரம் தரப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயிலின் மொத்த வருமானம் ரூ.31,573—00 ஆகும். இந்தத் திருப்பணிக் குழுவினர் தாம் அங்குள்ள சம்பந்தப்பட்ட அறநிலையத்துறையின் துணை ஆணையரைப் பொருளாளராக வைத்து, விவர அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 12 விதமான ஐயிட்டங்களையும் நிறைவேற்ற என்ன செலவு ஆகும் என்று மதிப்பீடு செய்து அறநிலையத் துறை ஆணையாளரிடம் அனுமதி பெற வேண்டும்.

(உ) புதூர் நாடு மலைவாழ் பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கக் குறைபாடுகள்.

*திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜவ்வாது மலை, புதூர் நாடு மலை வாழ் மக்கள் பெரியளவு பல நோக்கு கூட்டுறவு சங்கம் முறையாகச் செயல்படாததால் மலைவாழ் மக்களுக்கு அரசின் திட்டங்கள், கடன் வசதி, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காமல் இருக்கிற நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

புதூர் நாடு பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் 24-3-78 அன்று துவக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்திலுள்ள மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 3,187 ஆகும். இவர்களில் பழங்குடியினர் 3,183 பேர் உறுப்பினர்களாக உள்ளனர், புதூர் நாடு எல்லையில் உள்ள அனைத்து பழங்குடி குடும்பங்களும் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். பழங்குடியினருக்கு அரசு அளித்து வரும் சலுகைகள்

அனைத்தும் இச்சங்க உறுப்பினர்களுக்கு இச்சங்கம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டில் (1985–86) கீழ்க்கண்ட சலுகைகள் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன:—

1. உறுப்பினர் பங்குத்தொகை மான்யம் .. ரூ.0.50 இலட்சம்

2. வட்டி மான்யம் .. ரூ 0.76 இலட்சம்

சென்ற ஆண்டில் (1985-86) மேற்படி சங்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளும் அடைந்த முன்னேற்றமும் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது:—

	1985–86 குறியீடு (ரூபாய் இலட்சத்தில்)	1985–86 சாதனை.	பயனடைந்தோர். எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1. கடன் வழங்குதல்	6.00	5.87	296
2. இடுபொருள் வழங்குதல்	0.75	0.86	51
3. வேளாண் விளைபொருள் கொள்முதல்	2.25	2.26	62
4. நுகர்பொருள் விநியோகம்	4.50	5.07	1,856
5. சிறுவனப்பொருள் சேகரம்	5.25	4 77	220

2. சங்கம் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு பணிக்கும் ஆண்டுக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு குறியீட்டை எய்துவதிலுள்ள முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. 1986-87ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட. குறியீடுகள், இதுவரை எய்தப்பட்டுள்ளவை ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

பணிகள்	1986-87-ம் ஆண்டிற்கான குறியீடு. (ரூபாய் இலட்சத்தில்)	28-2-86 வரை எய்தப் பட்டது.
(1)	(2)	(3)
1. கடன் வழங்குதல	5.00	1.13
2. வேளாண் விளைபொருள் கொள்முதல்	1.75	0.89
3. வேளாண் இடுபொருள் வழங்குதல்	1.00	0.91
4. நுகர்பொருள் வழங்குதல்	5.00	4.82
5. சிறுவனப் பொருள் சேகரித்தல்	3.50	1.72

3. மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் பார்க்கையில் கடன் வழங்குதல் மற்றும் வேளாண் விளைபொருள் கொள்முதல் ஆகிய இரண்டு இனங்கள் தவிர ஏனைய இனங்களில் கனிசமான முன்னேற்றம் உள்ளது. மேற்படி சங்க எல்லையில் உள்ள வறட்சி நிலை காரணமாக கடன் வழங்குதல் மற்றும் வேளாண் விளைபொருள் கொள்முதலில் குறியீட்டை அடைவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. நடப்பு மாதத்தில் ரூ. 4.20 இலட்சம் அளவுக்கு குறுகிய காலக்கடன்களும் ரூ. 0.17 இலட்சம் அளவுக்கு மத்திய கால கடனும் ஆக மொத்தம் ரூ. 4.37 இலட்சம் அளவுக்கு கடன்கள் வழங்கப்பட உள்ளது என மேற்படி சங்கத் தனி அலுவலர் தெரிவித்துள்ளார். எனவே, கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 31–3-87–க்குள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.

4. வேளாண் விளைபொருள் கொள்முதலுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ. 1.75 இலட்சத்தில் ரூ. 0.89 அளவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிலைமை காரணமாக வேளாண் விளை பொருள் கொள்முதலில் போதிய முன்னேற்றம் இல்லை. வேளாண் இடுபொருள் வழங்குதல் மற்றும் நுகர்பொருள் வழங்குதல் ஆகியவற்றில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. 1986–87-க்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 31-3-87க்குள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.

5. சிறுவன பொருள்சேகரப் பணிக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு ரூ. 3.50 இலட்சத்தில் 28-2-87வரை ரூ. 1.72 இலட்சம் மதிப்பிற்கு சிறுவனப் பொருள் சேகரிக்கப்பட்டு உள்ளது. தற்பொழுது சங்கத்தால் புளி கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. 31–3-87க்குள் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ.3 50 இலட்சம் எய்தப்படும். எனவே, புதூர் காடு பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியில் சுணக்கம் ஏதும் இல்லை. சங்கம் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளது போன்ற குறைபாடு இதுவரை ஏற்பட்டது இல்லை. இனிமேலும் குறைபாடு ஏற்பட இடம் கொடுக்காமல் காத்துவர வேண்டும் என்றும் சங்கத் தனி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் காகித அளவில் சரியாக இருக்கலாம். ஆனால் செயல் முறையில் பார்க்கும்போது பழங்குடி மலைவாழ் மக்களுக்கு இந்தச் சலுகைகள் போய்ச் சேருகிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. அதைப்போலவே 1986-87 ஆம் ஆண்டில் கடன் வழங்குவதற்காக ரூ. 4.3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அது மார்ச் மாதத்திற்கு முன்னால் வழங்கப்படுமா என்ற சந்தேகமும் இருக்கிறது. அதைத் தவிர நுகர் பொருள் வழங்கலில் முக்கியமாக சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் முறையாக மலைக்கு வருவதே

யில்லை. இரேயே மொத்த வியாபாரம் நடைபெறுகிறது. அது மட்டுமல்லாமல் புளி கொள்முதலில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. வேண்டியவர்களுக்கு குறைந்த தொகைக்கு குத்தகை விடப்படுகிறது. ஏலம் விடுவதில்லை. இதனால் ஏற்படுகிற வருவாய் இழப்பையும் மற்ற தவறுகளையும் கண்டிக்கிற வகையில் கண்டிப்பாக இதற்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11–20]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 31-3-87க்குள் ரூ.4,37,000 வழங்கப்பட வேண்டும் என்ற குறியீடு இருக்கிறது. அந்தத் தகவல் வராத காரணத்தால் அந்த விவரங்கள் சேகரிக்கப்படுவதற்கு தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 10-4-1987க்குள் எல்லா விவரங்களையும் பெற்று கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் ரூபாய் அந்த மக்களுக்கு விநியோகம் செய்யும் சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அங்கேயுள்ள மக்களுக்கு 1985-86 ஆம் ஆண்டில் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. பங்குத் தொகை கூட ரூபாய் 50,000; அதற்கு வட்டி மானியமாகச் சேர்ந்து ரூபாய் 76 ஆயிரம் வழங்கப்படுகிறது

புளி கொள்முதலில் அங்கே தவறுகள் நடப்பதாகச் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தவறுகள் இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி வருமானால் அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்கும். ஆனால் அங்கேயுள்ள மக்களுக்கு, மலையில் சென்று சர்க்கரை மற்ற பொருள்களையும் விநியோகிக்க வேண்டும் என்று சொசைட்டிகள் அமைத்து இவ்வளவு தொகையை அரசு ஒதுக்கீடு செய்து செயல்படுகிறது. அப்படிப்பட்ட தவறுகள் இருக்குமானால் கட்டாயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இதுவரையில் எந்தவிதமான தகவலும் அரசு துறையைப் பொறுத்த வரையில் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே இப்படிப்பட்ட தவறுகள் நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

Dr. K. P. RAMALINGAM: Hon'ble Deputy Speaker, Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee:

1. Forty-eighth Report on the action taken by the Government on the recommendation contained in the Twenty-First Report (Seventh Assembly) of the Committee on Public Accounts (1982-83)

on the paragraphs pertaining to Commercial Taxes and Religious Endowments Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1977-78 and 1978-79 (Revenue Receipt.)

2. Forty-ninth Report on the further action taken by the Government on the recommendations contained in the First Report of the Committee on public Accounts (1977-78) and Thirteenth Report of the Committee on public Accounts (1980-82) on the Report of the Comptroller and Auditor General of India for the year 1972-73 (Revenue Receipt.)

3. Fiftieth Report on the Excesses over Voted Grants and Charged Appropriation for the year 1982-83.

5. அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1987–88 ஆம் ஆண்டுக்கான மானிய கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவதற்கு ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

MESSAGE

"In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu" Legislative Assembly of the demands for grants for the year 1987–88.

6. வரவு-செலவுத் திட்டம் 1987-88 வாக்கெடுப்பு
கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் "மானியக் கோரிக்கை எண்-4. பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 19,65,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 19,65,41,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பனியன் துணிகள் மீது தற்போது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்து பிற மாநிலங்களோடு போட்டியிடுகிற வாய்ப்பை உறுதிப் படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 19,65,41,000—இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. சு. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணிகளுக்குப் போடப்படும் சாயங்கள் மீது விதித்துள்ள அதிகப்படியான வரியை குறைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 4-பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 19,65,41,000—இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பலமுனை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை. வரியாக மாற்றுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 19,65,41,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்

மாண்புமிகு திரு. த. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை 4–இல் கொள்கை குறிப்பு ** அவை முன் வைக்கப் பெற்றுள்ளது. அதை நான் படித்ததாக கருதிக் கொண்டு குறிப்பேட்டில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கருத்துக்களுக்குப் பிறகு என்னுடைய கருத்தை பதிலுரையில் தெரிவிக்கிறேன்.

*திரு. எ. தெய்வநாயகம் : மரியாதைக்குரிய அவையின் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக அவை முன் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். நேற்று, நமது அவையின் முன்னவர் மாண்புமிகு நாவலர் அவர்கள், 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கும் போது நமது நாட்டு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். அதாவது சிற்றுண்டிச் சாலைகளுக்கு விதித்த விற்பனை வரியை ரத்து செய்கிறேன் என்ற நல்ல செய்தியை நல்கினார்கள். அவர்கள் கூறியதை நான் வரவேற்று, அவருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நாட்டிலே இருக்கக்கூடிய விற்பனை வரி ஏழை எளிய மக்களை எப்படிப் பாதிக்கிறது என்பதைப் பொது மக்கள் பேசத் தொடங்கி விட்டார்கள். இன்று வணிகர்கள் அரசுத் துறைகளுக்கும், பொது மக்களுக்கும் பாலமாக அமைந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டிலே ஆயிரம் கோடி ரூபாயை நமது தமிழக அரசுக்கு வணிகர்கள் ஈட்டித் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 1200 கோடி ரூபாயை அவர்கள் மூலமாக நமது அரசு பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பதாக அறிக்கை அளித்திருக்கிறார்கள். இன்றைக்கு பல இனங்களுக்கு பல முனை வரி, ஒரு முனை வரி என்று பல கட்டங்களிலே விதித்திருக்கிறார்கள். ஆனால் வரி விதிப்பிலே பல முனை வரியை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, பல பொருள்களுக்கு ஒரு முனை வரி விதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே சில இடர்பாடுகளும் உண்டு. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், வெல்லத்திற்கு சென்ற ஆண்டு ஒரு முனை வரி 8 சதவிகிதம் விதிக்கப்பட்டது. வெல்லத்திற்கு ஒரு முனை வரி 8 சதவிகிதமாக இருந்தாலும், அதற்கு கூடுதல் சர்-சார்ஜ் என்று ஒரு வரி இருக்கிறது. மேலும் வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதில் 4 சதவிகிதம் சி. எஸ். டி. என்று வருகிறது. இப்படி கணக்கிட்டுப் பார்த்தால் 14 சதவிகிதம் மொத்தமாக வருகிறது. வெல்லம் ஒரு விவசாயப் பொருளாக இருக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுக்கும் சரியான விலை கிடைப்பதில்லை. வியாபாரிகளுக்கும் சரியான லாபம் கிடைப்பதில்லை. இந்தத் தருணத்தில் வரியாகச் செலுத்துவது 14 சதவிகிதம். இப்படி

** 122—145 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

எந்த மாநிலத்திலும் எந்தப் பொருளுக்கும் இல்லை. எனவே தமிழக அரசு இதை உன்னிப்பாகக் கவனித்து, இந்தத் தருணத்தில் அதற்கு ஒரு நிவாரணம் அளிப்பார்களா என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது தமிழக அரசின் வருமானத்தில் 70 சதவிகிதம் வியாபாரிகளின் மூலமாக, தொழிலதிபர்களின் மூலமாக நமக்குக் கிடைக்கிறது. தமிழக அரசின் வருமானத்தை ஈடு செய்கிற வணிகர் சமுதாயத்தினர் அடங்கிய ஆலோசனைக் குழு அமைத்து, அவர்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு கொள்கிறேன். இன்று நாட்டிலுள்ள நிலைமைகளை பத்திரிகைகள் வாயிலாகப் பார்க்கிறோம். 6 ஆம் தேதி தமிழக அரசு விதித்துள்ள கூடுதல் வரியை வணிகர்கள் எதிர்க்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். எனவே அந்த வணிகர் சமுதாயத்தைக் கூப்பிட்டு, நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க பேச்சு வார்த்தையைத் தொடங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, கூடுதல் விற்பனை வரி என்பது 7 இலட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யும் வணிகர்களுக்குத் தான் என்று சொல்கிறார்கள். 7 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு தமிழகத்திலே வியாபாரம் செய்பவர்கள் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்கள் தான் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் புள்ளி விவரம் சொன்னார்கள். வியாபாரம் செய்பவர்கள் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அங்கீகாரம் பெற்றவர்கள் 2.5 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு உறுதுணையாக பல இலட்சம் சிறிய வியாபாரிகள் இருக்கிறார்கள். சின்ன சின்ன வியாபாரிகள், 75,000 ரூபாய்க்கு உட்பட்டு வியாபாரம் செய்பவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். ஆற்றிலே தண்ணீர் போனால் மிதப்பது தோணி தான் என்பது போல எந்த வரி போட்டாலும் அதை சிறிய வியாபாரிகள் தலையிலே தான் வைப்பார்கள். எந்த வியாபாரியும் வரிச் சுமையை மக்கள் தலையில் தான் சுமத்துவார்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் தான் வரிச் சுமையைச் சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

(முற்பகல் 11.30)

இன்றைக்கு வியாபாரிகளுக்கு வேண்டிய சலுகைகளைப் பற்றி மட்டும் நான் சொல்லவில்லை. விவசாயிகளுக்கும் அந்த சலுகைகளை கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தில் விவசாயப் பொருள்கள் தான் நாட்டிலே ஏராளமான அளவில் நடமாடிக் கொண்டிருக்கின்றன. தொழில் ரீதியில் ஈட்டுப் பொருள்களுக்கு வரி விதிப்பைப் பொறுத்த வரையில் அதனை பெரிய முதலாளிகள் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்வார்கள். பிறகு அதனை அவர்கள் ஈடு கட்டிக் கொள்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் விவசாயப் பொருள்கள்

நிறைய இருக்கின்றன. விவசாய பொருள்களுக்கு வேண்டிய அத்தனை வரியையும் நாம் போட்டு விட்டோம். சில பொருள்களுக்கு பலமுனை விற்பனை வரி இருக்கிறது. கசகசா, பட்டை, சோம்பு போன்ற வாசனைப் பொருள்களுக்கு பல முனை விற்பனை வரி இருக்கிறது. பலசரக்குக் கடைகளில் விற்கப் படுகின்ற மற்ற எல்லா பொருள்களுக்கும் ஒரு முனை விற்பனை வரியாக ஆக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீப்பெட்டி தொழிலும் குடிசைத் தொழில் தான். இன்றைக்கு வரி விதித்திருப்பதால் அந்தத் தொழிலும் நசிந்து போகும் அளவுக்கு இருக்கிறது. அவர்கள் வங்கிகளில் கடன் பெற்று தொழிலை நடத்துகிறார்கள். அவர்கள் செய்கின்ற தீக்குச்சி தொழிலே நசிந்து விட வாய்ப்பிருக்கிறது. அந்த அளவுக்கு அவர்கள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கதவடைப்பு செய்வதாக வேறு அறிவிப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு அவர்களையும் கூப்பிட்டு பேசி, அவர்களுக்கு வேண்டிய பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் ஒரு கோரிக்கை. மருந்துப் பொருள்களைப் பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் கூறும்போது சில பெரிய மருந்து வியாபாரிகளுக்குத்தான் இதை விதித்திருப்பதாக கூறினார்கள். சில்லரை வியாபாரிகளுக்கு அதனால் பாதகம் ஒன்றும் இல்லை என்றும் சொன்னார்கள். ஆனால் சில்லரை மருந்து வியாபாரிகள் என்னிடம் இது பற்றி ஆதாரமாக கூறும போது எல்லா மருந்து வியாபாரிகளையும் அதிகாரிகள் மொத்த வியாபாரிகளாக கணக்கெடுத்துக் கொள்வதாகக் கூறினார்கள். அதிகாரிகள் வந்து பார்க்கும் போது சிறிய வியாபாரியா மொத்த வியாபாரியா என்று சரியாக கணக்கு பார்ப்பதில்லை. ஆகவே மருந்துக்கான வரியை குறைத்து விட்டால் வரியை எல்லோரும் ஒழுங்காக அரசுக்கு செலுத்துகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். வரியை குறைத்து மதிப்பீடு செய்தாலும் டர்ன் ஓவர் என்பது 1,500 கோடி ரூபாய் என்று நிர்ணயித்திருப்பதற்கு அதிகமாக தான் வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மருந்துப் பொருள்களுக்கு வரியை குறைத்து சலுகையை அளிப்பதன் வாயிலாக நிச்சயமாக அரசின் வருவாய் உயர வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற் போல அதிகாரிகளைப் பொறுத்தவரையில் பல இடங்களில் அதிகாரிகள் நல்லமுறையில் வசூல் செய்வதில்லை. சில சிறிய அதிகாரிகள் பெரிய அதிகாரிகளைக் கேட்டு காரியங்களைச் செய்கிறார்களா. இல்லை கேட்காமல் காரியங்களை செய்கிறார்களா என்று தெரியவில்லை. பல வியாபார ஸ்தலங்களில் அதிகாரிகள் சென்று முறை கேடாக நடந்து கொள்கிறார்கள். இதற்கு ஒரு வரையறை இருக்க வேண்டும். இப்படி தான் வரி வசூல் செய்ய வேண்டும்; இப்படி தான் கணக்கு கேட்க வேண்டும் என்று வரையறை இருக்க

வேண்டும். வியாபாரிகளை எந்தக் காரணம் கொண்டும் அச்சுறுத்தக் கூடாது. இதனை ஒழுங்குபடுத்த வேண்டும். அதிகாரிகள் வியாபாரிகளுக்கு ஆலோசகர்களாக வேண்டும். அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கவேண்டும். வியாபாரிகளுக்கு துணை நிற்க வேண்டும். அந்த வகையில் வரி வசூலைப் பொறுத்தமட்டில் ஒரு வரையறையை வகுத்து ஒழுங்குபடுத்த வேண்டும். செயல்பாட்டினை, உறுதிபாட்டினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தைப் பொறுத்தவரையில் வரிச்சட்டத்தை எடுத்துக் கொண்டால் சிறு சிறு வியாபாரிகளுக்கு அதனைப் பற்றி கொஞ்சம் கூட தெரியாத அளவுக்குச் சிரமம் இருக்கிறது. அது பற்றி படித்தவர்களையும், வக்கீல்களையும் அவர்கள் அணுக வேண்டியிருக்கிறது. ஆகவே அது பற்றி சட்ட விதிகளை எல்லாம் தமிழிலே அச்சடித்து கொடுக்கின்ற ஆக்கப்பூர்வமான பணியை அரசு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வெள்ளைப் பூண்டை எடுத்துக் கொண்டால் அது அழுகும் விவசாய பொருள் இதற்கும் 8 சதவிகிதம் வரி விதித்திருப்பது நியாயமில்லை. அது போல் வணிகர்கள் தினசரி இருப்புக் கணக்கை வைக்க வேண்டுமென்றிருப்பதைப் பொறுத்த வரையில் மூட்டை மூட்டையாக எண்ணக்கூடிய பொருள்களைப் பொறுத்தவரையில் மட்டும் தினசரி ஸ்டாக் கணக்கை வைக்க வேண்டுமென்று வலியுறுத்தினால் நன்றாக இருக்கும். இன்றைக்கு பலசரக்குக் கடைகளில் குறைந்தது 100, 120 பொருள்கள் ஸ்டாக் இருக்கும். எல்லா பொருள்களுக்கும் ஸ்டாக் கணக்கை வைப்பது என்பது சிரமமான காரியம். இது பற்றி உண்மை நிலையை வருகின்ற அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்னால் அவர்கள் அதை எடுத்துக் கொள்வதேயில்லை. வியாபாரிகளை அவர்கள் ஆக்கிரமிப்பது போல் நடவடிக்கை எடுத்து அச்சுறுத்துகிறார்கள். சிறிய சிறிய பொருள்களை எல்லாம் சிறிய கடைகளை நடத்துகிறவர்கள் ஸ்டாக் வைக்க முடியாது. திடீர் திடீர் என்று ஒவ்வொரு பொருளையும் எண்ணிக் கொண்டிருக்க முடியாது. எடை போட்டுக் கொண்டிருக்க முடியாது. ஆகவே மூட்டை மூட்டையாக வைத்திருக்கின்ற பெரிய வியாபாரிகள் மட்டும் ஸ்டாக் கணக்கை வைத்திருந்தால் போதும், சிறிய வியாபாரிகளுக்கு எக்ஸ்சன் கொடுக்கப்படும் என்கிற அளவுக்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட வரிச் சலுகைகளை அளித்தோமேயானால் எதிர் காலத்திலே வியாபாரிகளுக்கும் நமது அரசுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு, கள்ளச் சந்தைகளை ஒழிப்பதற்கு உபயோக கரமாக இருக்கும். நீங்கள் வரிகளை உயர்த்திக் கொண்டே சென்றால், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஆதாரமற்ற, அங்கீகாரமற்ற வியாபாரிகள் பெருகிக் கொண்டே இருப்பார்கள்.

அந்த ஒரு ஸ்தானத்தை உருவாக்க நீங்கள் வழி வகுக்கக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு. வாய்ப்பளித் தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

***திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, 1987–88 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொது விற்பனை வரி சம்பந்தப்பட்ட மானியத்தின்மீது ஆதரவு தெரிவித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் ஆட்சியில் கடந்த பத்தாண்டுகளாகப் பல்வேறு விதமான சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றியும், அரசு ஊழியர்களுக்கு மூன்று முறை ஊதிய உயர்வைக் கொடுத்தும், இந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற திட்டங்களையும், பல்வேறு முனைப்பு திட்டங்களை வழங்கியும், விவசாயிகளுக்கான மின் கட்டணச் சலுகைகளை வழங்கியும் பல கோடி கடன் நிவாரணம் தந்தும், இவ்வளவு ஆண்டுகளாக இவ்வளவு பணிகளை மேற்கொண்டிருந்தாலும், ஏற்றப்பட்டிருக்கின்ற வரிகளை ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது மிகக் குறைந்த அளவு வரியே கடந்த ஆண்டுகளில் மக்களை அதுவும் எந்த விதத்திலும் கொடுமைக்கு ஆளாக்காத அளவிற்கு வரி வீதங்களையே விதித்து வந்திருக்கிறார்கள் என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் 68 சதவீதத்தை மொத்த வருமானத்தில் ஈட்டித் தந்திருக்கிற இந்த விற்பனை வரி கடந்த ஆண்டுகளில் எந்த இனங்களுக்கும் பெரிய அளவில் ஏற்றப்படவில்லை. இந்த ஆண்டு மட்டும் இவ்வளவு சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கின்ற வறட்சியைச் சமாளிப்பதற்கும், மதுவிலக்கை அமுல்படுத்துகின்ற காரணத்தால் ஏற்படுகிற இழப்பை ஈடு கட்டுவதற்கும் ஏற்றப்பட்டிருக்கின்ற மிகக் குறைந்த இந்த விற்பனை வரி உயர்வைக்கூட ஏற்றுக்கொள்ள சிலருக்கு மனமில்லை என்றால் தமிழக மக்கள் மீதோ, சமுதாயத்தின் மீதோ அக்கறை அற்றவர்களாகத்தான் அவர்கள் இருக்க முடியுமே தவிர, வேறு மாற்று வழிகளைச் சொல்லாமல், வரிவிதிப்பு ஒன்றையே மக்களை ஆட்சிக் கொடுமைப்படுத்துகிறது என்று சொல்வதற்கு உரிய விமர்சனத்திற்கான காரணம் என்று சொல்வதை நல்ல உள்ளம் படைத்த யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த வகையில் 1984–85–இல் 905 கோடி ரூபாய் வருமானம் ஈட்டிய விற்பனை வரி 1985–86–இல் 1035 கோடி ரூபாயாக உயருகிற அளவிற்கு வரியை ஈட்டுகின்ற அளவிற்கு சிறந்த நிர்வாகமும், இந்தத் துறை மேற்கொண்ட காரணத்தினால் தான் இவ்வளவு உயர்வான சதவீதத்தை எட்ட முடிந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். காட்சிக்கு எளியவனாக, கடுஞ்சொல் இல்லனாக நமது மாண்புமிகு

விற்பனை வரித் துறை அமைச்சரும், இந்தத் துறையில் எந்தப் புகாருக்கும் இடமில்லாமல் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. ஆகவே, அந்தவகையில் இந்தத் துறையின் அதிகாரிகளும், அமைச்சரும், புரட்சித் தலைவருடைய சீரிய கொள்கைக்கு ஏற்ப தங்களுடைய துறையின் நிர்வாகத்தை நடத்தியமையையும் நடத்திக்கொண்டிருப்பதையும் நான் இந்த நேரத்திலே பாராட்ட விரும்புகிறேன்.

அரசுக்கு வர வேண்டிய வருமான வரிகளை நாம் ஆய்ந்து பார்த்து, கூடுதலான சமுதாய நல திட்டங்களுக்காக வருமானத்தை ஈட்டுகின்றபொழுது வரி ஏய்ப்பைத் தடுப்பதும் மிக முக்கியமான அரசின் ஒரு கடமையாகவும் இருக்கிறது. ஆகவே, அந்த வகையில் வரி ஏய்ப்பு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபொழுது சில அதிகரிகள் மீது பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் கடுங்கோபம் ஏறபட்டாலும்கூட அதையும் சமாளித்துக்கொண்டு, அரசுக்குச் கடமையை நிறைவேற்றுகின்ற அதிகாரிகளை இந்த நேரத்திலே நான் பாராட்டுகிறேன். இருந்தாலும் வரி ஏய்ப்பை தடுக்கின்ற நடவடிக்கைகளால் மட்டும் ஒரு அரசாங்கம் எதிர்ப்பார்க்கின்ற முழு வரியையும் பெற்றுவிட முடியாது. அரசாங்கத்திற்காக வரி செலுத்து கிறோம், நம்முடைய நாட்டுக்காக, நாட்டினுடைய நன்மைக் காக வரி செலுத்துகிறோம், இந்த வரியைச் செலுத்துவது நம்முடைய கடமை என்ற உணர்வு, மேல்நாடுகளிலே வளர்ந் திருப்பதைப்போல நம் நாட்டிலேயும் வியாபாரிகள் மத்தியிலேயும் தொழிலதிபர்கள் மத்தியிலேயும் வளர வேண்டுமென்பதும் அந்த எண்ணங்களை வளர்க்கின்றபொழுது வரி ஏய்ப்பு நடவடிக் கைகள் தடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மூலம் மட்டுமல் லாமல், நல்லெண்ணத்தின் அடிப்படையில் கூடுதலான வரியையும் நாம் பெற முடியும். அதன் மூலம் அரசாங்கத்திற்கு இருக்கின்ற இன்னும் பல்வேறு கடமைகளையும் நிறைவேற்ற முடியும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூடுதலாக வரி விதிக்கின்றபொழுது அல்லது கூடுதலான வருமானத்தை அரசாங்கத்திற்குத் தேவை என்கின்ற பொழுது அரசாங்கம் சம்பந்தப்பட்ட மற்ற துறை அதிகாரி களோடு கலந்து உரையாடுவதைப்போல், இந்த நாட்டிலே வரி செலுத்திக்கொண்டிருக்கின்ற, கோடிக்கணக்கான ரூபாய்களை வரியாகச் செலுத்திக்கொண்டிருக்கின்ற தொழிலதிபர்கள், வியாபாரிகள் இருக்கிறார்கள்.

[முற்பகல் 11–40]

அவர்களுடைய பிரதிநிதிகளை ஒவ்வொரு பட்ஜெட்டுக்கு முன்னாலும் அழைத்துப் பேசி, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்பதில் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். இதற்கு என்று ஒரு நிரந்தரமான அமைப்பை ஏற்படுத்தி, அவர்களோடு

கலந்து உரையாடி, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, ஒரு தொழில்மீது அல்லது உற்பத்திப் பொருள் மீது வரி விதிக்கும் போது அவர்களுக்கும் மனநிறைவு ஏற்படுவதாக இருக்கும். அந்தவகையில் அவர்களை அழைத்துப் பேசினால் வரி உயர்வு இல்லாமல் வருமானத்தைத் தேட உரிய வழிமுறைகளைக் கேட்டறிய முடியும். ஆகவே ஒவ்வொரு நிதிநிலை அறிக்கைக்கு முன்னால் அல்லது வரி விதிப்புக்கு முன்னால் பொதுமக்கள் பிரதி நிதிகள், வியாபாரிகள், தொழில் அதிபர்கள் ஆகியோருடைய கருத்துக்களைக் கேட்பது அவசியம் என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தவகையிலே இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஓட்டல் உரிமையாளர்களோடு கலந்து பேசி, அவர்களுடைய கோரிக்கையை இப்போது ஏற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே துண்டு விழுந்திருக்கிற பட்ஜெட்டில் கூடுதலாக 10 கோடி ரூபாய் துண்டுவிழும் எறைாலும் கூட ஹோட்டல்களில் உணவு உண்ணுகின்ற சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதால் 10 கோடி ரூபாய்க்கான சலுகையை நேற்று வழங்கி யிருக்கிறார்கள். இதே அடிப்படையில் மற்ற சில தொழில் களுக்கும் இருக்கின்ற நிர்ப்பந்தங்களை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு தொழிற் சாலைகள் இன்றைக்கு இருக்கிற இயற்கையான இடர்ப்பாடுகள் காரணமாக, லொக்கேஷன் டிஸ்அட்வான்டேஜஸ் என்று சொல்லு கின்ற முறையில், தமிழ்நாடு இந்தியாவில் இருக்கிற மூலப் பொருள்களுக்கு வெகு தொலைவில் இருக்கிற காரணத்தால், நிலக்கரி, இரும்பு போன்ற மூலப்பொருள்கள் வெகு தொலைவி லிருந்து நமக்கு வரவேண்டியிருப்பதாலும் ஆண்டுக்காண்டு குறைந்தபட்சம் 40 சதவீதம் மின்சார வெட்டு பெரிய தொழிற் சாலைகளுக்கு இருக்கிற காரணத்தாலும் நாம் விதித்திருக்கிற வரி குறைவாக இருந்தாலும், மற்ற மாநிலங்களிலே இருப்பவர் களை விட இங்கே இருப்பவர்கள் நேர்மையாகவும் நாணயமா கவும் தொழில்களை நடத்தினாலும், எவ்வளவு திறமையாக தொழில்களை நடத்தினாலும் சில தொழில்கள் நசித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலைகளை நாம் பார்க்கிறோம். அப்படி நசித்துக்கொண்டிருக்கிற ஒரு சில தொழில்களை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முதலாவதாக, நம்முடைய பேப்பர் இன்டஸ்டரி இருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் 72 சிறிய காகிதத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றினுடைய சர்வைவல், அவற்றினுடைய வாழ்வே எதிர்காலத்திய நிச்சயமற்ற முறையில், நிரந்தரமற்ற முறையில் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய தமிழக அரசின் பொறுப்பிலே நடைபெற்றுவருகின்ற தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திற்கு (டெக்ஸ்ட்புக்ஸ் சொஸைட்டி)

ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 6,300 டன்னுக்குமேல் காகிதம் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு அந்தக் காகிதத்தைப்பெற டென்டர் விடப்பட்டது. காகிதம் சப்ளை பண்ணுவதற்கு டென்டர் விடப்பட்டதில் அந்த ஆர்டரைப் பெற்றிருப்பது ஆந்திர மாநிலத்தில் இருக்கிற ஒரு காகிதத் தொழிற்சாலையாகும். நம்முடைய தமிழ்நாட்டில் அரசாங்கத்தின் மூலமாகவும், அரசாங்கத்தின் உதவி பெற்றும் நடத்தப்படுகின்ற காகிதத் தொழிற்சாலைகள் 72 இருக்கின்றன. பல மில்கள் அரசாங்கத்தினுடைய கூட்டுப் பொறுப்பில் இருக்கின்றன. இருந்த போதிலும் இந்த பெரிய ஆர்டர் அல்லது டென்டர் அருகில் இருக்கிற ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த காகிதத் தொழிற்சாலைக்குக் கிடைத்திருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய விற்பனை வரி சதவீதம்தான். ஏறத்தாழ ஒரு இலட்சம் தொழிலாளர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த விற்பனை வரி அதிகமாக இருப்பதால் அந்த ஒரு இலட்சம் தொழிலாளரும் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால் அதிகமாக இருக்கின்ற விற்பனை வரி காரணமாக எதிர் காலத்தில் இந்தத் தொழில் நசிந்துப்போகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதை கருத்தில் கொண்டு நம்முடைய மாநிலத்திற்குப் பக்கத்திலே இருக்கிற ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் உற்பத்தியாகின்ற காகிதத்திற்கு என்ன விற்பனை வரி விதித்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு இங்கேயும் விதித்தால் ஓரளவுக்கு சமாளிக்க முடியும்; இந்தத் தொழிலையும் தொழிலாளர்களையும் காப்பாற்ற முடியும், அதற்கு நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் 8 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் 4 சதவீதம்தான் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இந்தத் தொழில் நசிப்பதற்கு விற்பனை வரி மட்டும் அல்லாமல் 'ரா மெட்டீரியல்ஸும்' ஒரு காரணமாக இருக்கிறது. பெரும்பாலும் 'வேஸ்ட் பேப்பர்' தான் ரா மெட்டீரியல்ஸ்; கழிவுத்தாள்தான் காகிதத் தொழிற்சாலைக்கு மூலப்பொருள். இந்தக் கழிவுக் காகிதத்திற்கும் அதிக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் இருக்கிற கழிவுக் காகிதங்களை ஆந்திர மாநிலத்தில் கொண்டுபோய் விற்கிறார்கள், அங்கே அவர்களுக்கு அதிகமான இலாபம் கிடைக்கிறது என்பதால், அதிக விலை கிடைக்கிறது என்பதால், இங்கே கிடைக்கின்ற கழிவுக் காகிதம் ஆந்திர மாநிலத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் போவதால் லோக்கல் மார்க்கெட் கூட நம்முடைய மில்களுக்கு இல்லை. இது எதிர் காலத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் கவனத்தில் கொண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு விற்பனை வரித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, இந்தத் தொழிலை, தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையில் பொருத்தமான வரிவிதிப்பு முறையைக் கொண்டுவந்து, நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள், ஏற்கெனவே மத்திய அரசு நிலக்கரி, இரும்பு மற்றும் போக்குவரத்துக்குப் பயன்படுகிற டீசல் போன்றவற்றில் செய்திருக்கின்ற விலையுயர்வால் மட்டுமல்லாமல், மத்திய அரசு கையாண்டு வருகின்ற இறக்குமதி கொள்கை காரணமாகவும் அதாவது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மூலப்பொருட்களுக்கு ட்யூட்டியை உயர்த்தியதன் காரணமாகவும் நசிந்துபோய் இருக்கிறார்கள். அதோடு இந்தத் துன்பமும் சேரக்கூடாது என்ற வகையில் மட்டுமல்லாமல் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற தொழிலைக் காப்பாற்றுவதற்குரிய வகையிலும் நாம் இந்தக் காகிதத் தொழிலுக்குண்டான வரியை ஒரு சீரமைப்புக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் திருப்பூர் பனியன் நூலுக்கான வரியைக் குறைக்க வேண்டுமென்று பல்லாண்டுக்காலமாக கோரிக்கை இருந்து வருகிறது என்பதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு மிகப்பெரிய அளவில் கல்கத்தாவோடு போட்டிபோட வேண்டியவர்களாக இருக்கிறோம். திருப்பூர் பனியனைப் பொறுத்தவரையில் அதனை இந்தியாவிற்குள் எங்குமே விற்க முடியாது என்ற நிலை வந்திருக்கிறது. அங்கே இருக்கின்ற ஆயிரக்கணக்கான தொழில் அதிபர்கள் அனைவரும் தொழிலாளர்களாக இருந்து தொழில் அதிபர்களாக மாறி இருக்கக் கூடியவர்கள். அவர்கள் வெளிநாட்டு ஆர்டரை மட்டுமே நம்பி தொழில் நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் பனியன் நூலின் மீது இருக்கின்ற விற்பனை வரிதான். எனவே அந்த விற்பனை வரியினை வங்காளத்தோடு ஒப்பிட்டு நாமும் சீரமைக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நாம் கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டையிங் அண்ட் பிரிண்டிங் என்ற வகையில் அதாவது கைத்தறி துணியை டையிங் செய்து, பிரிண்டிங் செய்து கொடுக்கிறவர்கள் ஒப்பந்தத் தொழிலில் இருக்கக்கூடியவர்கள். ஈரோடு, சேலம் போன்ற இடங்களில் பெரும்பாலும் கைத்தறி துணியை வாங்கி டையிங் செய்து கொடுக்கக்கூடிய தொழில், நாம் போட்டிருக்கிற ஒப்பந்த வரியின் மூலம் பாதிக்கப்படுவதோடு, கைத்தறித் துறையே ஒரு நலிவைப் பெறுகிற அளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் நாம் கருத்தில் கொண்டு தயவு செய்து இதனை சீரமைக்க வேண்டும். எந்தத் தொழிலாக இருந்தாலும் தொழிலும், உற்பத்தியும் இருந்தால்தான் அதிலேயிருந்து வரக்கூடிய விற்பனை வரியும் வரும் என்கிற அந்த அடிப்படையில் அதாவது பொன் முட்டையிடுகிற வாத்தைக் காப்பாற்ற வேண்டும்; அழித்துவிடக்கூடாது என்ற அடிப் படையில் விற்பனை வரியினைச் சீரமைக்கவேண்டும். இது

தொடர்பாக அண்மையில் பிரதம அமைச்சர் அவர்கள் சென்னையில் தெரிவித்த கருத்து இதற்கு உதவியாக இருக்கும் என்ற வகையில் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"The State and Central Government tax policies should not be such as to stifle industrial growth. More tax revenue could be collected by higher growth..." என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது நம்முடைய கொள்கை எவ்வளவு தீவிரமாக அமல் படுத்தப்படுகிறதோ அதே அளவுக்கு தொழில்கள் நசிந்துவிடாமல் பாதுகாப்பதும் நம்முடைய கடமையாகும். பெரிய வரிவிதிப்பு இல்லாமல் அதிக உற்பத்தியை ஊக்குவிப்பதன்மூலம் நிச்சயமாக நாம் எதிர்பார்க்கிற வரி கூடுதலாகக் கிடைக்கும் என்பதை இந்தத் துறை கருத்தில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறை சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு முறைகளை நாம் எவ்வளவு தான் சீராக்கினாலும்கூட மத்திய அரசினுடைய, மாநில அரசோடு பகிர்ந்து கொள்கிற நிதிப்பங்கீட்டு முறை மாறவில்லை என்றால் எதிர்காலத்தில் நம் தேவைகளை நாம் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. இனிமேல் வரி போடுவதற்கு இடம் இல்லை என்றாலும் இனி கூடுதலாக பணிகளை எதிர் காலத்தில் ஏற்றுக்கொள்வதற்கு மத்திய அரசாங்கத்தின் வரி விதிப்பு முறையிலும், மாநில அரசோடு செய்துகொள்கின்ற பங்கீட்டு முறையிலும் மிகப்பெரிய மாறுதல் வேண்டும். ஏற்கெனவே போட்டு வருகிற அடிஷனல் செஸ் என்று சொல்லக் கூடிய விற்பனை வரியை அவர்கள் கைவிட்டு விற்பனை வரி அல்லது செஸ் என்பது மாநில அரசினுடைய முழு உரிமை என்ற அளவில் அதில் வருகிற ஒட்டுமொத்தமான வரியையும் நாமே பெறுகிற அந்த வகையில் மாறுதல் வரவேண்டும். அதாவது ஏற்கெனவே மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை அடிப்படையில் மாநிலஅரசு பல்வேறு சமுதாய நலத்திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் அவற்றை மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்க முன்வரவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு முறையும் தொழில் உற்பத்திக்கு மிக அத்தியாவசியமான கோல், இரும்பு போன்ற வற்றின் விலைகளை ஏற்றுவது அல்லது மாற்றியமைப்பது என்றால் அப்போது நிச்சயமாக மாநில அரசின் நிலையினையும் கலந்துகொண்டு அந்த விலைகளை நிர்ணயம் செய்யவேண்டும். பெரும்பாலும் இந்த உற்பத்திக்கான மூலப்பொருட்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தால் வரி விதிக் காமலேயே விலைகளை 20 சதவீதம், 30 சதவீதம் என்று பட்ஜெட்டுக்குச் சம்பந்தம் இல்லாமல் பட்ஜெட்டுக்கு முன்னாலேயே கூட ஏற்றிவிடுகிற காரணத்தால் இந்தத் தொழில்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட காரணத்தால் தான் விலை கட்டுக்கடங்காமல்

போகிறதே ஒழிய தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதிலும் உற்பத்திப் பொருட்களின் விலை கூடுகிறதே ஒழிய வரியால்தான் கூடுகிறது என்று சொல்வது நியாயத்திற்குப் புறம்பானது என்று நான் சொல்ல விரும்புகிறேன் அந்த வகையிலே அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நம்முடைய மாற்றுக் கட்சியின் உறுப்பினர்கள் வரியைக் குறைக்க வேண்டும் என்று ஆலோசனை சொல்கிற அதே நேரத்தில் கூடுதலாக வருவாயை ஈட்டுவதற்கும் ஆலோசனை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நம்முடைய அரசாங்கத்தினுடைய வருமானத்தை நாம் கூடுதலான வரியின் மூலம் பெற முடியாத நிலையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற கடமைகளை நிறைவேற்றுவதற்கு மக்கள் பங்கினை அதிகமாகப் பெறும் முயற்சியிலும் நாம் ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம்.

(முற்பகல் 11-50)

அந்த வகையிலே உள்ளாட்சி துறையில், உள்ளாட்சி நிறுவனங்கள் நகராட்சி, ஊராட்சி போன்றவைகள் கல்விக் காகவும், மருத்துவத்திற்காகவும், சாலை பராமரிப்பிற்காகவும் எப்படி குறிப்பிட்ட பணிகளை பங்காக ஏற்றுக் கொண்டு வந்ததோ அந்தப் பங்கினை கட்டாயமாக மக்களிடமிருந்து பெற்று ஏற்றுச் செய்ய வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும். அதன்மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற பல செலவினங்களை வருங்காலத்தில் குறைக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நேற்று வரி விதிப்பு முறையில் எழுப்பிய பிரச்னைக்கு, வரியிலே கூட அரசியல் லாபம் காணும் முயற்சிகளை முறியடிக்க புரட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கிய உத்தரவின் மூலம் அந்தச் சவாலுக்கு நல்ல தொரு பரிகாரத்தையும் அவர்களுக்கே உரிய பாணியில் வழங்கி யிருப்பதை இந்த நேரத்தில் வரவேற்று, நான் குறிப்பிட்ட இனங்களுக்கு சலுகைகளையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும், நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் என் கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே எடுத்து வைக்க விரும்பு கிறேன். இதிலே "தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், ஏனைய வணிக வரிச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் விற்பனை வரியாக வசூலிக்கப்பட்ட தொகை 1985–86 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு உரிய வருவாயில் 68 சதவீதமாகும். 1984-85-ல் வணிக வரிகள் வாயிலாக 905.32 கோடி ரூபாய் வருவாய் கிட்டியது. 1985–86-ல் ரூ. 1,035.13 கோடி கிட்டியது. இது கடந்த ஆண்டைக்காட்டிலும் சுமார் 13 சதவீதம் கூடுதலாகும் என்று" பெருமையோடு நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள்.

[திரு. அ. மலர்மன்னன்] [1987 ஏப்ரல் 1

அதைப்போலவே 1986-87 ஆம் ஆண்டில் 1987 பிப்ரவரி வரை ரூபாய் 105,980.00 லட்சம் வசூலிக்கப்பட்டதாகவும், இதற்கு முந்தைய ஆண்டில் இதே கால அளவில் வசூலாகிய தொகை ரூ. 92,982.00 இலட்சமாகும். இத்தொகை சென்ற ஆண்டை விட ரூ. 12,998.00 லட்சம் அதிகமாகும் என்று இங்கே தந்திருக்கிறீர்கள். இந்த அளவிற்கு தமிழகத்தினுடைய மொத்த வருவாயிலே 1/3 பங்கை இந்த துறை தந்து கொண்டிருக்கிறது. இந்த வரியின் காரணமாக வியாபார பெருமக்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் தருகிற இந்த வரியின் காரணமாக பணப்புழக்கம் அதிகரித்து, அந்த அளவுக்கு மக்களின் வாங்குகிற சக்தியையும் அதிகரித்துக் கொண்டு, விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது என்பதையும் மறந்து விடக்கூடாது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கரிமஞ்சள் 5.20 ஆக இருந்தது 18 ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது. பூசுகின்ற மஞ்சள் 14 ரூபாய் இருந்தது 60 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. கடுகு 2.80 ஆக இருந்தது 11 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. சீரகம் 14 ரூபாயாக இருந்தது 34 ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது. புளி 3.30 ஆக இருந்தது 12 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. து.பருப்பு 2.30 ஆக இருந்தது 11 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. உ.பருப்பு 3 ரூபாயாக இருந்தது 8.50 ஆக உயர்ந்திருக்கிறது. க.எண்ணெய் ரூ. 4.90 ஆக இருந்தது 21 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ந.எண்ணெய் 9.50 ஆக இருந்தது 30 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ரேடியோ ஆயில் ரூபாய் 7 ஆக இருந்தது 25 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. சீயக்காய் 2.70 ஆக இருந்தது 14.50 ஆக உயர்ந்திருக்கிறது. தே.எண்ணெய் 11.20 ஆக இருந்தது 39 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. தனியா ரூ. 5 ஆக இருந்தது, 17 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மிளகு ரூபாய் 16-லிருந்து 25 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. புழுங்கல் அரிசி ரூ. 2.50 ஆக இருந்தது ரூ. 5.50 ஆக உயர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் உங்கள் தவறான வரி வசூல் முறைதான்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எங்கேயிருக்கிற புள்ளி விவரத்தை, ரேட்டை சொல்கிறீர்கள்?

திரு. அ. மலர்மன்னன் : இருக்கிற புள்ளி விவரங்களைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன சோர்ஸ் என்று தான் கேட்டேன்.

திரு. அ. மலர்மன்னன் : என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் வியாபாரி அல்ல. நான் வியாபாரி. ஆகவேதான் இந்த விவரங்களைத் தெரிவிக்கிறேன்.

1987 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. த. இராமசாமி : துணைத் தலைவரவர்களே, அரிசியினுடைய விலை ரூ. 5.25 என்று குறிப்பிட்டார்கள். அரிசியை அரசு கூட்டுறவுக் கடைகளில் என்ன விலைக்கு விநியோகித்து வருகிறது என்பதை உறுப்பினர் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூட்டுறவுக் கடைகள் பற்றி சொன்னார்கள். நான் பின்னால் அதற்கு விளக்கம் அளிக்கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கம் தமிழகத்தில் அமைந்ததற்குப் பிறகு கூட்டுறவுக் கடைகள் வந்தன என்பதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்காலத்தில் கூட அரசின் சார்பில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசி விநியோகம் செய்யப்பட்டது. அந்த நேரத்தில் அரிசி விநியோகம் செய்வதற்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட அது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டதா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : இதற்கு விளக்கத்தை எங்கள் பக்கத்தில் இருந்தவர் இப்போது அந்தப் பக்கத்தில் வந்திருக்கிறார். அவரிடம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : துணைத் தலைவரவர்களே, யார் எந்தப் பக்கத்திலிருந்து எங்கே போனார் என்பது பிரச்னை அல்ல. அந்த நேரத்தில் இருந்த அந்த இயக்கம் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. அந்த இயக்கத்தில் இருக்கிற நண்பரை கேட்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதால் நான் இதைக் கேட்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகள் அதிகமாக இருக்கின்றன. அதற்கேற்றவாறு நேரத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் எந்தப் பக்கம் இருக்கிறார் என்பது கேள்வியல்ல என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் வழங்கப்படுகிற அரிசியின் தரத்தையும், இன்றைக்கு வெளிச்சந்தையில் கிடைக்கிற அரிசியின் தரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தடவை சென்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அடிக்கடி குறுக்கிடுகிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அரிசியினுடைய விலையேற்றத்தின் காரணமாக பல்வேறு அரசுகள் கவிழ்க்கப்பட்டிருக்கின்றன. அதை நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன்

அவர்கள் சார்ந்திருக்கிற அந்த இயக்கமும் அரிசியால்தான் கவிழ்க்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. ஆகவே இந்த அரசு மிகவும் கவனத்தோடுதான் இருந்துக் கொண்டிருக்கிறது.

திரு. அ. மலர்மன்னன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியும் இந்த அரிசியால்தான் கவிழப்போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு பல்வேறு சலுகைகளைச் செய்திருக்கிறார்கள். ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள், அன்றாடம் உழைக்கிற மக்கள் ஆகியவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, நியாயத்தின் அடிப்படையில் செயல்படுகிற அரசாங்கம் இந்த அரசாங்கம் என்பதை மறந்துவிடக் கூடாது. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதில் மாற்றம் செய்வதால் 10 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு இருந்தாலும்கூட உணவுப் பொருள்களுக்கு, சாப்பாட்டிற்கு வரி போடக்கூடாது என்பதை உணர்ந்து நம்முடைய உத்தமத் தலைவர், தாய் உள்ளங்கொண்ட தலைவர் நேற்றையதினம் செய்த அறிவிப்பிலிருந்து இந்த அரசின் செயல் முறையை உறுப்பினர் புரிந்து கொண்டிருப்பார் என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். இந்தப் பக்கம் இருந்தவர் இப்போது அந்தப் பக்கம் வந்திருக்கிறார், அவரைக் கேட்டால் விளக்கம் தெரியுமென்று சொன்னார்கள். இந்தப் பக்கம் நான் இருக்கிற காரணத்தால் அந்தப் பக்கத்தில் என்ன நடந்தது என்பதைச் சொல்வது சரியாக இருக்கும். நான் தெரிந்து சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது நியாய விலைக் கடைகள் என்று சில கடைகளை திறந்து வைத்திருந்தோமே தவிர, புரட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு தான் கிராமங்கள் முழுவதும் 17 ஆயிரம் நியாய விலை கடைகளை திறந்தார்கள் என்கிற உண்மையை ஒப்புக்கொண்டே தீர வேண்டும். அவர்கள்தான் இதைச் செய்தார்கள். அதனால் தான் அரிசியினுடைய விலை ஓரளவிற்கு கட்டுப்பட்டு விலைக் யேறாமல் இருக்கிறது என்கிற உண்மையை நாட்டிற்கு மூடி மறைக்கக்கூடாது. உண்மையை ஒப்புக்கொள்வதில் தவறில்லை; உண்மையை ஒப்புக்கொள்ள மறுப்பதுதான் குற்றம்.

திரு. அ. மலர்மன்னன்: துணைத் தலைவர் அவர்களே, இருக்கிற இடத்திற்காக இப்படி அமைச்சர் அவர்கள் சொல்கிறார் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, மறுபடியும் நான் சொல்கிறேன். இருக்கிற இடத்திற்காக அல்ல. உண்மையைச் சொல்கிறேன். ஏறக்குறைய 17 ஆயிரம்

நியாய விலைக் கடைகளைத் திறந்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் என்ற உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும். அதை ஒப்புக் கொள்வதற்கு ஏன் மறுக்கிறீர்கள்?

(நண்பகல் 12-00)

திரு. அ. மலர்மன்னன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பது ஆண்டுக்காலமாக அமைச்சராக இருந்தவர், அதைச் செய்யத்தவறிவிட்டார் என்று ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒன்பது ஆண்டுக்காலம் அல்ல, ஏழு ஆண்டுக்காலம். இப்படி கூட்டிக்கொண்டே போகவேண்டாம். உணவுத்துறை அமைச்சராக கடைசி வரையில் இருந்தது கிடையாது. வேறு துறைகளிலும் அமைச்சராக இருந்தேன். ஆகவே அன்று இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்ய தவறிவிட்டது. அதற்காக வெட்கப்படுகிறேன், வருத்தப் படுகிறேன்.

திரு. அ. மலர்மன்னன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் தவறை ஒத்துக்கொண்டதற்கு நன்றி. இப்படிப்பட்டவர்களை எங்கள் தலைவர் அமைச்சராக வைத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள்......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டிருந்தோம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. அப்படி ஒரு தவறான முதலமைச்சரின் கீழே வேலை செய்ய வேண்டி வந்ததற்காக நான் வெட்கப்படுகிறேன் என்று சொல்வதற்கு அதிக நேரம் பிடிக்காது.

திரு. அ. மலர்மன்னன்: அத்தகைய முதலமைச்சரிடம் இறுதி வரையில் இருந்துவிட்டுப் போனவர்தான் இந்த அமைச்சர் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபோன்ற வாதம் வரும் என்று காத்துக்கொண்டிருந்தேன். வாதத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம். நாங்கள் எல்லாம் சேர்ந்துதான் அவரை முதலமைச்சராக ஆக்கினோமே தவிர, அவர் எங்களுக்கு அமைச்சர் பதவி கொடுத்ததாக தவறாகப் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்).

திரு. அ. மலர்மன்னன்: குற்றத்திற்கு அவர்தான் பொறுப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மலர்மன்னன், டிமான்டின் மீது பேசுங்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்ரூவர் சாட்சி சொல்கிறேன் என்று வக்கீல் பேசுகிறார். அப்ரூவர் சாட்சி சொல்வதிலே தவறு இல்லை. தவறான சாட்சிதான் சொல்லக்கூடாது. (குறுக்கீடு). நான் அப்ரூவர் ஆக ஆகிறேன் என்று சொல்கிறார். குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு நன்றி. உண்மையைச் சொல்வதற்கு என்ன தயக்கம்? நான் அப்ரூவராக வேண்டிய அவசியம் இல்லை. 17 ஆயிரம் நியாய விலைக் கடைகளை இந்த ஆட்சி திறந்தது என்று சொல்வது குற்றமா, தவறா? எந்தக் குற்றமும் கிடையாது, தவறும் கிடையாது.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர். . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. திரு. மலர்மன்னன் பேசுங்கள். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் நினைத்தவுடன் கொடுக்க முடியாது. குறுக்கீடு) எந்த விதியின்கீழ்? சபை நடந்ததிலே எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். Please quote the rules. Without quoting the rules I will not allow you. உங்கள் இஷ்டத்திற்கு p int of order all w பண்ணமுடியாது. Mr. Raghumankhan, Please do not try to mo opolise the time of the House. (குறுக்கீடு) திரு. மலர்மன்னன் அவர்களுக்குத் திறமையிருக்கிறது. அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) நீங்கள் யாரும் அவருக்கு உதவிக்கு வரவேண்டாம். நான் அனுமதிக்கவில்லை. திரு. மலர்மன்னன் பேசுங்கள். (குறுக்கீடு). எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். Please quote the rules சீக்கிரம் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டு சொல்லவில்லை. அப்படிச் சொன்னால், பிறகு இங்கிருந்து வாதங்கள் கிளம்பிவிடும். உருவாக்கப்பட்ட நியாயவிலைக் கடைகளை மூத்துக் கொள்கிறீர்களா என்று கேட்டார்கள். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டரில் இது வராது. திரு. மலர்மன்னன் பேசுங்கள். உறுப்பினர் பேசுகிற பிரச்சினை சம்பந்தமாகத்தான் point of order என்று சொல்லி, பதில் சொல்ல முடியும். எந்த விதி இங்கே மீறப்பட்டிருக்கிறது? விதி மீறப்பட்டிருந்தால்தான் point of order கிளப்ப முடியும். (குறுக்கீடு) Ruling உங்கள் இஷ்டத்திற்குக் கொடுக்க முடியாது. கொஞ்சம் இங்கே பாருங்கள். நீங்கள் ஒரு வக்கீல். ஒரு வழக்கு வருகிறபோதுதான் நீதிமன்றம் தீர்ப்பு கொடுக்க முடியுமே தவிர, திடீரென்று ஒரு வக்கீலைப் பிடித்து, இது சம்பந்தமாக தீர்ப்பு கொடுங்கள் என்று சொன்னால் கொடுக்க மாட்டார்கள். உங்களுக்கு இதிலே தீர்ப்பு கொடுத்தாகிவிட்டது. உங்கள் இஷ்டத்திற்குத் தீர்ப்பு கொடுக்க முடியாது (குறுக்கீடு).

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மலர்மன்னன் பேசுங்கள். உங்கள் இஷ்டத்திற்குப் பேசக்கூடாது. திரு. மலர்மன்னன் அதற்குப் பதில் சொல்வார். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: * *

திரு. அ. ரகுமான்கான்: * *

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மலர்மன்னன், நீங்கள் பேசியதை நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். டிமாண்டின் மீது பேசுங்கள். மற்றவற்றை எல்லாம் பொதுக்கூட்டத்திலே வைத்துக்கொள்ளுங்கள். கட்சி விவகாரங்களை இங்கே பேசாதீர்கள். எல்லோரும் உட்காருங்கள், (கூச்சல்-குழப்பம்) இது மரபு அல்ல. (கூச்சல்-குழப்பம்) அமைச்சருக்கு ஒரு முன்னுரிமை உண்டு.

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் குற்றச்சாட்டைச் சொன்னால் உங்களுடைய கட்சியின் சார்பில் பேசுகிறவர் அதற்குப் பதில் சொல்லலாம் (கூச்சல்-குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: * *

திரு. துரை கோவிந்தராசன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்களுடைய குறுக்கீடுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் மானியத்தின் மீதுதான் பேச வேண்டும். அதை மீறி நீங்கள் இந்த விவாதத்திலே ஈடுபட வேண்டாம் என்று உங்களுக்கு நான் ஒரு ஆலோசனையாக சொல்லுகிறேன்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை மானியத்தின் மீது பேச விடமாட்டேன் என்கிறீர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) குறுக்கீடுகள் வேண்டாம். குறுக்கீடுகளை நீக்கிவிட்டேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையும் சேர்த்துதான் நீக்கி ஆகிவிட்டது. (கூச்சல்–குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கீடுகள் வேண்டாம். குறுக்கீடுகள் நீக்கி ஆகிவிட்டன.

திரு. அ. ரகுமான்கான்: Point of order கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் நடவடிக்கையின் கீழ் ஏதாவது நடந்து இருந்தால் எழுந்து கேட்கலாம். அவையின் நடவடிக்கையில் ஏதாவது தவறு இருக்குமானால் கேட்கலாம். (குறுக்கீடுகள்) இந்த குறுக்கீடுகள் எல்லாம் அவையின் நடவடிக்கையை சேர்ந்தது அல்ல. இவைகள் எல்லாம் தேவையில்லாத குறுக்கீடுகள்—

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால்தான் நான் சொல்கிறேன், இந்தக் குறுக்கீடுகள் எல்லாம் அவைக் குறிப்பில் இருக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்) உங்களுடைய குறுக்கீடுகள் மக்களுக்கு தேவையில்லை. இந்தக் குறுக்கீடுகள் இந்த விவாதத்தில் தேவையில்லை. (குறுக்கீடுகள்) இது தனிப்பட்ட குறுக்கீடுகள். இது கட்சி சார்பான குறுக்கீடுகள்.

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிப்பட்ட குறுக்கீடுகள் இருக்கவேண்டாம். இப்போது மணி 11-50 ஆகிவிட்டது. திரு. மலர்மன்னன் அவர்கள் சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நான் ஆரம்பிக்கிறேன், அதற்குள் முடிக்கச் சொன்னால் எப்படி?

திரு. அ. ரகுமான்கான்: * *

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பிக்கும்போதே அதிகமான குறுக்கீடுகள் வந்துவிட்டன. நான் குற்றச்சாட்டே சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசும்போது வேறு யாரையும் எழுந்து நிற்பதற்கு அனுமதிக்காதீர்கள். உங்களுடைய நேரம் வீணாகிவிடும். Don't lead him to that.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(பிற்பகல் 12-10)

திரு. அ. மலர்மன்னன்: நாங்கள் அதைச் செய்யவில்லை. அந்த சைடிலிருந்து 4 பேர் எழுந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் வணிக வரிச் சாவடிகள் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள், அதைப் பற்றித் தெளிவாக ஒன்றை இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன், இன்றைக்கு வரி ஏய்ப்புக்கு திறவு கோலாக இருப்பதே அந்த வணிக வரிச் சாவடிகள் தான். இன்னும் தெளிவாகச் சொன்னால், வணிக வரி இழப்புக்குக் காரணமாக இருப்பதும் இந்த வணிக வரிச் சோதனை சாவடிகள்தான். ஏக வரிகள் இழப்பு ஏற்படுகின்ற வணிக வரிச் சோதனைச் சாவடிகளை எடுத்துவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே இன்றையதினம் வணிகவரி வட்டங்களைப் பொறுத்தவரையில், துணை ஆணையாளர் போன்றவர்களை எல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையில் இருக்கின்ற இளநிலை உதவியாளர்கள், முதுநிலை உதவியாளர்கள் போன்றவர்களை அருள்கூர்ந்து அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்தத் துறையிலே இருக்கின்ற அந்த அலுவலர்கள் போதாத காரணத்தால், இன்றைக்கு ஃபைல்கள் எல்லாம் தூங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர வேண்டும்.

இன்றைக்கு விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வை வரியாக விதித்திருக்கின்ற மத்திய அரசினுடைய போக்கை மாநில அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் கொஞ்சம் கூட தயவுதாட்சண்யமில்லாமல், நம்முடைய இனங்களிலிருக்கின்ற பொருட்களை மத்திய அரசு கொண்டுசெல்வதைத் தடுப்பதோடு, அதற்காகப் போராட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திரிபு இக் குழுவின் பரிந்துரையில் தமிழகத்திற்கு வருகின்ற மருந்துகள், சிமிட்டி, காகிதம், காகித அட்டைகள், பெட்ரோல் போன்ற பொருட்கள், இன்றையதினம் மத்திய அரசு தரப் பிற்குக் கொண்டு போவதற்கும், ஏற்கனவே துணி, சர்க்கரை, புகையிலை போன்ற பொருட்களைக் கொண்டு சென்ற காரணத்தால், இன்றைக்கு தமிழகத்திற்கு வரவேண்டிய வரிகள் வராமல் போகின்ற காரணத்தால் நாமெல்லாம் வரி போட்டு, இன்றைக்கு விலைவாசி ஏறுகின்ற நிலைமைக்கு தமிழக அரசு இருக்கிறது என்பதையும், ஆகவே இந்தத் துறையைச் சரி செய்தால் வரி போட வேண்டியதில்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே வணிக வரித்துறைப் பணியாளர் பயிற்சி நிலையங்களை அமைக்கின்ற நேரத்திலே, வரி வீதங்களை எப்படியெல்லாம் வசூலிக்க வேண்டும், இன்றைக்கு வியாபாரி

களிடத்தில் எப்படியெல்லாம் அந்த வரிகளைப் பெறவேண்டும் என்று அறுவுறுத்திக் கூறி, வியாபாரிகளைப் பாதுகாத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுபோன்று இன்றைக்கு விற்பனை வரி ஆலோசனைக் குழு என்ற ஒன்று அமைக்கப்பட்டு இருப்பதாக 6–11–85 ஆம் நாளிட்ட அரசாணை எண் 1030-ன் கீழ் அதற்காக அமைக்கப்பட்ட அந்த ஆலோசனைக் குழுவிலே அரசு சார்பற்ற உறுப்பினர்கள் 13 பேர் என்றும், அரசு அதிகாரிகள் 13 பேர் என்றும், இன்றைக்கு நிதியமைச்சர், துறையமைச்சர், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆலோசனைக் குழுக் கூட்டமே நடைபெறுவது இல்லை. அந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றாலும், அந்த ஆலோசனைக் கூட்டத்திலே சொல்லப்படுகின்ற கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு, 2, 3 கூட்டங்களுக்கு நான் சென்று சொன்ன கருத்துக்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்திலே ஒட்டுமொத்தமாக வியாபாரிகளைப் பாதிக்கின்ற கூடுதல் வரியை அறவே நீக்கிவிட வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு வியாபாரப் பெருமக்கள் மாநாடு மூலமாக, அரசிடமும், முதலமைச்சரிடமும் பல்வேறு தூதுக் குழுக்கள் வந்து சொல்லியிருந்தும், இன்றையதினம் அந்தக் கூடுதல் வரியை இதுவரையில் நீக்கவில்லை. ஏற்கனவே இருக்கின்ற டாக்ஸ் பிள் டர்ன் ஓவர் என்று இருந்ததை இன்றைக்கு total turn over என்று போட்டிருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நஷ்டம் ஏற்பட்டாலும் இந்த வரியை வியாபாரிகள் கட்ட வேண்டியிருக்கிறது. இது நியாயம்தானா என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே தான் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற கூடுதல் வரியை எதிர்த்து, வருகின்ற 6 ஆம் தேதி தமிழகம் தழுவிய போராட்டத்தை வியாபாரிகள் கடைகளை மூடுகின்ற அளவிற்கு நடத்த முன் வந்திருக்கிறார்கள். ஆகவே வியாபாரிகள் வணிகப் பெருமக்களை அழைத்துப் பேசிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசிய போது புரட்சித் தலைவர் அவர்கள் ஓட்டல் வரியை எடுத்து விட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒரு வரியை ஏன் போட வேண்டும்? போட்டதன் காரணமாக ஓட்டல்களில் 40 பைசாவாக இருந்தது 50 பைசாவாக உயர்ந்துவிட்டது. நாஞ்சிலார் அவர்கள் சொன்னது போல், தோளுக்கு மேல் ஏறிவிட்டது தோசை விலை. இதை

எப்போது இறக்கப்போகிறீர்கள்? இறக்க முடியுமா? ஆகவே இறக்கப் போவதில்லை. எனவே ஒரு வரியைப் போட்டுவிட்டு இன்றைக்கு இட்லி 50 காசாக ஏறியிருப்பதினால் பின்னாலே அந்த வரியை எடுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே இதுபோன்ற வரிகளைப் போடுவதற்கு முன்னால் அந்தத் துறையிலே இருக்கின்ற சம்பந்தப்பட்ட வியாபாரப் பெருமக்களை அழைத்துப்பேசி இந்த வரியைப் போட வேண்டுமென்ற உயரிய நோக்கை ஏற்கனவே பாராளுமன்றத்திலே வி.பி. சிங் அவர்கள் இருந்த காலத்திலேயே கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையை தமிழக அரசும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே திரையரங்கைச் சார்ந்தவர்கள் எல்லாம் உங்களிடையே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அந்த கோரிக்கையின் விளைவாக 6 விதமாக இருந்த வரியை இன்றையதினம் ஒரு கட்டமாக மாற்றி இன்றைக்கு 48 முதல் 53 வரையிலும் இருந்ததை அவர்கள் 50ஆக உயர்த்தவேண்டும் என்று கேட்டதை 55% ஆக உயர்த்தியிருக்கிறீர்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். 48%லிருந்து 55% என்று இருக்கின்ற போது அவர்கள் 7% வரியை இன்றைக்கு கட்ட வேண்டியிருக்கிறது. அதுபோலவே 50-ல் இருந்து 51 என்று இருக்கின்ற போது 4% வரியைத்தான் அவர்கள் கட்டவேண்டியிருக்கிறது. அது போலவே 53% ஆக இருக்கின்றவர்கள் 2% தான் கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே இதிலே சுமார் 53% இருக்கின்ற கொட்டகை உரிமையாளர்கள் 50 திரைப்பட உரிமையாளர்களாக இருக்கிறார்கள் என்பதை .... (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் ஆரம்பித்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. குறுக்கீட்டிற்கு 10 நிமிடங்கள் என்று கழித்து விட்டாலும் 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. மலர்மன்னன்: துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 55% ஆக போடப்பட்டிருக்கின்ற இந்த வரி கட்டணத்தை—உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு ரூபாய்க்கு அனுமதி கட்டணத்திற்கு 55 காசுகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே 55 காசுகள் போக திரை உரிமையாளர்களுக்கு 45 காசுகள் தான் கிடைக்கிறது, பொது வரியிலே 40 காசுகள் கட்டிவிட்டால் தற்போது 55 காசிலிருந்து ஒவ்வொரு 40 காசுக்கும் 15 காசுகள் கட்ட வேண்டிய நிலைமைக்கு இன்றைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தான் ஏற்கனவே உள்ளதைப் போல அவர்களுக்கு நெட்டிலே 50 காசாக வரி போட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே இந்தத் துறையிலே 35 ஆண்டுகளுக்கு முன்னால் ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி உள் நோக்கம் கற்பித்து அவரவர்கள் கற்பனை பண்ணி விவாதம் பண்ணினால் எப்படி டிமாண்டிற்கு சம்பந்தம் இருக்கும்? நீங்களே சொல்லுங்கள். கற்பனையாக ஒரு வாதத்தைப் பண்ண ஆரம்பித்தால், அப்புறம் அந்தப் பக்கம் பண்ண ஆரம்பித்தால் அதையும் தாங்கிக் கொள்ள வேண்டும். அரசியலுக்கு வந்து ஒரு தொழிலைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால், அப்புறம் எல்லோரும் சொல்ல ஆரம்பித்தால் மோரம்ப சிக்கல் வந்துவிடும். அதை நீக்கிவிடுங்கள். என்ன வேண்டுமென்று சொல்லுங்கள். criticise பண்ணுங்கள், அந்த நடிகர்களைப் பற்றிச் சொன்ன பகுதிகளை எல்லாம் நீக்க உத்தரவிடுகிறேன். இது டிமாண்டிற்கு எப்படிப் பொருத்தம் என்று சொல்லுங்கள். உள்நோக்கம் கற்பித்தால் எப்படி? Expunge பண்ணுங்கள்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் நீக்கப்பட்டதா? இல்லையென்றால் நான் மறுப்பு சொல்ல வேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தேவையில்லாமல், இந்த மானியத்திற்குச் சம்பந்தம் இல்லாமல் பேசியவை நீக்கப்பட்டிருக்கின்றன,

திரு. அ. மலர்மன்னன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உங்களுடைய அரசினுடைய வரிக் கொள்கை ஒரு சரியான கொள்கையாக இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் செய்வார் குழுவும் சீனிவாசன் குழுவும் ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளது ஒரு முனை வரிதான் இந்தத் துறையில் இருக்க வேண்டுமென்று. ஆனால் உங்களுடைய கொள்கையோ ஒரு பக்கம் ஒருமுனை வரி, மற்றொரு பக்கம் பலமுனை வரி. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் இன்றையதினம் ஏலக்காய் ஒருமுனை வரி என்று இருந்ததை பலமுனை வரியாக ஆக்கி இருக்கிறீர்கள். ஆகவே இரும்பு, அலமாரி, பாதுகாப்புப் பெட்டகங்கள் இன்றைக்கு பலமுனை வரிக்கு சென்றிருக்கின்றன.

(பிற்பகல் 12-20)

அதுபோல், கட்டுமான தளவாடங்கள் அனைத்தையும் பல முனை வரிக்குக் கொண்டு போகிறீர்கள். மோட்டார் உதிரி பாகங்கள் மற்றும் இதர உதிரிபாகங்கள் ஆகிய இவைகளை எல்லாம் பல முனை வரிக்குக் கொண்டு செல்கிறீர்கள், டயர் மற்றும் டியுப்புகள், மருந்துகள் இவைகளை எல்லாம் பலமுனை வரிக்குக்கொண்டு போகிறீர்கள். ஆகவே, உங்களுடைய கொள்கை என்ன? ஒரு முனை வரிக் கொள்கையா? பல முனை வரிக் கொள்கையா? ஆகவே, இந்தக் கொள்கையில் இருந்து பல்வேறு நேரங்களிலே மாறுபடுகிறீர்கள். நீங்களே செய்வார் குழுவும் சீனிவாசன் குழுவும் அமைக்கிறீர்கள். அந்தக் குழு படிப்படியாக ஒருமுனை வரியைக் கொண்டு வரவேண்டும் என்று பரிந்துரைத்து இருக்கிறது. ஆனால் இன்றையதினம் நீங்கள் அதையெல்லாம மீறி, ஒரு சில கட்டங்களிலே பலமுனை ஆக்கினீர்கள். ஏற்கனவே எவர்சில்வருக்கு ஒருமுனை வரியாக இருந்ததை பலமுனை வரி ஆக்கினீர்கள். ஒன்று 6-ஐ 4-ஆக உயர்த்தினீர்கள். அதனால் ஏற்பட்ட பலன் என்ன? அதைச் சொல்லுங்கள் புள்ளி விவரத்தோடு. ஆகவே, இதுபோன்ற...... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரை மணி நேரம் ஆகிவிட்டது. 10 நிமிடம் இன்ட்டரெப்ஷன் என்று கழித்தால் கூட 20 நிமிடம் ஆகிவிட்டது. அடுத்து திரு. ஜே. ஹேமச்சந்திரன் பேசுங்கள். (குறுக்கீடு) இந்த நேரத்திலே பத்திரிகையாளர்களுக்கு ஒரு அறிவிப்பு. மாண்புமிகு பேரவைத் தலைவரும், நானும் சில பகுதிகளை நீக்கியிருக்கிறோம். இந்த நேரத்திலே வேண்டுகோளாக பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கக் கடமைபட்டிருக்கின்றோம். சில பத்திரிகைகள் விதிகளுக்குட்பட்டு இங்கே நீக்கப்படுகின்றவைகளை வேண்டுமென்றே பிரசுரிப்பதை, உறுப்பினர்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து உரிமைப் பிரச்சினையாகக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கென்று பத்திரிகையாளர் சங்கம், நிருபர்கள் சங்கம் இவைகள் எல்லாம் விதிகளுக்குட்பட்டு இருக்கின்றன. உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். இந்த விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப் பத்திரிகையாளர்கள் எல்லோரும், எல்லாப் பத்திரிகைகளுக்கும் அறிவுறுத்த வேண்டும் என்று வேண்டுகோளாக விடுகிறோம். இந்த வேண்டுகோளும் மீறப்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதையும் பத்திரிகையாளர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு ஆ. நடராசன் : நடவடிக்கை எடுங்கள். ஆனால் கடுமையான நடவடிக்கை என்று........(குறுக்கீடு, கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆமாம், விதிகள், நீங்கள் சொல்கிற சட்டம். (குறுக்கீடு, கூச்சல்) திரு. ஜே. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி இந்த அரசினுடைய முக்கியமான ஒரு வருவாயாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கூட....(குறுக்கீடு, கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி உட்கார்ந்து கொண்டே பேசுவது முறையல்ல, திரு. ரகுமான்கான். (குறுக்கீடு) அது வேறு விஷயம், பேரவை முடிவு பண்ணுகிறது. நாங்கள்

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பண்ணுகிறோம். பேரவை என்றால் உங்களையும் சேர்த்துத் தான் சொல்கிறோம். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு, கூச்சல்) திரு. ரகுமான்கான் அதை நீங்கள் சொல்லமுடியாது உட்காருங்கள். உங்கள் விருப்பத்திற்கு பேரவையை நடத்தமுடியாது. (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: விற்பனை வரியை உயர்த்திக் கொண்டே போவதன் காரணமாக ஏழை மக்கள், நடுத்தர மக்கள் இன்று கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் இதற்குக் காரணம் என்ன வென்றால்—இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே 5 வது பக்கத்திலே இருப்பது, (Additional excise duty) அதாவது கூடுதல் ஆயத் தீர்வை இன்றைக்கு துணி, சர்க்கரை, புகையிலை போன்ற பொருள்களுக்கு மத்திய அரசு விதித்து வருகிறது. மத்திய அரசு இன்றைக்கு மாநில அரசுக்கு என்ன, என்ன முறைகளிலே வரிகளை கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவோ, அதை எல்லாம் இன்று Excise duty என்ற முறையிலே வசூலித்துச் செல்கிறது. அதற்கு நியாயமான விகிதம் மாநில அரசுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்த நம்முடைய அரசு தவறிக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தினாலேதான் மத்திய அரசிடமிருந்து Excise dutyயிலுள்ள நியாயமான விகிதத்தை வாங்க முடியாத காரணத்தினால் இன்று நடுத்தர மக்களும், ஏழை மக்களும் பாதிக்கக்கூடிய முறையிலே இங்கே விற்பனை வரியைப் போட்டு, அதுவும் மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய பல்வேறு பொருட்கள்—செங்கல், மரம், மருந்து வகைகள் போன்ற பொருட்களிலேயே விற்பனை வரி போட்டு அதன் காரணமாக இன்று விலைவாசி உயர்வை ஏற்படுத்தக் கூடிய நிலைமை மாநிலத்திலே வந்திருக்கிறது.

1985 வது வருடம் நாடாளுமன்றத்திலே எக்சைஸ் ட்யூட்டி சம்பந்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்திலே இந்த மாநில அரசினுடைய பிரதிநிதிகள், அன்றைக்கு 39 சதவிகிதம் தான் மாநிலங்களுக்கு எக்சைஸ் ட்யூட்டி விகிதம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்ட நேரத்திலே அதை எதிர்க்கவில்லை. அதே நேரத்தில், மற்றைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 75 சதவிகிதம் மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். நம்முடைய அரசினுடைய பிரதிநிதிகளாக அங்கே இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை வலியுறுத்து வதற்குத் தவறிவிட்டார்கள். அதன் காரணமாக, இன்றைக்கு ஏழை மக்களை பாதிக்கக்கூடிய முறையில் இங்கே சேல்ஸ் டாக்ஸ் போட்டுக் கொண்டே இருக்கிறீர்கள்.

ஒன்று நான் சுட்டிக்காட்ட விரும்புவது, உதாரணமாக, எள் எள்ளை வாங்கக்கூடிய நேரத்திலே அதற்கு Purchase tax போடு கிறீர்கள். அதற்குப் பிறகு அதை ஆட்டி எண்ணெயாக எடுக்கும் போது அதற்கு இன்னொரு டாக்ஸ் போடுகிறீர்கள். ஆனால் உண்மையிலேயே அது யாருடைய தலையிலே போகிறது என்றால்

அந்த எண்ணெயை வாங்கி உபயோகப்படுத்தக்கூடிய நடுத்தர மக்கள், ஏழை மக்கள் தலையிலே போகிறது. அந்த வியாபாரிகள் இரண்டிற்கும் விற்பனை வரியைக் கொடுத்துவிட்டு, அதற்கும் சேர்த்து, அவர்களுக்கு கிடைக்கவேண்டிய இலாபத்தையும் சேர்த்து இன்றைக்கு விலையை ஏற்றிக் கொண்டு போகிறார்கள். லாபத்திலேதான் இந்த மாதிரி வரி விதிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் எந்தக் காலத்திலும் வியாபாரிகள் அவர்களுடைய லாபத்திலேயிருந்து இதைக் கொடுக்கவில்லை. அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய லாபத்தை வரவாக்கிக்கொண்டு அவர்களிடமுள்ள பொருள்களின் விலையை உயர்த்தி விற்பனை வரி கொடுக்கக் கூடிய ஒரு நிலை இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டி ருக்கிறது. இன்னொரு பக்கம் நாம் என்ன பார்க்கிறோம் என்றால், சரியான முறையிலே விலைகளை வைக்காமல், ரெக்கார்டுகளை வைக்காமல் இன்றைக்கு வியாபாரிகள் தப்பித்து கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதே நேரத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்படக் கூடிய நிலையும் வந்திருக் கிறது. இன்றைக்கு வியாபாரிகள் செய்வதுபோல கூட்டுறவுச் சங்கங்களால் செய்ய முடியாது. ஆகவே இந்த வியாபாரிகள் சந்தர்ப்பத்திற்கும், சூழ்நிலைக்கும் தகுந்த அளவிலே அவர்கள் விரைவிலே சரிக்கட்டிக் கொள்கிறார்கள். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அப்படி முடியாமல் இருப்பதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களிலே பல்வேறு விதங்களிலே பொருள்கள் தேங்கிக் கிடக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கூட்டுறவுச் சங்கங்கள் ஒழுங்காக, லாபகரமாக நடத்திக் கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இன்றைக்கு அதற்கு ஒரு காரணமாக நான் சுட்டிக்காட்ட விரும்புவது,**

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது,** என்று பொத்தாம் பொதுவில் ஒரு குற்றச்சாட்டு சொல்கிறார்கள். இது முறையல்ல.** என்று சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும். இப்படி பொத்தாம் பொதுவில் குற்றச் சாட்டு சொல்லிக்கொண்டு போவது சரியாக இருக்காது. ஆகவே, இது அவைக் குறிப்பில் இருப்பதும் சரியல்ல என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், ஏற்கனவே விதிமுறைகள் இருக்கின்றன. அதிகாரிகள் மீதோ உறுப்பினர்கள் மீதோ நோட்டீஸ் கொடுக்காமல் பேசக் கூடாது (குறுக்கீடு) நாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. அதிகாரிகளைப் பற்றிய அந்த விவாதம் நீக்கப்பட உத்தரவிடுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இது குறித்து திரு. எம். சுந்தரதாஸ் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து, அது வந்திருக்கிறது. அது என்னவென்றால் to discuss about the need to be on the callection of donations by the officers of the commercial Taxe u, c. Department நான் அதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி ஏற்கனவே நோட்டீஸ் கொடுத்த மாதிரி இருக்கிறது. நீங்கள் அதை பேச முடியாது. நீங்கள் அதைச் சொல்ல வேண்டாமே. வெட்டுத் தீர்மானம் அவர்கள்தான் கொடுத்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) இதையெல்லாம் பேச ஆரம்பித்தீர்களானால்,** அதைப் பேச வேண்டாம். இவைகளையும் சேர்த்து நீக்கி விடுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ஆகவே இன்று வியாபாரிகளை (குறுக்கீடு)

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சுவாரசியமாகவும், நகைச்சுவையாகவும் பேசுகிற சில கருத்துக்கள் தவறான உணர்வுகளை ஏற்படுத்துவதற்கு ஆதாரமாக ஆகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவே அதை நீக்கிவிட்டேன் பொதுவான விவகாரங்களைப் பேச வேண்டாம்.

திரு. ஜே. ஹேமச்ச்ந்திரன் : ஆகவே இன்று வியாபாரிகளை இந்த அதிகாரிகள் துன்பப்படுத்துவதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதை மாற்றிக் கொள்ளக்கூடிய முறையிலே நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிககாட்ட விரும்புகிறேன். இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், பல நேரங்களிலே இந்த வரிகள் எதற்காகப் போடப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி இந்த நாட்டு மக்களுக்கு தெரிந்துகொள்ள முடியாத ஒரு நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. வியாபார ஸ்தாபனங்கள் முன்னாலே எப்படி விலைப் பட்டியலைப் போட வேண்டுமென்று இன்றைக்கு நாம் கட்டாயப் படுத்துகிறோமோ அதைப்போல ஒவ்வொரு பொருளுக்கும் என்னென்ன விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தக் கூடிய முறையில் விளம்பரம் செய்வதற்கும், சினிமா போன்ற பல்வேறு முறைகளில் மக்கள் இந்தப் பிரச்சினைப்பற்றி தெரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றும் அதுசம்பந்தமாக நல்ல அறிவிப்புகளோ விளம்பரங்களோ செய்து அவர்களுக்கு இருக்கக்கூடிய ஐயப்பாட்டை போக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, இன்னொரு விஷயம் என்னவென்றால், வியாபாரிகளிடமிருந்து குறிப்பாகச் சொல்லுவது என்றால், நேற்றையதினம் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே 'Letters to Editor'' காலத்திலே திரு. சீனிவாசன் என்கிற ஒருவர் ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(பிற்பகல் 12-30)

கடிதம் எழுதியுள்ளார். ''Simplification on Multiplication'' என்ற தலைப்புகொடுத்து எழுதியிருக்கிறார். அதில் என்ன சொல்லுகிறார் என்றால் ஒரு ஆட்டோமொபைல் டீலர் இன்றைய தினம் 20 வகையான ரிஜிஸ்டர்களை வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டி இருக்கிறார். இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் நடைமுறையில் உள்ளவற்றை Simplify பண்ணுவதற்குப் பதிலாக, குறைப்பதற்குப் பதிலாக பல வகையிலும் அதிகப்படுத்துகிற—கூட்டுகிற—நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வியாபாரிகளுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பல்வேறு ரெஜிஸ்டர்களை மெயின்டெயின் பண்ணுகிற அவசியம் வரும் போது அதன் காரணமாக குறைபாடுகள் ஏற்படுவது இயற்கை. ஆனால் அதிகாரிகள் அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களுடைய விருப்பப்படி வியாபாரிகளை நடத்திச் செல்வதற்கு வசதியான கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால் ரெஜிஸ்டர்களுடைய எண்ணிக்கையை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால் விற்பனை வரியைப் பொறுத்த வரையில் அதையெல்லாம் ஒருமுனையாக—ஒருமுனை வரியாக ஏன் கொண்டு வரக்கூடாது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அரசு அதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பல முனைகளில், Purchase Tax என்றும், Production Tax என்றும், விற்பனை வரி என்றும் பல்வேறு வரிகளைப் போட்டிருக்கிறோம். இந்த முறைக்குப் பதிலாக Manufacturer அல்லதுImporter மட்டும் வரிக்கு உள்ளாகிற ஒரு முறையை ஏன் அரசு கொண்டு வரக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டில் வியாபாரம் என்பது பிரதானமாக உற்பத்தியாளர் அல்லது வெளியிலிருந்து இறக்குமதி செய்பவரிடமிருந்துதான் தொடங்குகிறது. எனவே இவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை அந்தந்த இடத்திலேயே—அவர்களிடமிருந்து என்னென்ன முறையில் வரி வாங்க வேண்டுமோ அந்த வகையில் வரி போட்டு வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமானால் இப்படிப்பட்ட கஷ்டங்களையும் துன்பங்களையும் மாற்ற முடியும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. எனவே அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைக் கண்டுபிடிப்பதற்கு electricity consumption அல்லது generator-ஐ உபயோகப்படுத்தினால் அதற்காக வாங்குகிற எண்ணெய் போன்றவற்றின் விவரங்களை வைத்து நல்லதொரு ஏற்பாட்டைச் செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே இருக்கிற வரி வித்தியாசம் காரணமாக நம்முடைய மாநிலத்தின் வருவாய் பாதிக்கப்படுகிறது. electrical goods மற்றும் automobile goods ஆகிய வற்றைப் பொறுத்தவரையில் வரிவிதிப்பில் நிறைய வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு ஃபேனை காரைக்காலில் வாங்கிக் கொண்டுபோய் நாகப் பட்டினத்தில் விற்கிற விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ரூ. 180 அளவுக்கு வித்தியாசம் இருக்கிறது. அதைப் போலவேதான் இன்றைக்கு சென்னையில் ஓடுகிற பல மோட்டார் வண்டிகளில் பாண்டிச்சேரி நெம்பர்பிளேட் போடப்பட்டிருக்கிறது. காரணம் பாண்டிச்சேரியில் இது போன்ற கூட்ஸ்களை வாங்குகிறபோது அங்கே நிறைய லாபம் கிடைக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமை உருவாகிறது. எனவே இங்கேயும் அதே அளவுக்கு வரி விதிப்பது என்ற முறையில ஒரே ரேட்டைப் போடுவோமானால் இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளியை நாம் வைக்க முடியும் என்று எண்ணுகிறேன். எனவே அதைப்பற்றியும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்வதன் காரணமாக பாண்டிச்சேரியில் போய் வாங்குகிறவர்கள் இனி இங்கேயே வாங்குகிற நிலைமை ஏற்படும். அதனால் அரசாங்கத்திற்கு அதிக மான வருவாய் உண்டாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து உணவுப் பண்டங்களைப் பொறுத்தவரையில் நேற்றைய தினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவற்றின் மீதான விற்பனை வரியை எடுத்துவிட்டதாக இங்கே அறிவித் தார்கள். ஆனால் நாம் என்ன பார்க்கிறோம் என்றால் இன்று காலையில்கூட ஓட்டலில் சாப்பிடும்போது Sales Tax-ஐ சேர்த்துத் தான் வசூலிக்கிற நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேலும் பண்டங் களின் விலையையும் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். நேற்றைய தினமும் இன்றையதினமும் ஹோட்டல் வியாபாரிகள் சங்கத்தின் தலைவருடைய பெயரில் விளம்பரம் ஒன்று பத்திரிகையில் வந்திருக் கிறது. அது மட்டும் காணாது. அரசு ஏற்கெனவே ஏற்றிய விலையைக் குறைப்பதற்கும் வேண்டிய உத்தரவைப் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு கிறேன். மருந்துப் பொருள்கள் மீது கூட இப்படிப்பட்ட விற்பனை வரி போடப்பட்டிருப்பதன் காரணமாக அந்த பிசினெசும் பாதிக்கப் பட்டிருக்கிறது என்றும், அதன் காரணமாக ஒரு வார காலத்திற்கு மருந்து வியாபாரிகள் மருந்து விற்கப் போவதில்லை என்றும் விளம்பரம் செய்திருக்கிறார்கள். அதையும் அரசு என்னவென்று சீர்தூக்கி பரிசீலிக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) மருந்து பொருட் களைப் பொறுத்தவரையில் அது மக்களுக்கு மிக மிகத் தேவையான

அம்சம். ஆகவே ஒரு வார காலத்திற்கு இம்மாதிரி விற்கப் போவதில்லை என்ற நிலை ஏற்படுமானால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி முடிவெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதே போன்ற மக்கள் உபயோகப்படுத்தும் பொருள் களான செங்கல், மரம் போன்ற பொருள்களுக்கு போடப்பட்டுள்ள விற்பனை வரியின் காரணமாக அந்தப் பொருள்களின் விலை ஏறும். அதுவும் அரசு 30 இலட்சம் வீடுகளைக் கட்ட திட்டம் போட்டிருக்கிறது. இன்றைக்கு ஒரு வீடு கட்டுவதற்கு 6 ஆயிரம் ரூபாய், 7 ஆயிரம் ரூபாய் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதற்குப் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு 6 ஆயிரம் ரூபாய், 7 ஆயிரம் ரூபாயில் வீடுகள் கட்ட வேண்டும் என்று சொல்லும் போது மரத்தின், செங்கல்லின் வரி உயர்வின் காரணமாக அதன் விலை உயர்ந்து அப்படிக் கட்டக்கூடிய வீடுகளை பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு) : ஏற்கெனவே 5 நிமிடங்களுக்கு அதிகமாகவே பேசிவிட்டீர்கள். சீக்கிரம் முடிக்கவும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : சினிமாத் துறையைப் பொறுத்த வரையில் அதனுடைய கண்டிஷன் மிகவும் மோசமாக இருக்கிறது. இந்த நிலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்திலே தக்கலையிலே ஒரு திரையரங்கு இருக்கிறது. அங்கே 17 ஷோ காட்டிவிட்டு முனிசிபாலிட்டிக்கு 10 ஷோ என்று கணக்கு காட்டியிருக்கிறார்கள். அதற்கும் மேலே யதார்த்தமாக முனிசிபாலிட்டியின் முத்திரை போடப்படாத டிக்கட்டுகள் விற்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்குப் பிறகும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று முனிசிபல் சேர்மனிடம் புகார் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளை போக்க வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

*திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக் கின்ற பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்— திர்வாகமும் என்ற கோரிக்கையின் மீதும், அமைச்சருடைய உரையின் மீதும், மாநில அரசாங்கத்தினுடைய கொள்கை நிலை மீதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

இங்கே இந்த கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பது இந்த மாநிலத்தின் வருமானத்திலே கணிசமான பகுதியை உள்ளடக்கக் கூடியது வணிகவரியின் மூலம் வருகிற நிதியாகும். இந்த மாநிலத்தினுடைய வருவாயின் பெரும்பகுதி அதாவது

மொத்த வருமானத்தில் 68 சதவீத வருமானம் அளிக்கக்கூடிய இந்த விற்பனை வரித்துறையைப் பொறுத்தவரையில் சேதாரமில்லாமல், மாநில அரசுக்கு முழுமையாக வந்து சேரக்கூடிய முறையில், பொதுவாக இருக்கக் கூடிய பல்வேறு விமர்சன கருத்துக்களின் அடிப்படையில் சிலபல மாற்றங்களை செய்யக்கூடிய வகையில் என்னுடைய கருத்துக்களை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பெரும்பகுதி வருமானத்தை கொண்டுவரக்கூடிய இந்தத் துறை மிகவும் கவனமாக கவனிக்கப்பட வேண்டும். மாநில அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய, விதித்திருக்கக்கூடிய வரியை, இதை வசூலிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கருவிகளாக இருக்கக்கூடிய அதிகாரிகளின் நடவடிக்கைகளைப் பற்றி குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும்.

நிதி சம்பந்தப்பட்ட விஷயம் என்ற முறையிலே, வருமானத்தைக் கொண்டு சேர்க்கிற பொறுப்புள்ள அதிகாரிகளின் செயல்முறை, வியாபாரிகளாலும், பொது மக்களாலும் எத்தகைய நிலையிலே பார்க்கப்படுகிறது என்பதை கவனித்தாக வேண்டும். சில தினங்களுக்கு முன்னால் காஷ்மீர் அரசாங்கத்தின் மாநில ஆளுநர் தன்னுடைய உரையை சட்டமன்றத்தில் நிகழ்த்தும்போது ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். ஊழலையும் முறைகேடுகளையும் ஒழித்துக்கட்டுவதற்கான தொடக்க முயற்சி என்ற முறையில் அந்த மாநில அரசு ஒரு நல்ல ஆலோசனையை முன் வைத்திருக்கிறது. அதிகாரிகள் மட்டத்திலே அதிகாரிகளின் சொத்துக்களை அவர்களின் குடும்ப உறவினர் சம்பந்தப்பட்ட சொத்துக்களை அவைகள் எப்படி பெருத்துப் போயிருக்கின்றன என்பதை விரிவாக விசாரிக்க வேண்டியது மிக முக்கியமான அம்சம் என்பதை உணர்ந்து காஷ்மீர் அரசு கொள்கை அறிவிப்பாகவே அறிவித்திருக்கிறது. அதே நேரத்தில் இந்த மாநில அரசும் அதையே ஏன் மேற்கொள்ளக்கூடாது? குறிப்பாக வணிகவரித் துறையிலாவது ஏன் மேற்கொள்ளக் கூடாது. பல உதாரணங்களை என்னாலே குறிப்பிட முடியும். அதிகாரிகள் வியாபாரிகளை நெருக்குகிறார்கள், நிர்ப்பந்திக்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கின்றன. அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானத்தை கொண்டு வந்து சேர்க்க வேண்டிய அதிகாரிகள் மிகச் சரியாக செயல்படவில்லை என்பது கடுமையான குற்றச் சாட்டாகும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை குற்றம் சாட்ட வேண்டும் என்று சொல்லவில்லை; உங்களுக்குப் புகழ் சேர்க்க வேண்டிய அதிகாரிகள் உங்களுக்கு இகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். உங்களுக்கு புகழ் சேர்ப்பதற்குப் பதிலாக இகழ் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள், துயரத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்டனங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நடவடிக்கைகள் பற்றி ஆதாரங்களோடு குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

திருப்பூரில் ஒரு சம்பவம் நடந்தது. அத்தகைய சம்பவம் ஏற்பட்டதற்கு இந்த அதிகாரிகள் நடவடிக்கைகள்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். ஆகவேதான் இங்கே நான் குறிப்பாகச்

(பிற்பகல் 12-40)

சொல்கிறேன். நான் பேசுகிற நேரத்தில்கூட ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துறையில் இந்த ஆட்சியினுடைய நடவடிக்கைகள் குற்றச்சாட்டுக்கு இலக்காகாமல் தற்காத்துக் கொள்வதற்கான முறையிலும், ஏ.சி.டி.ஓ. உட்பட அவருக்கு மேற்பட்ட அனைத்து அதிகாரிகளின் சொத்துக்களையும் பரிசீலிக்க ஒரு குழுவை நியமிக்க வேண்டும். அந்தக் குழு அவர்களின் சொத்துக்களைப் பரிசீலிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களைச் சரிப்படுத்த முடியும். அவர்களுடைய நடவடிக்கைகளை ஒழுங்காக்க முடியும் என்பதை நான் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திருப்பூர் நகரத்தில் பனியன் தொழிலுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரி முழுவதும் அரசாங்கத்திற்கு வந்து சேர்வதில்லை. அவற்றை ஆதாரத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். **

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் பல முறை சொல்லியாகிவிட்டது. பொதுவாகச் சொல்வது வேண்டாம். குறிப்பிட்ட அதிகாரி குறிப்பிட்ட லாரியை மடக்கினார் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்க சரியாக இருக்கும். ** என்று சொல்வது எப்படி நடைமுறைக்கு சரியாக வரும்? அதைத் தவிர்த்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மட்டும் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் சுப்பராயன் அவர்கள் ஒரு குற்றச் சாட்டைப் பொதுவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர் அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினர். அவருக்கு எந்த இடத்திலே குற்றம் நடைபெறுகிறது என்று தெளிவாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு உண்டு. இருந்தாலும் கூட பொதுவாகச் சொல்வது சரியாக இருக்காது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு). ** என்பதை மட்டும் எடுக்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, பொதுவாக இங்கே விவாதத்திலே இருக்கிற இந்தப் பிரச்சினைகளில் தீர்வு அளிக்க வேண்டுமென்பதற்குத்தான் நான் துணை நிற்கிறேன். வெறுமனே டெக்னிக்கல் கிரவுண்டில் மட்டும் தீர்வு அளிக்க முடியாது. பேரவையிலே மக்களுடைய பொதுவான பிரச்சினைகளைப் பிரதிபலிக்க வேண்டிய விதத்திலே பிரதிபலிக்கிறோம். அப்படிப் பிரதிபலிக்க வேண்டிய பொறுப்பு ஒரு சட்

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மன்ற உறுப்பினருக்கு உண்டு. நான் குறிப்பிடுவது ஒரு கட்சியின் சார்பிலே அல்ல. பிரச்சினைகள் எந்த அளவிற்கு அதிகாரிகளால் பெரிதாக்கப்படுகின்றன, அதிகாரிகளால் எந்த அளவிற்கு சிறுமைப்படுத்தப்படுகின்றன என்பதைத்தான் பொதுவான குற்றச்சாட்டாக இங்கே வைக்க விரும்புகிறேன். இங்கே நான் அதைக் குறிப்பிடக் காரணம், நீங்களும் குறித்துக் கொள்ள வேண்டும், அமைச்சரவர்களும் குறித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். திருப்பூரை விசேஷமாகக் கவனித்து, அங்கே பனியன் தொழிலிலே நடக்கிற நடவடிக்கைகளைப் பற்றிய விஷயங்களை நெஞ்சிலே இறுத்திக்கொண்டு, இந்த விஷயத்திலே சர்ப்பிரைஸ் விசிட் செய்து என்ன நிகழ்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று பொதுவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே குறிப்பிட விரும்புவது, பனியன் தொழில் பற்றி இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பனியன் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அது தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது.

தேசிய விடுதலை நிகழ்ந்தபோது 1950 வாக்கில் இந்தியாவினுடைய ஒட்டுமொத்த பனியன் உற்பத்தியில் 70 சதவிகிதத்தை திருப்பூர்தான் தந்துகொண்டிருந்தது. ஆனால் இன்றைக்கு நிலைமை வேறு. பல்வேறு மாநிலங்களிலே பனியன் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுவிட்டன. அந்தந்த மாநில அரசுகள் ஏராளமான சலுகைகளை அந்தத் தொழிலுக்கு வழங்கியதன் மூலமாக தேசிய அளவில் திருப்பூர் கைப்பற்றியிருந்த மார்க்கெட்டில் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் தேசிய மார்க்கெட்டை கைப்பற்றும் வாய்ப்பு இல்லாததால், உள்ளூர் மார்க்கெட்டை இழந்து ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். ஏற்றுமதி வாய்ப்புள்ள தொழிற்சாலைகள் மட்டும்தான் இயங்கிக் கொண்டு வருகின்றன. உள் நாட்டு மார்க்கெட்டை நம்பியிருந்த தொழிற்சாலைகள் முற்றிலும் வேலை இழந்துவிட்டன இதன்மூலம் வேலை இழப்பு ஏற்பட்டு, தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த பிரச்சினை கடுமையான அதிருப்தியை தோற்றுவித்திருக்கிறது. ஆகவே தொடர்ந்து இந்த மாநில அரசிடம் எடுத்துச் சொல்லும் அடிப்படையில் கேரளம், மேற்கு வங்கம், கர்நாடகம், பஞ்சாப் மாநிலங்களோடு தமிழ்நாட்டு பனியன்கள் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வேண்டுமென்னும்போது பிற மாநிலங்களில் சுமத்தப்படாத விற்பனை வரியை திருப்பூரில் மாத்திரம் சுமத்தியிருப்பது என்பது முற்றிலும் அரசு சொல்கிற கொள்கைக்கு பொருத்தமற்றதல்லவா? ஆகவே அதைக் கைவிட வேண்டுமென்று இங்கே குறிப்பாக வலியிறுத்த விரும்புகிறேன். இதனால் வருமானத்தை இழக்க வேண்டிய அவசியமேயில்லை- அவற்றை ஒரு முனைப்படுத்தி, நூல்மீது அந்த வரியைப் போட்டு, பனியன் மீதுள்ள வரியைத் தவிர்த்தால், அரசாங்கத்திற்கு வருமான இழப்பும் ஏற்படாமல் செய்துகொள்ளலாம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து பெரும்பகுதி விற்பனை வரி இங்கே யாரைப் பாதிக்கிறது என்பதைக் குறிப்பாகத் தெரிந்துகொள்ளவேண்டும். பொது மக்களைத்தான் பெரிதும் பாதிக்கிறது மத்திய அரசு மாநிலங்களுக்குப் பல ஒதுக்கீடுகள் செய்வதைப் பார்க்கிறோம். எல்லாத் துறைகளுக்கும் செய்கின்ற ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை. போதுமான நிதி ஒதுக்கீடு இல்லை என்பதை நாம் பார்க்கிறோம். இந்த நிதி பிரச்சினை தோன்றுவதற்குக் காரணம் மத்திய அரசு இந்த மாநில எல்லைக்குள்ளே இருந்து பெறுகிற வரி விதிப்பு மூலம் பெறுகிற இன்ன பிற வருவாய்களின் மூலம் சேகரித்துக் கொள்கின்ற நிதியில் போதுமான நியாயமாக பங்கீட்டை இந்த மாநிலத்திற்கு வழங்குவதில்லை. இந்த நியாயமான பங்கீடு இல்லாதநிலையில் இந்த மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்வதில் நடைமுறையில் நிதி நெருக்கடி தோன்றுகிறது. மாநிலத்திற்கு நடைமுறையில் நிதி நெருக்கடி தோன்றுவதற்குக் காரணமே, மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்குவதற்கு கடைப்பிடிக்கின்ற விதிமுறைகள் சரியில்லை என்பதுதான். ஆகவே நமக்குப் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை உரக்க, உரிமையோடு வலியுறுத்த இந்த மாநில அரசு தவறியிருக்கிறது. அந்த உரிமையை வலியுறுத்தவேண்டும். எதிர்க்கட்சிகளின் துணையோடு வலியுறுத்தவேண்டும் என்பதை இங்கே நான் குறிப்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் சொத்து வரி உயர்வை ரத்து செய்திருப்பதைப் பற்றி பெருமைபடத் தெரிவித்தார்கள். வரி உயர்வை ரத்து பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். சகோதரர் திரு. மலர்மன்னன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அறிவிக்கப்பட்ட வரியை மீண்டும் திரும்ப பெறுகிற நிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அறிவிக்கப்பட்ட வீட்டுவரியை உயர்த்தியது இந்த மாநிலத்தின் அனைத்துத்தரப்பு மக்களிடம் கடுமையான அதிருப்தியையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியிருக்கிறது. யாருடைய பரிந்துரையின் காரணமாக இந்த ரத்து வெளியிடப்படவில்லை. இதற்குக் காரணம் மாநில மக்கள் உஷார் தன்மையோடு இருந்து, மாநிலத்திலே இருக்கின்ற எதிர்க் கட்சிகளும் உஷார் தன்மையோடு இருந்து மக்களைப் பாதிக்கின்ற வரி உயர்வு காலத்தே எதிர்த்து போராட்டக்களம் அமைத்த காரணத்தினாலேதான் இந்த மாநில அரசு நீதமான, அநியாயமான வரி உயர்வைத் திரும்பப் பெற்று இருக்கிறதே தவிர, மாநில மக்களின் துயரத்தை உணர்ந்து அல்ல என்பதை மாநில அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே மாநில மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பிரச்சினையிலே அரசாங்கம் தவறான நடவடிக்கை எடுத்ததால், மக்கள் காலத்தே கூர்மையாக எதிர்த்துப் போராடினாலே ஒழிய, இந்த மாநில அரசிடத்திலிருந்து எந்தச் சலுகையையும் சுலபமாகப் பெறமுடியாது என்பதற்கு இது ஒரு ஸ்பஷ்டமான உதாரணம். இதுதான் வீட்டுவரியை உயர்த்தியதை வாபஸ் பெற்றதற்குக் காரணம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அவற்றில் உள்ள நியாயத்தைக் கருதியும், செய்யவேண்டிய அவசியம் கருதியும் நான் வலியுறுத்துகிறேன். வணிக வரித்துறை அதிகாரிகளிடம் இந்த அரசு உஷார் தன்மையோடு இருக்கவேண்டும். அவர்களைக் கவனிக்கவேண்டும். வணிக வரித்துறை அதிகாரிகள் தான் முற்றிலும் அரசுக்கு வருகிற வருமானங்களை அரிக்கிற, இடையிலே அழிக்கிற கரையான்களாகச் செயல் படுகின்றார்கள். இதை அரசு உணர்ந்து இன்றைக்கு உஷார் தன்மையோடு பரிசீலித்து அந்த அதிகாரிகளின் நடவடிக்கைகளை விசாரணைக்கு உட்படுத்துவது அவசியமான தவிர்க்கக்கூடாத கடமையாக அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதை சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம் பற்றியை 4 ஆம் என் மானியக் கோரிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்களை ஆதரித்து வைக்க விரும்புகிறேன் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் காலத்திலே வறட்சித் திட்டங்கள் பெரும்பான்மையாக தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏழைஎளியவர்களுக்கு எந்தவிதமான வரிவிதிப்பும் இன்றி, தொழில் அதிபர்களின் மீது ஒரு சில முதலாளிகள் மீது வரிகளை இட்டுத்தான் இந்த காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கேயுள்ள அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களும் நன்கு அறிந்துகொண்டிருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே, ஒரு சில கருத்துக்களை வணிக வரித் துறை மானியம் மூலமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் கடந்த பத்து ஆண்டுகளிலே படிப்படியாக அந்தப் புள்ளி விவரங்களை ஆய்ந்து தெரிந்துகொண்டால், எப்படிப்பட்ட வரி வருவாய் வாயில்களை அரசுக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதைப்பற்றி எண்ணுகின்றபோது உண்மையிலேயே அந்த அதிகாரிகளை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டிலேயே 14 சதவிகிதம் அதிகமாக வருவாய் வாயில்களை இந்தத் துறையின் மூலம் அரசுக்கு ஏற்படச்செய்து கொடுத்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை எண்ணுகிறபோது, உண்மையிலேயே மீண்டும் ஒரு முறை அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று இன்றையதினம் இந்த வணிக வரித் துறை அமைச்சராக இருக்கின்ற பெருமைமிக்க சகோதரர் அவர்களுடைய தன்னடககத்தால் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இன்னும் பல நன்மைகளை இந்தத் துறையின் மூலம் செய்து வந்து இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-50]

அடுத்து. புதிதாக அரசு கட்டிடங்களை அமைக்க பல்வேறு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்தத் திட்டங்களைத் தொடங்க இருப்பதாக இங்கே புத்தகத்திலே சொல்லியிருக்கிறார்கள். சிவகாசி பகுதியிலே இருக்கின்ற அச்சுத் தொழில், பட்டாசு தொழில், தீப்பெட்டித் தொழில் போன்றவைகளின் மூலமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை வரியாக வருவாய் வருகிறது. இதுதவிர மத்திய அரசுக்கு எக்ஸைஸ் டூட்டியாக கிடைக்கின்ற 45 கோடி ரூபாயிலிருந்து தமிழக அரசின் பங்காக பணம் பல கோடி வருகிறது: அங்கே C.T O. (Enforcemen) அலுவலகம், C.T.O. (Adm nistr icn) 1 மற்றும் 2, மற்றும் D.C.T.O. அலுவலகங்கள் எல்லாம் சேர்த்து 5 அலுவலகங்கள் இருக்கின்றன. இப்படி இருக்கின்ற இந்த 5 அரசு அலுவலகங்களில் ஒன்று கூட அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கவில்லை. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே வணிக வரித் துறை அலுவலகத்திற்கு தனியாகக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லியிருக்கிறேன். இன்றையதினம் தாய் உள்ளத்தோடு எதையும் அணுகுகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடமும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்களிடமும் சிவகாசியில் வணிக வரித் துறைக்கு என்று தனியாகக் கட்டிடங்களை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே 63 சோதனைச் சாவடிகள் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. முறையாக இந்த 63 சோதனைச் சாவடிகள் மூலமாக அரசுக்கு வருகின்ற வருவாய் வராமல் இருக்கும் வகையில் அங்கே ஒருசில ஒழுங்கீனங்கள் நடைபெற்று வருவதாக தகவல் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் அரசு களைகின்ற வகையிலே இதற்காக என்று தனியாக ஸ்குவாட் அமைத்து கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எல்லாவற்றையும் விட தலையாய முக்கிய பிரச்சனை ஒன்று. இன்றையதினம் இந்திய துணைக் கண்டத்திலேயுள்ள சிவகாசி, கோவில்பட்டி, ஏழாயிரம் பண்ணை, சாத்தூர் போன்ற இடங்களிலே எல்லாம் ஏராளமான தீப்பெட்டி தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே தீப்பெட்டிகளை உற்பத்தி செய்கிறார்கள். ஏறக்குறைய 7,500 ஆலைகள் அங்கே இருக்கின்றன, 10 லட்சம் தொழிலாளர்கள் தீப்பெட்டி ஆலைகளில் வேலை பார்க்கிறார்கள். அங்கே கையினால் தீப்பெட்டியை உற்பத்தி செய்கிற சிறிய உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். அதுபோல் நடுத்தர உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். 1000 நடுத்தர ஆலைகள் இருக்கின்றன. அதிலே இரண்டு லட்சம் பேர் வேலை செய்கிறார்கள். விம்கோ போன்ற நிறுவனங்களில் இயந்திரங்களின் மூலமும் தீப்பெட்டி உற்பத்தி செய்கின்ற தொழிலை செய்கிறார்கள்.

விம்கோ போன்ற பெரிய நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்து விற்பனைச் சந்தைகளை பிடிக்க முடியாத அளவுக்கு இருக்கிறார்கள். எப்படி என்றால் உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு தீப்பெட்டிகளை பண்டல்களாக ஏற்றி அனுப்பும்போது அங்கே இருக்கின்ற அரசுகளுக்கு 8 விழுக்காடு விற்பனை வரி செலுத்த வேண்டியிருக்கிறது. அதே போன்று நம்முடைய அரசு மூலயாக கடந்த ஆண்டுகளில் எல்லாம் இரண்டு விழுக்காடு விற்பனை வரியை மொத்தமாக செலுத்தி வந்தார்கள். இந்த ஆண்டிலிருந்து 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரையில் உற்பத்தி செய்கின்ற தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு நன்மை செய்கின்ற வகையில் வரியை நீக்கியிருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் மிடில் செக்டார் என்று சொல்லப்படுகின்ற வகையினால் தீப்பெட்டி உற்பத்தி செய்கின்ற நடுத்தர தீப்பெட்டி உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எப்படி என்றால் 1 லட்சத்திலிருந்து 2 லட்சம் வரை 1 விழுக்காடு, $2\frac{1}{2}$ லட்சத்திலிருந்து 5 லட்சம் வரை $2\frac{1}{2}$ விழுக்காடு, 5 லட்சத்திற்கு மேல் 3 விழுக்காடு என்று வரியை போட்டிருக்கிறார்கள். அவர்களும் கையினால் செய்கின்ற அந்தத் தொழிலை அங்கேயுள்ள அத்தனை கிராமங்களிலிருந்தும் வருகின்ற தொழிலாளர்களை வைத்துத்தான் செய்கிறார்கள். சிறிய டி. கிளாஸ் பாக்டரி பேமிலி அங்கத்தினர்களை வைத்துக்கொண்டு, அத்தனை கிராம வாசிகளும் தங்களை தீப்பெட்டி உற்பத்தியாளர்களாக மாற்றி இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி போன்ற இடங்களில் இருக்கின்ற அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் இன்றையதினம் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கின்ற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துக்கொள்வார்கள். அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப இன்றையதினம் ஆயிரம் (1000) நடுத்தர தீப்பெட்டி உற்பத்தியாளர்களையுடைய ஆலைகள் இந்த 1 ஆம் தேதியிலிருந்து 10 தினங்களுக்கு மேலாக மூடுவதாக அறிவிப்பு செய்து இன்று காலையிலிருந்து அந்த தீப்பெட்டி ஆலைகள் எல்லாம் மூடிவிட்டார்கள். ஏனென்றால் அவர்களும் கையினால் உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்களை வைத்து தான் இந்தத் தொழிலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எப்படி விம்கோ தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் ஒரு பண்டிலை 110 ரூபாய்க்கு வட மாநிலங்களில் விற்றார்களேயானால் இங்கேயிருக்கின்ற நடுத்தர உற்பத்தியாளர்கள் இங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் நன்மைகளைச் செய்வதோடு இன்னும் பல காரியங்களையும் செய்ய வேண்டிய கால சட்டத்திலே இருக்கின்றபடியால் அங்கே வெளி மாநிலத்திலேயும் விற்பனை வரியைச் செலுத்துகிறார்கள். இங்கே உற்பத்தியாகின்ற மாநிலத்திலேயும் விற்பனை வரியைப் போடு

கிறார்கள். இதை எண்ணித்தான் அவர்கள் அரசுக்குத் தெரியப் படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, இன்றையதினத்திலேயிருந்து பத்தாம் தேதி வரை அடையாள வேலைநிறுத்தம் செய்வதற்காக தீப்பெட்டி அலுவலகங்களை மூடியிருக்கிறார்கள். எதையும் தாய் உள்ளத்தோடு, தங்க மனதோடு அணுகுகின்ற புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் அருமைச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் பெருமானின் நல்ல துணையோடு தீப்பெட்டி அலுவலகங்களை மீண்டும் திறப்பதற்கும், ஏறத்தாழ இரண்டு இலட்சம் தொழிலாளர்களுடைய வாழ்விலே மீண்டும் ஒளி பெற வேண்டும் என்பதற்காக இந்த வணிக வரியை எப்படியேனும் தாய் உள்ளத்தோடு செயலாற்றுகின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவரிடம் அணுகி, நல்லமுறையில் அதைத் திருப்பிப் பெறுவதற்கு வழி செய்து அனைத்து நன்மைகளையும் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டிக்கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எப்படி நேற்றையதினம் டாக்டர் நாவலர் அவர்கள் இங்கேயிருக்கின்ற உணவுப் பொருள்களுக்காக விதிக்கப்பட்ட வரிகளை நீக்கினார்களோ அதேபோன்று இந்த விற்பனை வரியையும் நீக்கி அந்தப் பகுதி மக்களின் உள்ளங்களிலே நல்லதொரு ஒளிவிளக்கை ஏற்றி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. வணிகவரி மற்றும் ஏனைய வரிகள் மானியக் கோரிக்கையின்மீது ஜனதாக் கட்சியின் சார்பாகப் பேசும்பொழுது, எட்டாவது பேரவை கூடிய பிறகு மிக அதிகமான அளவிலே வணிகர்களுக்கு இந்த மன்றம் வரி விதித்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்களே உங்கள் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். வருகின்ற வரி வருமானமானது மொத்த வருவாயிலே 68 சதவீதம் வந்திருக்கிறது என்று சொல்லி. அப்படியிருக்கக்கூடிய ஒரு இனத்திலே மேலும் வரி விதிப்பது தேவைதானா, இது நியாயம் தானா என்பதைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் சொல்லியிருப்பது 80 கோடிக்கு என்று. நீங்கள் சொல்லியிருக்கும் இடங்களில் இப்படி வரி வசூலித்தால் ஏறத்தாழ 500 கோடி வரியாக வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பல இனங்களிலே நீங்கள் வரி போடுகிறீர்கள். வரிக்கு வரி, அதிக வரி. வரியே இல்லாத விற்பனைக்குக் கூடுதல் வரி. வரி வசூலித்த பாவத்திற்காக வரிக்குவரி என்று பல முனைகளிலே வரி போட்டிருக்கிறீர்கள். ஒருமுனையாக இருந்த ஏலக்காய்க்குப் பலமுனை வரி. குடிசைத் தொழிலான தீப்பெட்டிக்கு பல முனைகளிலே வரி.

இப்படி மனம் போன போக்கிலே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்குப் பற்றாக் குறைதான் காரணம் என்று சொல்கிறீர்கள். பற்றாக்குறைக்கு காரணம் என்ன? 1981-லே மதுவிலக்கை நீங்கள் தளர்த்தினீர்கள். மாண்புமிகு உறுப்பினர்

திரு. சி. சின்னராசு அவர்கள் விவரம் கேட்டார்கள். வருமானத்திற்கு வழி என்ன என்று கேட்டார்கள். 1981 லே மது விலக்கைத் தளர்த்தினீர்கள், உங்களுக்கு அதிகப்படியாக வந்த வருமானத்தை என்ன செய்தீர்கள்? 1981-லே சத்துணவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக்கொண்டு வந்தீர்கள். அதிலே கொண்டுபோய் அந்தப் பணத்தையெல்லாம் முடக்கினீர்கள், அந்தச் சத்துணவுத் திட்டத்திலே வருஷத்திற்குச் செலவழிக்கின்ற 200 கோடி ரூபாயிலே 100 கோடி ரூபாய்க்கு மேல் ஏழைகளுக்கு என்று சென்று அடையவில்லை என்று சொல்லி பலமுறை இந்த மன்றத்திலே விளக்கமாக நான் பேசியிருக்கிறேன். அதிலே ஒரு சிக்கனத்தைக் கடைபிடிக்கலாம் அல்லவா? அதிலே சிக்கனத்தைக் கடைபிடித்து 100 கோடி ரூபாயை மிச்சப்படுத்தியிருந்தால் இந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்கலாம் அல்லவா? அதை விடுத்து வணிகர்கள்தானா உங்களுக்குக் கிடைத்தார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் ஆறாம் தேதி கடைஅடைப்பு......

டாக்டா கே. சமரசம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தில் அந்தப் பணம் முடக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அவரும், அவரது கட்சியும் சத்துணவுத் திட்டத்தை வரவேற்கிறதா அல்லது மறுக்கிறதா? அதற்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டும்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: சத்துணவு போட ஆரம்பித்ததே நாங்கள்தான். பெருந்தலைவர் அவர்கள் காலத்தில் மதிய உணவு என்று வைத்திருந்தோம். அப்பொழுது செலவழித்தது 14 பைசா; இப்பொழுது நீங்கள் செலவழிப்பது 45 பைசா. ஆனால் ஊரிலே 86 இலட்சம் குழந்தைகளுக்குப் போடுவதாகக் கணக்கு எழுதி—இப்படிக் கணக்குத்தான் எழுதப்படுகிறதே தவிர 86 இலட்சம் குழந்தைகள் சாப்பிடுகிறார்களா? ஏழைகள்தான் சாப்பிடுகிறார்கள். அது 20 இலட்சம் அல்லது 30 இலட்சம் தான் வரும். அப்படியானால் 100 கோடி ரூபாய்தான் செலவழியும். அப்படி வந்தால் இந்த 200 கோடி ரூபாய் செலவுக்கு வராது என்பதுதான் என்னுடைய விளக்கம். இந்த விளக்கத்தை யார் கேட்டாலும் சொல்கிறேன். அமைச்சரவர்கள் அதை பரிசீலித்தால் தீர்வு கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 100 கோடி ரூபாய்க்கு மேலே சத்துணவுத் திட்டத்திலே செலவு ஆகாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகாது என்று வணிக வரித்துறை மானியத்தில் அவர்கள் பேசுவது எப்படிப் பொருத்தம் என்று எனக்குத் தெரியவில்லை. நிதியைச் சேர்க்க வேண்டுமென்ற கருத்தில் ஆலோசனையாகச் சொல்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 1—00)

பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லி சத்துணவுத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய்தான் ஆகும்; மீதம் எல்லாம் தெண்டமாக இருக்கிறது என்று சொல்வது பொருத்தமாக இல்லை. பெரும் தலைவர் காமராஜர் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததுபற்றி நாங்கள் குறை சொல்லவில்லை. அவர்தான் மதிய உணவு திட்டத்தை ஆரம்பித்தார் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்ததற்கு என்ன காரணம் என்று பல தடவை பேசி, அது முடிந்து விட்டது. பேசி முடிந்த பிறகு மீண்டும் மீண்டும், அதுபற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை. சத்துணவுத் திட்டத்தில் இந்த இடத்தில் இன்ன தவறு என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அதை விட்டுவிட்டு, ஒட்டுமொத்தமாக குறை சொல்வது பொருத்தமற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பலமுறை இந்த மன்றத்தில் பெயரைச் சொல்லி, ஊரைச் சொல்லி, புகார் சொல்லியிருக்கிறேன் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதைப்போன்று இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு விதிக்கப்பட்டிருக்கிற விற்பனை வரி காரணமாக தமிழ்நாடு முழுவதும் இருக்கிற வணிகர்கள் கடை அடைப்புச் செய்திருக்கிறார்கள். இந்த வரி விதிப்பினால் வணிகர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அமைச்சரவர்கள் இதிலே கவனம் செலுத்தி வணிகர்களை அழைத்துப் பேசி, எந்த எந்த வகையில் அவர்களுக்கு சிரமம் இருக்கிறது என்று கேட்டு, அதை நிவர்த்திப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் வணிகர் சங்கம், மதுரை உணவுப் பொருள் விற்பனையாளர் சங்கம், போடிநாயக்கனூர் ஏலக்காய் உற்பத்தியாளர் சங்கம், மதுரை வெல்லம் விற்பனையாளர் சங்கம், சென்னையில் மின்பொருள் விற்பனையாளர் சங்கம், கழுகு மலையில் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கம், சென்னையில் மருந்துபொருள் உற்பத்தியாளர் சங்கம் இப்படி ஏறத்தாழ 50 சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. வணிகர்களுடைய நிலைமை வர, வர மிகவும் மோசமடைந்து கொண்டிருக்கிறது என்று அவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களால் இந்த வரியை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எப்படி ஓட்டல்களில் உணவுப் பொருள்களுக்கு விதித்த வரியை வாபஸ் பெற்றிருக்கிறீர்களோ அதைப்போன்று இந்த வரியையும் வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, வரியே இல்லாத சரக்குகளுக்கும் வரி போட்டிருக்கிறீர்கள். செக்கன்ட் சேல்ஸ் என்ற முறையில் வாங்கிச் செல்லக்கூடிய பொருள்களுக்கு முதலிலேயே வரி போட்டுவிடுகிறீர்கள்; அதற்குப் பின்னால் வரியே கிடையாது.

வரி இல்லாத பொருள்களை செக்கன்ட் சேல்ஸுக்கு வாங்கிச் செல்கிற நேரத்தில், ரவை, மைதா, பட்டாணி போன்ற பொருள்களுக்கு வரி இல்லை; வரியே இல்லாத அந்த சரக்குகளுக்கு கூடுதல் வரி என்ற முறையில் எப்படி வரி விதிக்க முடியும்? இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும்.

சோதனைச் சாவடிகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முழுவதும் 63 சோதனைச் சாவடிகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விருதுநகரில் மட்டும் 4 சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. மொத்தம் 98 நகராட்சிகள், 3 மாநகராட்சிகள் தான் இருக்கின்றன. எல்லாம் சேர்த்துப் பார்த்தால் 101 நகராட்சிகள். இருக்கிற வணிகச் சாவடிகளோ 63. இந்த 63 சோதனைச் சாவடிகளில் விருதுநகரில் மட்டும் 4 வைக்கப் பட்டிருப்பது ஏன் என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று கேட்கிறேன். (குறுக்கீடு) விருதுநகரில் மட்டும் 100 கோடி ரூபாய்க்குமேல் வருமானம் வருகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? நான்கு பக்கமும் சோதனைச் சாவடிகளைப் போட்டு அந்த வணிகர்களை தொல்லைபடுத்த வேண்டுமா என்று கேட்கிறேன். பல ஆண்டுகளாக அங்கிருக்கிற வணிகர்கள் இப்படி தொல்லைப் படுகிறார்கள். இதிலே ஏதோ அரசியல் இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கொஞ்ச காலத்திற்கு முன்னால் இரண்டு சோதனைச் சாவடிகளை எடுத்துவிடப் போவதாக சொல்லப்பட்டது. ஆனால் இப்போது புறம்போக்கு நிலத்தில் கூரை வேய்ந்து போட்டு செயல்பட்டுவருகிற சோதனைச் சாவடிக்கு தொலைபேசி வசதி எல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதைப்பார்த்தால் அங்கே நிரந்தரமான கட்டடம் கட்டப்படுமோ என்று அச்சம் ஏற்படுகிறது.

சோதனைச் சாவடிகள் நடைபெறும் விதம், அங்கே நடைபெறும் ஊழல்கள் பற்றி விமர்சனம் செய்ய நான் விரும்பவில்லை. ஏனென்றால் இதற்கு முன்னாலே பலகடவை விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. அதுபற்றி அரசுக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் ஏன் அதை எடுக்க மறுக்கிறார்கள் என்று தெரியவில்லை.

எங்கள் ஊரிலேதான் பொதுப்பணித்துறை அமைச்சரும் இருக்கிறார். அவரும் ஒரு வணிகர்தான். அவர் இதை

** ** ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): வரி கட்டுகிறவர்களுக்குப் பிரச்சினை இல்லை. வரி ஏய்ப்பு செய்கிறவர்க்குத்தான் சோதனைச் சாவடி. வரி ஏய்ப்பைத் தடுக்கத்தான் சோதனைச் சாவடி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரைப்பற்றி

** மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு உள் நோக்கத்தோடு பேசியிருக்கிற அந்தக் குறிப்பை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட உத்தரவிடுகிறேன். மானியக் கோரிக்கைபற்றி மட்டும் சுருக்கமாகப் பேசி, முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசிக்கொண்டிருப்பது பேரவை மாற்றுத் தலைவர் அவர்களைப் பார்த்து ஆனால் ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்கள் என்னைப் பார்த்து கையை நீட்டிப் பேசுவது முறையா? இதையெல்லாம் நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தேவையில்லாதவற்றைப் பேசுகிறார்கள். வேண்டுமானால் அவர்கள் பேசும்போது பேசட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை.

இன்னொன்றையும் கூட நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சோதனைச் சாவடிகளை வைத்து வணிகர்களைத் துன்புறுத்துவதோடு மக்களையும் கொன்றுவிடுகின்ற நிலைமைதான் இருக்கிறது. மேலும் சோதனைச் சாவடிகளால் வரிசையாக பல லாரிகளை நிறுத்தி வைத்திருக்கின்ற காரணத்தால் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுகின்றன. 1985 86 ஆம் ஆண்டு விற்பனை வரி மானியத்தில் நான் பேசும்போது இதைச் சொன்னேன். சோதனைச் சாவடி இருக்கின்ற இடத்தில் ஒரு ஏக்கர் நிலத்தை வாங்கி அந்த இடத்திற்கு இந்த லாரிகளை டைவர்ட் செய்து அங்கே நிறுத்துகிற வகையில் ஏற்பாடு செய்தால் விபத்துக்களைக் குறைக்கலாம் என்று நான் சொன்னேன். அப்போது வணிகவரித் துறை அமைச்சராக இருந்தவர் இதைக் கவனித்து ஆவன செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் செய்யவில்லை,

அதேபோல் சென்ற 29-3-1987 அன்று மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் விருதுநகருக்கு வந்திருந்தார்கள். குறிப்பாக அமைச்சர்கள் ஒரு தொகுதிக்கு வருகிறார்கள் என்றால் முன்கூட்டியே அறிவிப்பது வழக்கம். அப்படி அறிவித்தால் அவர்களிடத்திலே சென்று அங்குள்ள நிலைமையை விளக்குவதற்கு வசதியாக இருக்கும். ஆனால் 28-3-1987 அன்று மாண்புமிகு வணிவரித் துறை அமைச்சர் அவர்கள் விருதுநகருக்கு வந்தது குறித்து முன்கூட்டியே எங்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. அவ்வாறு வந்துவிட்டுச் சென்றதால் அவர்களிடத்தில் ஒன்றும் சொல்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. எனவே அமைச்சர்கள் வருவது குறித்து முன்கூட்டியே அறிவித்தால் தான் வசதியாக இருக்கும்.

அடுத்து வணிகர்கள் வணிகவரி அலுவலகத்திற்குச் சென்றால் அங்கே அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இடையாது. அது போன்று வணிக வரித் துறை அதிகாரிகளுக்கும் எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆயிரம் கோடிக்கு மேல் ரூபாயை அவர்கள் வசூல் செய்து அரசுக்குக் கொடுக்கிறார்கள். இந்த நிலையில் இதற்காக ஒருசில கோடி ரூபாயை செலவு செய்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் அரசுக்கு என்ன நஷ்டம் என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே வணிகவரி அலுவலகத்தில் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணிகர்களுக்கு விற்பனைவரி அப்பீலில் பாதகம் ஏற்பட்டால் உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்கின்ற உரிமை இருந்தது. அதையும் நீங்கள் தடுத்திருக்கிறீர்கள், இதை எல்லாம் சரிபார்த்து நிவர்த்தி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நகராட்சியிலே வீட்டுவரி..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): அது குறித்து அதற்குரிய மானியக் கோரிக்கையிலே பேசலாம். இப்போது தேவையில்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வணிகவரி பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சிறு சேமிப்பில் வணிகர்கள் மிகுந்த அளவில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். சென்ற ஆண்டு தமிழ்நாட்டிலே காமராஜ் மாவட்டம் தான் சிறு சேமிப்பிலே முதலிடம் பெற்றது என்ற அளவுக்குப் பரிசினைப் பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசினைப் பெற்றிருக்கிறார்கள். மேலும் அமைச்சர் வரும்போது ஆர்ச் அமைக்கவேண்டுமென்றாலும் மின் அலங்காரம் செய்யவேண்டும் என்றாலும் வணிகர்கள்தான் உதவுகிறார்கள். அரசியல் கட்சி போன்றவற்றைப் பொறுத்தவரையில் யாருக்கு வேண்டுமானாலும் பொதுக்கூட்டம் மற்றும் மாநாடு நடத்துவதற்கு வணிகர்கள் தான் பணம் கொடுக்கிறார்கள். இப்படி எல்லாம் உதவக்கூடிய வணிகர்களை வாழவிடுங்கள் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது சோதனைச் சாவடிகள் தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். கர்நாடக மாநிலத்தில் சோதனைச் சாவடிகள் இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொன்னது என்னவென்றால் தமிழ்நாடு முழுவதற்கும் 63 சோதனைச் சாவடிகள்தான் இருக்கின்றன. அவற்றில் 4 சோதனைச் சாவடிகளை விருதுநகரில் மட்டும் வைக்கவேண்டிய அவசியம் என்ன, ஆகவே அதனைக் குறைக்கவேண்டும் என்பது தான்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் 'பொது விற்பனை வரியும், ஏனைய வரியும் தீர்வைகளும்-நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கக்கூடிய கோரிக்கையின் கீழ் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்திலே எடுத்து வைக்க முன்வருகிறேன்.

இறைக்க, இறைக்க ஊறும் ஊற்றுப்போல், வெட்ட வெட்ட துளிர்விடும் மரம் போல், அரைக்க அரைக்க மணக்கும் சந்தனம் போல், அள்ள, அள்ளக் குறையாத அமுத சுரபியாக விளங்குவது இந்தத் துறை என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இப்படிப்பட்ட, ஒரு அரசாங்கத்தின் கஜானாவுக்கு அத்தியாவசியமான வரவு வைக்கக்கூடிய இந்தத் துறையின் மீது நான் சில உணர்வுகளை இந்த மன்றத்தில் பகிர்ந்துகொள்வதில் பெருமைப்படுகிறேன். நாடு என்பது ஒரு எல்லைக்கோடு அல்ல என்பதை எண்ணிப்பார்த்து இந்த நாட்டிலே வாழக்கூடிய சமுதாயம், அந்த சமுதாயத்தில் உழலக் கூடிய பொது மக்களுடைய இதயத்தில் எந்த அளவுக்கு நாம் இருக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் அந்த நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தலைவனாக, முதல்வனாக இருக்க முடியும் என்பதை இந்த அரசும், இந்த அரசை உருவாக்கிய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களும் உணர்ந்திருக்கிற காரணத்தால் தான் நிதிநிலை அறிக்கையிலே சொன்ன வரிவிதிப்பிலே கூட 10 கோடி ரூபாயை இழப்பதற்கும், நலிந்த மக்களுக்கு உதவும் வகையில் வீடுகட்டும் பொருட்களுக்கு சலுகை வழங்குவதற்கும் முன்வந்து, இன்னபிற பிரச்சினைகளிலே எந்த அளவுக்கு தீர்மானிக்க முடியுமோ அந்த தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தி உரிய சட்டங்களை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

[பிற்பகல் 1-10]

அந்த அடிப்படையில் இந்த வரி விதிப்பைப் பற்றித்தான் இங்கே பலர் சொன்னார்கள். அதிலே பல்வேறுவிதமான விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் அணு பொருட்களுக்கு 6—லிருந்து 4 சதவீதமாகக்

குறைக்கப்பட்டிருக்கிறது. மோட்டார் ஊர்திகள் போன்றவற்றிற்கு 9லிருந்து 5 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு சக்கர ஊர்திகளுக்கு 16லிருந்து 8 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. உள்ளூரிலே உற்பத்தி செய்யப்படும் குறைவாக என்ஜின்களைக் கொண்ட இரண்டு சக்கர ஊர்திகளுக்கு 15லிருந்து 4 சதவீதமாக குறைத்திருக்கிறார்கள். அது போல் இன்னும் பல பொருள்கள். விவசாயத்துறையில் ஜிப்சம் தாது பொருளுக்கு 5லிருந்து 3.5 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு வகையிலே எது எதற்கு வரி கூட்ட வேண்டுமோ அதற்கு மட்டும் கூட்டி, தேவையானவற்றிற்கு குறைந்து நல்ல முறையிலே எப்படி கொண்டு வர வேண்டுமோ அப்படிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

1977லே 235 கோடி ரூபாய் மட்டுமே வருவாய் பெற்ற இந்தத் துறை 1987லே 1170 கோடி ரூபாய் வருவாய் பெறத்தக்க வகையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்த அளவிற்கு நிர்வாகச்சீர்திருத்தம் ஏற்பட்ட காரணத்தாலே, அதிகமான வரி போடாமல், புதிய வரிகளைப் போடாமல், இருக்கின்ற வரிகளை சீரமைத்து, பல்வேறு வகையிலே இருந்த ஓட்டை உடைசல்களை அடைத்து வந்ததன் காரணமாக வருவாய் ஆண்டு தோறும் நிர்வாக அடிப்படையில் கூடிக் கொண்டே வருகிறது, ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் கூடுகிறது. கூடுகிறது என்று சொன்னால் நிர்வாக சீர்திருத்தமே தவிர இந்த புதிய வரி விதிப்பும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல. சோதனைச் சாவடியைப் பற்றி பேசியவர் சொன்னார். ஒரு ஊருக்கு 4 இருக்கிறது என்றார். ஆனால் 95 நகராட்சிகளுக்கு மேல் இருக்கிற தமிழ்நாட்டில் உண்மையில் 65 தான் இருக்கிறது. எங்கே வியாபாரம் நடக்கிறதோ எங்கே வரி ஏய்ப்பு இருக்கிறதோ அங்கேதான் சோதனைச் சாவடிகளுக்கும் அவசியம் ஆகிறது. அந்த வகையிலே இதை போடுகிறார்களே தவிர வேறு எந்த சிக்கலும் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்னொன்றைப் பற்றியும் இங்கே சொன்னார்கள். இன்னொருவர் பேசும்போது சொன்னார். உள்ளாட்சி துறையிலே போட்ட ஒரு சட்டத்தை ரத்து செய்து விட்டார்களே என்று. ஏன் ரத்து செய்தார்கள் தெரியுமா? மக்களெல்லாம் எழுச்சியுடன் போராடினார்கள், போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தை பார்த்து அரண்டு போய், மிரண்டு போய் அந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றார்களே தவிர, மக்கள் மீது உள்ள கருணையின் காரணமாக அல்ல என்று சொன்னார்கள்.

எப்பொழுதுமே வதந்தியைக் கிளப்பி வாதத்தை உருவாக்கி நியாயங்களை எதிர்பார்ப்பதிலே அவர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். எனக்குத் தெரிந்த வரையில் உள்ளாட்சி துறையின் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் செய்த நடவடிக்கையின் காரணமாக, நல்ல நோக்கத்தோடு போடப்பட்ட சட்டம் வாபஸ் பெறப்பட்டது. அதற்காகத்தான் திரும்பப் பெற்றார்களே தவிர....

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்த சட்டம் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் சொல்லுகிறார்கள். நல்ல நோக்கத்தோடு போட்ட சட்டத்தை ஏன் முதல்வர் அவர்கள் வாபஸ் வாங்கினார்கள்?

டாக்டர் கே. சமரசம் : அதுவும் நல்ல நோக்கத்தில்தான். அதைத்தான் சொல்லிக் கொண்டே வருகிறேன். உள்ளாட்சி மன்றங்களில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் சிலர் கையிலே இந்தச் சட்டத்தின் காரணமாக பொது மக்கள் சிக்கி அவதிப்படுவதை தடுப்பதற்காகத்தான் அந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றார்கள். அது மட்டும் அல்ல, பொதுமக்கள் போராடினார்கள் என்றெல்லாம் சொன்னார்களே எங்கே போராட்டம் நடந்தது? கலந்துக் கொண்டவர்கள் எத்தனை பேர், சிறை சென்றவர்கள் எத்தனை பேர் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் என்று ஏதாவது அதிலே இருக்கிறதா என்றால் எதுவுமே இல்லை. (குறுக்கீடு) நாட்டிலே என்ன நடக்கிறதோ அதற்கு மொத்தமாக பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கிருக்கிற காரணத்தால் கீழ்மட்டத்தில் யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர்கள் நாட்டுக்கு சேவை செய்யக்கூடியவர்களாக, நல்லவர்களாக இருக்கிறபோது ஊக்கம் கொடுப்பதும், அவர்களே நாட்டை கெடுக்கக்கூடிய அளவிற்கு, மக்களை பாதிக்கக்கூடிய வகையிலே நடந்து கொண்டால் அதைத் தடுத்து நிறுத்துவதுமான ஆற்றல் பெற்றது இந்த அரசு என்பதற்கு இந்த சட்டத்தை வாபஸ் பெறுவது ஒரு முன்னுதாரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சினிமா; சினிமாவிற்கு ஒரு வரியை நாம் இப்போது கொண்டு வந்திருக்கிறோம். இப்போது இருக்கிற இந்த காலத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். கலை உலகம் பல்வேறு வகையில் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் திரைப்பட உலகம் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. டி.வி. என்று சொல்லக்கூடிய தொலைக்காட்சி நிலையம் தமிழகத்தில் 70 சதவீத மக்களுக்கு மேலாக பயன்படக்கூடிய சூழ்நிலை வந்துவிட்ட காரணத்தால், விடியோ என்ற கருவியில் தமிழ் படம், ஆங்கிலப்படம் போன்ற எல்லா படங்களையும் எங்கே வேண்டுமானாலும், அடக்கமாகவும், வெளிப்படையாகவும் போட்டுக்கொள்கிற வாய்ப்பு மிகப்பெரிய அளவில் ஏற்பட்டு

விட்டதாலும் இந்தத் திரைப்பட உலகத்திற்கு மிகப்பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விட முடியாது. திரைப்பட உலகம் என்பது ஏதோ சாதாரண பொழுதுபோக்கு அம்சம் கொண்ட அமைப்பு அல்ல. அது லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய ஒரு அமைப்பாகும். அதிலே ஆயிரக்கணக்கான டெக்னிஷியன்ஸ் இருக்கிறார்கள். ஒப்பனையாளர்கள், நடிகர்கள், லைட்மென் என்று ஒவ்வொன்றாகப் பார்த்தால் இதிலே வருகிற கணக்கு மிகப்பெரிய அளவிலே இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலே படம் எடுத்தல், விநியோகித்தல் என்று துறைகளில் பலர் இருக்கிற சூழ்நிலையில் 55 சதவீதம் என்று போட்டிருப்பது, மொத்தமாக, 48 சதவீதம், 52 சதவீதம் என்று கட்டிக்கொண்டிருக்கிறவர்களுக்கு அது பெரிய நஷ்டத்தைக் கொடுக்கும். இந்த நஷ்டம் கடைசியில் யார் தலையில் விழும் என்று பார்க்கிறபோது, இங்கே உற்பத்தி செய்யக் கூடியவர்கள், விநியோகம் செய்யக்கூடியவர்கள் தலையில் விழுகிற போது அவர்கள் வெகுவாக பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கர்நாடகா அரசிலே கூட தாய்மொழிப் படங்களுக்கு ஒரு டாக்ஸ், ஒரு பெர்செண்டேஜ், மற்ற மொழிப் படங்களுக்கு ஒரு பெர்செண்டேஜ் என்று வைத்திருப்பதாகவும், இதுபோன்று பல்வேறு மாநிலங்களில் இருப்பதாகவும் நான் அறிகிறேன். அந்த வகையில் நம்முடைய தாய்மொழிப் படங்களை பெருமளவில் வெளியிட வேண்டும் என்பதற்காக, அவைகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்றவகையில் எந்த அளவிற்கு சலுகை கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு கொடுத்து, கலை உலகம் நசுங்கிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து ஓட்டல்கள், ஓட்டல்களை எடுத்துக்கொண்டால் பெரிய ஓட்டல்களில் செக்கிங் டைம் என்று வைத்திருக்கிறார்கள். பகல் 12 மணிக்கு வந்து மாலை 6 மணிக்குப் போனாலும் ஒரு நாள் வாடகை. காலை மணிக்கு வந்து மாலை 6 மணிக்குப் போனாலும் ஒரு நாள் வாடகை. மாலை 6 மணிக்கு வந்து மறுநாள் 6 மணிக்குப் போனாலும் அவருக்கும் ஒரு நாள் வாடகை என்று வசூலிப்பார்கள். பலநேரங்களில் வேலை முடித்து சில மணி நேரங்களே இருந்து செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் ஒரு நாளைக்கு பல நாள் வாடகை பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனால் மக்கள் பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அதை மாற்றியமைக்கக்கூடிய வகையில் 24 மணி நேரம் இருந்தால் தான் ஒரு நாள் வாடகை என்றும், எந்த நேரத்தில் அவர்கள் வருகிறார்களோ அந்த நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்கு ஒரு முறைதான் வாடகை வசூல் செய்யவேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டு ... கொள்கிறேன்.

இங்கே பேசியபோது ஒன்றைச் சொன்னார்கள். இங்கே அரிசியிலே தான் அரசியல் பிறக்கிறது என்ற நிலை வருகிற போது இங்கே அமைச்சர் அவர்கள் கூட சில கருத்துக்களைச் சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து, நிதியமைச்சராக நாஞ்சிலார் அவர்கள் இருக்கிறபோது தான் 18 ஆயிரத்து 700 நியாய விலைக் கடைகளை திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, அரசு மானிய விலையில் தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கக் கூடியவர்கள் அகதிகளாக, அநாதைகளாகப் போகாமல், அவர்கள் அயல் மண்ணிற்குப் போகிற துர்ப்பாக்கிய நிலை வராமல் பாது காக்கக்கூடிய நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு அரிசி விநியோகம் செய்தது. அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற போதும், அரிசி தான் உங்களைக் கூட மாற்றப்போகிறது என்றெல்லாம் சொன்னார்கள். இந்தியாவில் மிகக் குறைந்த விலைக்கு, ஏழை எளியவர்களுக்கு அரிசி விநியோகம் செய்யக் கூடிய மாநிலமாக நமது மாநிலம் இருக்கிறது.

[பிற்பகல் 1-20]

ஆனால் 35 லட்சம் உற்பத்தி ஆகின்றபோது 2 ரூபாய்க்கு கிடைக்கிறது அரிசி. 65 லட்சம் டன் உற்பத்தியானபோது, 9 ரூபாய்க்கு விற்ற ஒரு நிலையை உருவாக்கிய, ஏற்கனவே ஆட்சிக் கட்சியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், இந்த நிலையை எடுத்துச் சொல்வது மிக மிக வெட்கக்கேடான விஷயம் என்பதை மட்டும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே ஓட்டைகள் தாக்குவதால் கட்டிடங்கள் இடியாது என்பதை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். 'வைரத்தை இரும்புப் பெட்டியில் வை. நம்பிக்கையை யோக்கியனிடத்தில் வை' என்று சொல்வார்கள். நாட்டின் நடப்பும், நிர்வாகச் சீர்திருத்தமும், நடைமுறை நிலையும் உணர்ந்து, இந்தத் துறையைப் பலப்படுத்த வேண்டும். இன்கம்டாக்ஸ் டிபார்ட்மென்டுக்கு இருக்கிற ஒரு அளவைப் போல, அவர்களுக்கு இருக்கிற ஒரு நிலையைப்போல, அவர் களுக்கு இருக்கிற வசதியைப் போல, இவர்களுக்கும் நல்லதொரு பவரை, அதிகாரத்தைக் கொடுத்தாலொழிய, இதைப் பல நேரங்களிலே, வரியை ஏய்ப்பவர்களிடத்திலேயிருந்து நீக்க முடியாது. அரசாங்கத்திற்கு வரவேண்டிய பல்வேறு விதமான வரவுகளை, ஏமாற்றுகிறவர்களிடத்திலே சென்று, அதைக் கேட்பதற்கு இந்த இலாக்காவிற்கு மிக நல்லமுறையிலே நாம் அதிகாரத்தைக் கூட வழங்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நமது அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட நல்ல கோரிக்கையைக் கொண்டு வந்திருக்கிற இந்தத் துறையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று அமர்கிறேன், நன்றி. வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு அளித்துள்ள, தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிர்வாகம் என்ற மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி என்னுடைய ஒருசில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

வணிக வரி என்பது, இந்தியாவிற்கே வழிகாட்டியாக முதன் முதலாக தமிழகத்திலே, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே கொண்டு வரப்பட்ட வரி என்பது நமக்குத் தெரியும். அப்போது இருந்த ரூபாயின் அளவிலே; ஒரு காசாக அது விதிக்கப்பட்டு இன்றைக்கு விரிந்து, வளர்ந்து, தமிழக அரசுக்கு சற்றேறக்குறைய 50 சதவீதத்திற்கும் அதிகமான வரியைக் கொடுக்கக்கூடிய ஒரு காமதேனுவாக இந்தத் துறை இன்றைக்கு வளர்ந்திருக்கிறது.

1984-85 ஆம் ஆண்டிலே, 905 கோடி ரூபாயாக இருந்த வணிக வரி மீதான இந்த வருவாய், 1985-86 ஆம் ஆண்டிலே, 1035 கோடி ரூபாயாக உயர்ந்து, 1986-87 ஆம் ஆண்டிலே 1200 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது. 1987-88 ஆம் ஆண்டிலே – இப்போது இருக்கிற வரிகளைப் பற்றி நேற்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்திலே வரலாறு காணாத வகையில் என்று பல்வேறு தகவல்களை திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.—விதிக்கப்பட்டு இருக்கிற இந்த வரிகள் தான் வரலாறு காணாத அளவிற்கு பல்வேறு இனங்களில் உயர்த்தப் பட்டதாக நான் எண்ணுகிறேன். இன்னும்கூட என்னாலே சொல்ல முடியும். 131 கோடி ரூபாயாக இருந்த தமிழக அரசினுடைய பற்றாக்குறை, நேற்றையதினம் அறிவிக்கப்பட்ட ஹோட்டல்களில் வழங்கப்படுகிற உணவுப் பண்டங்களுக்கான வரிச் சலுகைகளையும் சேர்த்து, 141 கோடி ரூபாயாக இருக்கும் என்று அவர்கள் அறிவித்திருந்தாலும் கூட, வணிக வரித்துறையிலே நமக்குத் தெரிந்தும் தெரியாமலும், மக்கள் எளிதில் புரிந்தும் புரியாமலும் இருக்கக்கூடிய அளவிற்கு பல்வேறு இனங்களில் வரி உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஒரு வேளை இந்தப் பற்றாக்குறை என்பது அதிகப்பட்டு, மேலும் துண்டு விழக்கூடிய அளவிற்கு தமிழக அரசுக்கு வருவாய் இருக்குமோ என்றுகூட நான் எண்ணிப் பார்ப்பதற்கான காரணங்கள் பல இருக்கின்றன.

பொதுவாகவே வரி என்று சொல்கிற நேரத்திலே, பலமுனை வரி, ஒரு முனை வரி என்ற வாதம் நீண்ட நெடுநாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. பலமுனை வரி இருக்கிற காரணத்தாலே, சாதாரண வணிகர்கள், இன்னும் சொல்லப்போனால் சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய அளவிற்கு பல்வேறு இனங்களின்மீது வரி விதிக்கப்படுகின்ற காரணத்தால், எல்லா இனங்களுக்கும் ஒருமுனை வரியாகவே, அரசாங்கம் ஒட்டுமொத்தமாக

4 சதவீதம், அல்லது 5 சதவீதம் என்று வைத்தால், வணிகர்களுக்கும் எளிதாக இருக்கும், வாங்குகின்ற மக்களுக்கும் எளிதாகப் புரியும்.

இன்னும்கூட சொல்வேன். தமிழக அரசுக்கு இப்போது இருக்கிற வரி வாயில்கள் எந்தவிதத்திலும் குறையாத அளவிற்கு வருவாய் வரும் என்று எண்ணக்கூடிய அளவிற்கு சிறப்புகள் இருக்கின்றன. நான் இன்னமும் சொல்வேன். இரண்டு நாட்களுக்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் விருதுநகருக்குச் சென்றிருந்தார்கள். அவர்கள் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டதாக நான் பத்திரிகை வாயிலாகப் படித்தேன். அப்படி கலந்து கொண்ட நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பலமுனை வரி இருக்கின்ற காரணத்தால் வியாபாரிகள் பல்வேறு தவறுகள் நடப்பதற்குக் காரணமாக இருக்கிறார்கள், அருள்கூர்ந்து ஒரு முனை வரியாக திருத்தி அமைக்க வேண்டும் என்று மக்கள் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதாக பத்திரிகையில் நான் செய்தி படித்தேன். அது தவறு என்றால் திருத்திக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன். இப்படி பல முனை வரியாக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு தவறுகள் நடக்கின்ற காரணத்தால் அரசாங்கம் இது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வணிகர்களுக்கு மெத்த சிரமம் கொடுக்கக் கூடியது இப்போது இருக்கின்ற வணிக வரிகள் அல்லது வரிக்கான விவரங்கள் எல்லாம் எளிதாக்கப்பட வேண்டும், சீரமைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும்கூட வரி விதிப்புக்கான மாற்றங்கள் அறிவிப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில் வந்து கொண்டு இருக்கின்றன. ஆக வரி விதிப்புகள் ஆனாலும் மாற்றங்கள் ஆனாலும் தமிழில் வரவேண்டும் என்ற ஒரு முடிவை துறையில் இருக்கின்ற அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாவற்றையும்விட இந்த ஆண்டு அரசுக்கு அதிகமான வருவாய் வரக்கூடிய இனம் என்று நான் எண்ணிப் பார்ப்பது கூடுதல் வணிக வரி இந்த ஆண்டு விரிவாக்கப்பட்டு இருப்பது தான். கழிந்த ஆண்டு 10 லட்ச ரூபாய் வரி விதிப்புக்கு உட்பட்ட வியாபார துறைக்கான அந்த எல்லையிலிருந்து இந்த வணிக வரி விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இந்த ஆண்டிலிருந்து வரி விதிப்புக்கு உட்பட்ட தொகையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் மொத்தமாக இருக்கின்ற அந்த வியாபாரத் தொகைக்கு என்று சொல்லி இந்த கூடுதல் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. நான் ஏதோ வியாபாரிகளுக்காக, வணிகர்களில் சிலர் வசதி படைத்தவர்களுக்காக நான் வாதாடுகிறேன் என்று அருள் கூர்ந்து யாரும் எண்ணிவிடக் கூடாது. இப்படி எல்லா விற்பனைத்

தொகைக்கும் வரியைக் கூட்டுகின்ற காரணத்தாலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் கூட சொன்னார்கள். ஒரு முனை வரி என்று வைத்து விட்டு அந்த ஒரு முனை வரி பல்வேறு இடங்களில் கைமாறுகிற நேரத்தில் வரி இல்லை என்ற நிலை இருக்க வரி இல்லாத ஒரு இனத்திற்கு கூடுதல் வரி போடுவது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று அவர்கள் கேட்டார்கள். பல்வேறு கைக்கு மாறி வருகிற நேரத்தில் இந்த கூடுதல் வணிக வரி விதிக்கப்படுகின்ற காரணத்தால் பொருட்களின் விலை கூடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பொருட்களின் விலை கூடுவதற்கான வாய்ப்பு இல்லை என்று சொன்னால் வணிகர்கள் தங்கள் கையில் இருந்து செலுத்த வேண்டியிருக்கிறது. நேற்று மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள், ஆண்டு ஒன்றுக்கு 7 லட்சம் ரூபாய் வரித்தொகை இருக்கின்றவர்களுக்கு விலக்கு அளித்து இருக்கிறோம் என்றார்கள். சென்ற ஆண்டு 10 லட்சம் என்று இருந்ததை இந்த ஆண்டு 7 லட்சம் என்று குறைத்து இருக்கிறோம் என்று சொல்லி விட்டு வசதி உள்ளவர்களுக்குத்தானே நாங்கள் இந்த வரியைச் செலுத்துகின்ற இந்த உத்தரவைப் பிறப்பித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். உதாரணமாக 7 லட்சத்திலிருந்து 10 லட்சம் ரூபாய் வரை வரியைச் செலுத்த வியாபாரத் தொகை இருக்குமானால் 0.7 சதவீதம் என்றும், 10 லட்சத்திலிருந்து 40 லட்சம் வரை இருக்கின்ற விற்பனைத் தொகைக்கு $1\frac{1}{4}$ சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைத்து இருப்பதாகவும், அதேபோல் 40 லட்சத்திற்கு மேல் இருக்கின்ற விற்பனைத் தொகைக்கு $1\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $1\frac{1}{4}$ சதவீதமாகக் குறைத்து இருப்பதாகவும் நேற்று அவர்கள் அறிவித்து விட்டு வசதி உள்ள வியாபாரிகளுக்குத் தான் போட்டு இருக்கிறோம் என்ற ஒரு வாதத்தையும் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, வசதியுள்ள அதிகமான வியாபாரத்தை செய்கின்ற வியாபாரிகள் விற்கின்ற அந்த பண்டங்கள் வசதி உள்ளவர்களுக்கு மட்டும்தான் போகிறதா? ஏழை, எளிய நடுத்தர மக்கள் வாங்குகின்ற பொருட்களை அவர்கள் விற்கவில்லையா? ஆகவே, நீங்கள் அதிகமாக போடுகின்ற வரித் தொகையை வணிகர்கள் அந்தப் பொருட்களின்மீது ஏற்ற அதன் மூலமாக ஏழை, எளிய நடுத்தர மக்களை இது பாதிக்காதா என்று நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இந்தியப் பேரரசு வருமான வரி செலுத்துவதற்கான சட்ட திட்டங்களை எல்லாம் வைத்து இருக்கிறார்கள். அதிலே கூட லாபம் கிடைத்தால் தான் வருமான வரி செலுத்த வேண்டும். ஆனால், இந்த கூடுதல் வரி எப்படி லாபம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் செலுத்த வேண்டும் என்ற முறையில் இருக்கின்ற காரணத்தால் இதை நீங்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இதன் மூலமாக பொருட்களின் விலை உயர்ந்து விடக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் இதை முன் வைக்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 38 நகராட்சிகளுக்கு மட்டும் இருந்த உபரி வரி தமிழகம் முழுவதும் விரிவாக்கப் பட்டு இருக்கிறது, பெரிய எண்ணத்தோடு. ஆனால், 38 நகராட்சிகளுக்கு உபரி வரி விதிக்கப்படும்போது என்ன காரணம் சொல்லப்பட்டது தெரியுமா? சாலைகளை சீரமைப்பதற்காக இந்த வரி பயன்படுத்தப்படும் என்று அரசின் சார்பில் அதற்கு சமாதானம் சொல்லப்பட்டது. ஆனால், நான் எண்ணிப் பார்க்கிறேன், இந்த 38 நகராட்சிகளுக்கு உபரி வரி விதித்த பிறகும் பல நகராட்சிகளில் சாலைகள் இன்னும் மோசமான நிலையில் தான் இருக்கின்றன. ஆகவே, என்ன காரணத்திற்காக வரி உயர்த்தப் பட்டதோ அந்தக் காரணம் நிறைவேற்றப்படாமலேயே இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருக்கின்ற எல்லா நகராட்சிகளுக்கும் இந்த உபரி வரி விரிவாக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால் பொருட்களின் விலை கூடாதா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கூடுதல் விற்பனை வரியின் மீதான கூடுதல் உபரி வரி, எத்தனை வரி? அது தான் அவர் சொன்னார், வரி, வரிக்கு வரி, வரிக்கு வரி என்று சொல்லி 3, 4 இனமாக நீங்கள் வரியைப் போட்டுக்கொண்டே போகிற காரணத்தால் வரியை மறைப்பதற்கு இது ஒரு துணையாக இருக்காதா என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். கூடுதல் விற்பனை வரியின் மீதான கூடுதல் உபரி வரியை கோவை, மதுரை மாவட்டத்தைச் சுற்றி இருக்கின்ற 16 கிலோ மீட்டருக்கு இது விரிவாக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்படி வரியினுடைய விகிதத்தின் எல்லையை நீங்கள் அதிகரித்துக் கொண்டே போவீர்களானால் வரியைத் தவிர்ப்பதற்கான முயற்சியில் தான் அவர்கள்

(பிற்பகல் 1-30)

ஈடுபடுவார்கள். ஆளுங்கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு சின்னராசு அவர்கள் சில பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது இருக்கின்ற நிலையில், வரி விதிப்பு அமைப்புகளிலேயே அரசாங்க அதிகாரிகள் சரியாகச் செயல்படுவார்களேயானால், நிச்சயமாக போதுமான அளவிற்கு வரி வரும். நான் எல்லா அதிகாரிகளையும் சொல்ல மாட்டேன். நேர்மையான அதிகாரிகளைப் பார்க்கிறேன். பாராட்டுகிறேன். இன்னும் கொஞ்சம் கண்காணிப்பாக இருப்பார்களேயானால்' அரசுக்கு இந்த வரி வீதங்களை, வரி விதிப்புகளை வைத்தே, தேவையான, அதிகமாக வரி வருகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, இன்னும் கொஞ்சம் வரியை சரியாகச் செலுத்துவார்களா என்று பார்ப்பார்களே யானால், அரசாங்கத்திற்குப் போதுமான வரி வரும் என்கின்ற விஷயத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையிலே அரசு அதிகாரிகளுடைய கவனம் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் முன்பே சொன்னது போல வரி, உபரி வரி, கூடுதல் விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி மீதான கூடுதல் உபரி வரி என்று போட்டுக்

கொண்டே போனால், ஒரு எல்லை இல்லாமலே போய்க் கொண்டிருக்கிறது. சாதாரண வணிகர்கள் எல்லாம் கணக்கு வைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிற காரணத்தால், இதையெல்லாம் ரேஷனலைஸ் செய்து, ஒட்டு மொத்தமாக ஒரு இனத்திலே, ஒரு எல்லையிலே, ஒரு கட்டத்திலே போடுவீர்களேயானால், வரி செலுத்துபவர்களுக்கும், வரி வாங்குபவர்களுக்கும் துணையாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நம்முடைய நிதிநிலை அறிக்கையில் பல்வேறு இனங்களில் வரி விதிப்பை உயர்த்தியிருக்கிறார்கள். உதாரணமாக வெல்டிங் கம்பிக்கு 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகவும், ஆஸ்பெஸ்டாஸ் என்று சொல்லக்கூடிய சிமெண்ட் தொழிலைப் பொறுத்தவரையில் 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகவும், செங்கற்களுக்கு 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும், மரம் போன்றவைகளுக்கு 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும் உயர்த்தி இருப்பது நியாயமில்லாத ஒன்று. நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் எதிர்பார்க்கின்ற, இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு இந்த ஆண்டு நிச்சயமாக வருவாய் வரும். ஆகவே, இந்த சாதாரண மக்கள், அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள், சாதாரண நிலையில் இருப்பவர்கள் வாழ்க்கையில் ஒரேயொரு முறை தான் வீடுகட்ட முடியும். சொந்தமாக அவர்களுக்கென்று வைத்துக்கொள்வது இந்த வீடு ஒன்றைத்தான். இப்படிப்பட்ட நடுத்தர நிலையிலே இருக்கிறவர்கள் அப்பர் மிடில் கிளாஸ் எல்லாம் வாழ்க்கையிலே ஒரேயொரு முறை செய்யக் கூடிய அந்த கட்டுமான பொருட்களுக்கு உபயோகப்படுத்தக்கூடிய பொருள்களுக்கு வரியை உயர்த்தியிருப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை. அரசாங்கம் அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட வரி விதிப்பினை மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரையில் சொல்லுகின்ற நேரத்திலே சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அது போலவே இந்தத் தரப்பிலே இருக்கின்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். பூண்டுக்கு வரி விதிப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை. எப்படி வெங்காயத்திற்கு நாம் வரி விலக்குக் கொடுத்திருக்கிறோமோ, அதுபோலவே அழுகும் பொருளாகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் பயன்படுத்துகின்ற காரணத்தினால், நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதனால் எத்தனை கோடி வரும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? ரூ. 1 கோடி வரும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. எனவே பூண்டுக்கு வெள்ளைப் பூண்டுக்கு வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப்போல தீப்பெட்டித் தொழில் இன்றைக்கு தமிழகத்தில் குறிப்பாக, சிவகாசி, விருதுநகர், சாத்தூர், திருமங்கலம், கோவில்பட்டி போன்ற ஊர்களில் குடிசைத்

தொழிலாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற ஒரு தொழிலாக, குடிசைத் தொழிலாக இருக்கின்ற காரணத்தினால், ஒரு முனை வரி 2 சதவீதத்தை, குறைந்தபட்சம் சிறிய தீப்பெட்டி செய்கின்ற சிறிய தொழிலதிபர்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 இலட்சம் வரை டர்ன்-ஓவர் இருக்கின்ற வணிகர்களுக்கு ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே பல்வேறு சமயங்களிலே சொல்லியிருக்கிறோம். சைக்கிள் உதிரிப் பொருட்களுக்கு வரியை ரத்து செய்ய வேண்டுமென்று. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் தான் 6 சதவீதத்தை 3 சதவீதமாக குறைத்தது. அதற்காக நான் பாராட்டு தெரிவித்திருக்கிறேன். மேலும் இப்போது இருக்கின்ற 3 சதவீதத்தை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையிலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில் இப்படி சைக்கிள் உதிரிப் பொருட்கள் மீதான வரியை நீக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். சைக்கிள் என்று சொல்லும்போது, தேசப் பிதா காந்தியார் அவர்களால் சொல்லப்பட்ட, ஏழை எளிய மக்களுடைய வாகனம். அதற்கு அந்நியச் செலாவணியாக செலவழித்து, நாம் எரிபொருள் வாங்க வேண்டியதில்லை. கார்களைப்போல் மாசு கட்டுப்பாடு அதற்குக் கிடையாது. இப்படிப்பட்ட ஏழைகளினுடைய வாகனத்திற்கு 3 சதவீத வரி எந்த வகையிலும் நியாயமில்லை. எனவே அருள்கூர்ந்து அதையும் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மருந்துகளின் விற்பனை வரியின் பேரில் 4 சதவீத ஒரு முனை வரியை அறவே நீக்க வேண்டுமென்று சொல்லி இன்றிலிருந்து ஒரு வார காலத்திற்கு சில்லறை மருந்து வியாபாரம் செய்பவர்கள் ஹர்த்தால் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அதையும் பத்திரிகையிலே பார்த்திருக்கிறேன். செய்ய வேண்டாம் என நான் வேண்டுவேன். ஆகவே உயிர் காக்கிற அல்லது தேவையான மருந்துகளின் 4 சதவீத ஒரு முனை வரி என்பது நீக்கப்பட வேண்டும்.

அதுபோலவே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பனியன் தொழில், திருப்பூரிலே இருக்கின்ற சற்றேறக்குறைய 25000 தொழிலாளர்களுக்கு வாழ்வு கொடுக்கக் கூடிய பனியன் தொழிலுக்கு இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்திலே ஒரு முனை வரி போட்டு இருக்கின்ற காரணத்தினால், ஏனைய மாநிலங்களில் இருப்பவர்கள் வரிச் சலுகை கொடுத்து விட்ட காரணத்தினால், நம்முடைய தமிழகத்திலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய பனியன் வேறு மாநிலங்களுக்குப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்த வரி விதிப்பையும் அரசாங்கம் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளில் சிலர், வியாபாரிகள் அல்லது வணிகர்களாக இருக்கிறவர்கள் நேர்மையாக வணிகம் செய்தாலும் கூட. அவர்களை சரியாக கணக்கு வைத்துக் கொள்ளவில்லை, அல்லது ஸ்டாக் வைத்துக் கொள்ளவில்லை, இருப்பு வைத்துக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக அபராதம் போடுவதாக நான் அறிகிறேன். அப்படிப்பட்ட சம்பவங்கள் சேலத்திலே நடைபெற்றதாகச் சொல்கிறார்கள். நான் ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அப்படிப்பட்ட அதிகாரிகள் செய்கின்ற முறை சரியானதுதானா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். மோட்டாரினுடைய உதிரிப் பாகங்கள், எலெக்ட்ரிக் சாமான்கள், அதுபோன்று எவர்சில்வர் சாமான்கள், பலசரக்கு சாமான்கள், சைக்கிள் உதிரிப் பொருட்கள் போன்றவைகளில் இருப்பு வைத்துக்கொள்வது மெத்த கடினமாக இருக்கும்.

உதாரணமாக சைக்கிளுக்கு தொள்ளாயிரம் பாகங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிராண்டு, ஒவ்வொரு மார்க் இருக்கின்ற காரணத்தினாலே ஒரு சிறிய வியாபாரி, படிக்கத் தெரியாதவன் அத்தனைக்கும் கணக்கு வைத்துக்கொள்வது இயலாத காரியம். கணக்கு சரியாக இல்லை என்பதற்காக, ஸ்டாக் சரியாக இல்லை என்பதற்காக அபராதம் போடுவது நியாயம்தானா என்று எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும்கூட சோதனைச் சாவடியிலே வணிகர்கள் செலுத்துகின்ற அந்தத் தொகையை, எந்த வணிகர் செலுத்தியிருக்கிறார் என்ற விவரம் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு காலாகாலத்திலே போவதில்லை என்று சொல்கிறார்கள். அப்படிப் போனால்தான் தொகையைக் கழித்து அதைக் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்கும். ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள்ளே எந்த அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்று அதற்கான அறிவிப்பு போகவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வணிகர்கள் அதிகமாகச் செலுத்தியிருந்தால் தேவையில்லாமல் செலுத்தியிருந்தால் திரும்பப் பெறுகின்ற நேரத்திலே அவர்களுக்குக் கருவூலச் சீட்டு கொடுக்கிறார்கள். எப்படி வணிகர்களிடமிருந்து காசோலை வாங்குகிறார்களோ, செக் வாங்குகிறார்களோ, அப்படித் திரும்பப் பெறுகின்ற நேரத்திலேயும காசோலை கொடுப்பது பொருத்தமாக இருக்கும். கருவூலச் சீட்டு பெறுவதினால் சில சிரமங்கள் இருக்கின்றன என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகையினால் அருள் கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முறையை நான் பார்க்கின்றேன். இந்த ஆண்டு 4, 5 இனங்களிலே—ஒன்று விற்பனை வரியாக இருக்க வேண்டும் அல்லது கொள்முதல் வரியாக இருக்க வேண்டும். முதல் கட்ட விற்பனையிலே வரி, கடைசி கட்ட விற்பனையிலே வரி என்று சொல்லியிருக்கிறீர்கள். புதியதாக ஒரு வரியைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள், இது முதல் கட்ட

விற்பனையா அல்லது இறுதி கட்ட விற்பனையா என்று, இறுதி கட்ட விற்பனை என்று சொல்வது சில இடங்களில் நம்மால் இனம் காட்ட முடியாது என்ற நிலைமைக்கு இருக்கின்ற காரணத்தினாலே ஒரே இனமாக இந்த வரியைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே இந்த வியாபாரிகளைப் பொறுத்த அளவிலே மாதாந்திரம் ஒருவர் கொடுக்கின்ற அந்தக் கணக்குக்கும் வருட முடிவிலே கொடுக் கின்ற கணக்கிற்கும் வித்தியாசம் இருக்குமானால் $1\frac{1}{2}$ பங்கு அபராதம் போடுகிறார்கள். வேண்டுமென்றே மறைத் திருக்கிறார்களா அல்லது தவறு நடந்திருக்கிறதா? சாதாரண ஒரு குமாஸ்தா மட்டத்திலும் தவறு நடந்திருக்கலாம். அதை எண்ணிப்பார்த்து எடுத்ததற்கெல்லாம் அபராதம் போடுகின்ற முறை சரியாக இருக்காது. நான் இவ்வளவும் ஏன் சொல்கிறேன் என்றால் வியாபாரிகள் நாணயமாக இருக்க வேண்டும். அரசுக்குச் செலுத்துகின்ற வரியை சம்பளம் இல்லாமல் வசூலிக்கக்கூடிய எண்ணத்தை அது உருவாக்கி விடும் என்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு இருக்கின்ற சிரமத்தை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே 1986-ம் ஆண்டிலேயிருந்து அரசாங்கம் பதிவுக் கட்டணத்தை 10ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தி யிருக்கிறது. இது மிக அதிகம். கடந்த ஆண்டிலேயும் இதை நாங்கள் சொல்லியிருக்கிறோம். இதைக் குறைக்க வேண்டும். இதிலே ஒன்றும் அதிகமான நிதி அரசுக்கு வந்துவிடப்போவதில்லை. ஆகையினால் 10 ரூபாயிலிருந்து 100ரூபாயாக உயர்த்தியிருப்பது அதிகமான ஏற்றமாக இருக்கின்ற காரணத்தினால் இதை குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு, கடை களிலே வரி விகிதங்கள் அட்டவணையாக தொங்கவிடப்பட வேண்டும். இன்னின்ன பொருள்களுக்கு இன்னின்ன வரி என்று சாதாரண பொருள்களின் மீதான வரியை அட்டவணையாக தொங்கவிட வேண்டும். உதாரணமாக சில பொருள்களுக்கு லோக்கல் டாக்ஸஸ் எக்ஸ்ட்ரா என்று போடுகிறீர்கள். லோக்கல் டாக்ஸஸ் எவ்வளவு என்று நமக்கு தெரிவதில்லை. அவர்கள் சொல்வதைத்தான் நாம் வாங்க வேண்டியிருக்கிறது. இன்ன பொருள்களுக்கு இன்ன வரி என்று நமக்கு தெரியாத காரணத்தினாலே இப்படி வணிகர்கள் பொருள்களுக்கான வரி விகிதத்தை அட்டவணையில் போடவேண்டுமென்று கண்டிப்பாக அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே அலுமினியப் பாத்திரங்கள்சாதாரண ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் கூட இன்றைக்கு எவர் சில்வர் பாத்திரங்களை உபயோகிக்கத் தொடங்கி விட்டார்கள். எனவே அலுமினியப் பாத்திரங்களுக்கு நிச்சயமாக வரி விலக்கு கொடுக்க வேண்டும். குடிசைவாசிகள் தான் இதை அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள். அதனால் அலுமினியப் பாத்திரங்களுக்கு வரி

விலக்கு கொடுக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு) எந்தெந்த இனங்கள் எடுக்க வேண்டும், எந்தெந்த இனங்களைப் போட வேண்டும் என்று முதலிலேயே சொல்லிவிட்டேன். நீங்கள் இப்படி சொல்வீர்கள் என்றுதான் முதலிலேயே சொல்லி விட்டேன், ஆகவே சுண்ணாம்பு இன்றைக்கு செம் என்ற பெயரிலே காகிதத்திலே பிளாஸ்டிக் பேப்பரிலே வருகிறது. அதற்கு கூட வரி போட்டிருக்கிறீர்கள். அந்த வரியை குறைத்து விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, புதிய தொழில் களைத் தமிழகத்திலே தொடங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலமாகத்தான் பல்லாயிரக்கணக்கான வர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த மாநிலத்திலே பொருளாதாரம் உயரும் என்று சொல்லுகின்ற நேரத்திலே ஐந்து ஆண்டுகளுக்கு புதிய தொழில்கள் தொடங்குவதற்கு வணிக வரி இல்லை என்று ஒரு அறிவிப்பினை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாலிக்குத் தங்கம் என்ற பிரச்சினை இங்கே சில நாட்களுக்கு முன்னாலே பேசப்பட்டது. ஏழை தாய்மார்களின் குழந்தைகளுக்கு திருமணம் நடக்கின்ற நேரத்திலே தாலிக்கு இனாமாக தங்கம் வழங்குகின்றோம் என்று சொன்னோம். அந்த தாலிக்கு தங்கம் வழங்கியிருக்கிறோமோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் தாலிக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களுடைய வாழ்க்கையிலே ஒரே ஒரு முறை நடைபெறும் இந்த நிகழ்ச்சியிலே, ஏழை தாய்மார் களை காப்பாற்றுவதற்காக, அதற்கு துணையாக, தாலிக்கான தங்கத்திற்கு போட்டிருக்கின்ற வரியை விலக்கு அளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

கேளிக்கை வரியைப் பொறுத்தளவிலே, கேளிக்கை வரி மீது உபரி வரி, கூடுதல் உபரி வரி காட்சி வரி, காட்சி வரி மீது உபரி வரி, காட்சி வரி மீது கூடுதல் உபரி வரி என்ற இந்த இனங்களை ரேஷனலைஸ் செய்யவேண்டுமென்று ஒரு முனைப் படுத்த வேண்டுமென்று அந்தத் துறையிலே கேட்டுக் கொண் டார்கள், இந்த இனங்களின் மூலமாக 45 சதவிகிதத்திலிருந்து 52 சதவிகிதம் வரை அந்தத் திரையரங்கு உரிமையாளர்கள் செலுத்தி வந்திருக்கிறார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன். 400-க்கு மேற்பட்ட அரங்குகள் 48-லிருந்து 50 சதவிகிதம் தான் செலுத்தி இருக்கிறார்கள், செலுத்த வேண்டிய வாய்ப்பு இருந் தது. 50 அரங்குகளுக்குள்ளாகத் தான் 52 சதவிகிதம் அந்தவரி கட்ட வேண்டிய நிலை இருந்தது. ஆனால் இவை அனைத்தையும்

ஒன்றாக இணைத்து. இப்போது 55 சதவிகிதம் என்று
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.
உள்ளபடியே சாதாரண மக்களை, இந்த வரி உயர்வு
விகித உயர்வு பாதிக்கும்.

ஏழை மக்களுக்கு இருக்கும் ஒரே ஒரு பொழுது போக்கு
இன்றைக்கு சினிமாவாகத்தான் இருக்கின்றது. அதனாலே 55
சதவிகிதம் என்று இருப்பதைக் குறைத்து 50 சதவிகிதம் என்று
ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1939-ஆம் ஆண்டு முதறிஞர் இராஜாஜி அவர்கள் கொண்டு
வந்த நேரத்திலே, இந்தக் காட்சிக்கு 'நெட் டாக்ஸ்' ஆகத்தான்
போட்டார்கள். ஆனால் இன்றைக்கு டர்ன் ஓவர் எல்லா வரி
களுக்கும் சேர்த்து போட்டு இருக்கிறார்கள். நீங்கள் அதை
பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
பம்பாய் போன்ற இடங்களில் எல்லாம் 49 சதவிகிதம் தான் வரி
இருக்கிறது. கர்நாடகம் போன்ற மாநிலங்களிலே 35 சதவிகிதம்
தான் இருக்கிறது என்று அந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கக்
கூடியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதைப் பரிசீலக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றே ஒன்று. குடிசைத் தொழிலாக இருக்கின்ற வெல்லம்
இன்றைக்கு தென் மாநிலத்திலே தமிழகம், கர்நாடகம் இரண்டும்
வெல்லம் உற்பத்தி செய்யும் மாநிலங்களாக இருக்கின்றன.
இரண்டு மாநில உற்பத்தியையும் மொத்தமாகச் சேர்த்துப்
பார்க்கும் போது, 80 சதவிகிதம் கேரளா வடக்கு இந்தியாவுக்கு
விற்பனை ஆகிறது. கர்நாடகாவிலிருந்து வெளி மாநிலங்களுக்கு
அனுப்பும் வெல்லத்திற்கு வரி இரண்டு சதவிகிதமே இருக்கிறது.

நமது மாநிலத்தில் சென்ற வருஷம் பட்ஜெட்டிலே ஒரு
முனை கொள்முதல் வரி 8 சதவிகிதமாக அறிவிக்கப்பட்டது.
1977-ஆம் ஆண்டு வரை ஒரு முனை வரி இருந்தபோது, வெளி
மாநிலங்களுக்கு சி. எஸ். டி. இல்லை என்று வரி விலக்கு கொடுக்
கப்பட்டிருந்தது. சென்ற நிதி நிலை அறிக்கையிலிருந்து
அவ்வாறு சி. எஸ். டி. விலக்கு கொடுக்க தமிழக அரசு தவறி
யதால் கொள்முதல் வரி 8 சதவிகிதம் சர்சார்ஜ் 1 சதவிகிதம்,
கூடுதல் விற்பனை வரி 1 சதவிகிதம் மற்றும் சி. எஸ். டி. 4 சத
விகிதம் என்று 14 சதவிகிதம் ஆகி இருக்கிறது. நான் கேள்விப்
படுகிறேன் அந்த மத்திய வரிக்கு சி.எஸ்.டி.க்கு விலக்கு அளிக்கக்
கோரி வணிக வரிச் செயலாளர் கமிஷனர், நிதித்துறைச் செய
லாளர் ஏற்கனவே ஒப்புதல் கொண்டு இதுவரை அரசாங்கத்
தினுடைய சுமுகமான பரிசீலனையில் இருப்பதாக நான் அறி
கிறேன். அதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, வெல்லம் உற்பத்தி செய்வது குடிசைத் தொழிலாக
இருக்கிறது சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருளாக
இருக்கிறது. அரசாங்கம் இதிலே அக்கறை செலுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 ஏப்ரல் 1

பட்ஜெட் வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக, நாட்டுச்
சர்க்கரைக்கு 8 சதவிகிதம் விற்பனை வரி என்று அறிவிப்பு வந்
துள்ளது. அதன்படி நாட்டுச் சர்க்கரை வெளிமாநிலங்களுக்குச்
சென்றால் 4 சதவிகிதம் மத்திய வரி மட்டுமே விதிக்க இயலு
கிறது. வெல்லம் நாட்டுச் சர்க்கரை இரண்டுத் ஒரே கரும்பி
லிருந்து தயாரிக்கப்பட்டும், இரண்டு வகை வரியாக இருப்
பதால், அதிலே சில இடைஞ்சல்கள் இருக்கின்ற காரணத்தினால்
வெல்லத்திற்கும் நாட்டுச் சர்க்கரையைப் போல், 4 சதவிகிதம்
வரிவிதிக்க வேண்டும் என்று கூறி உரையை நிறைவு செய்கிறேன்

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவை
யினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக்
கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் கலந்து
கொண்டு இந்தத் துறைக்கு அருமையான கருத்துக்களை எடுத்து
வைத்ததோடு, இந்தத் துறையின் மூலமாக அரசு எடுக்க
வேண்டிய நிதி ஆதாரங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்
என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நானும், 1977-ஆம் ஆண்டிலிருந்து இந்த சட்டமன்றத்திலே
இருந்து கொண்டு வருகிறேன். பல்வேறு மானியக் கோரிக்
கைகள் வருகிறபோது கூர்ந்து கவனித்தால் கடுமையான தாக்கு
தலுக்கு உள்ளாக்கப்படுகிற ஒரு துறை இருக்குமேயானால், அது
வணிகவரித்துறை தான். நமது சட்டமன்ற உறுப்பினர்கள்
தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்கும்போது, இந்தத்
துறையைக் கொஞ்சம் கடுமையாகவே விமரிசித்து அதனாலே
அவர்கள் சார்ந்து இருக்கிற இயக்கத்திற்கும், நாங்களுக்கும்
பயன் தருமா என்று எண்ணிப் பார்த்து, எனக்கு இந்த வணிக
வரித் துறையிலே பேசவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களை அணுகிக் கேட்க வேண்டிய நிலையெல்லாம்
கடந்த காலத்திலிருந்து, தொடர்ந்து வந்திருக்கிறது.

எதற்கு இதைச் சொல்கிறார்கள் என்று சொன்னால்,
அரசாங்கம் வரிவிதிக்கிறபோது மக்கள் சில நேரங்களில் பாதிக்கப்
பட்டு விடக்கூடாது என்பதிலே கவனமாக இருந்து, அரசாங்கத்
திற்குச் சொல்ல வேண்டிய நேரத்திலே மக்களுடைய பிரதிநிதி
களாக இருக்கிற நாம் எடுத்துச் சொல்வது தலையாய கடமை
என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கடந்த காலத்திலிருந்து
இந்தத் துறையின் கவனத்தை ஈர்க்கின்ற அளவுக்கு தங்களுடைய
மேலான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால், இன்றையதினம் பார்க்கிறபோது, கடுமையான
தாக்குதல்களிலிருந்து தப்பி ஒரு சில காயங்களோடு இந்தத்
துறையில் பதில் சொல்ல வேண்டிய நிலையிலே நாங்கள் நின்று
கொண்டிருக்கிறோம். கடுமையான தாக்குதல் இன்றையதினம்
இந்தத் துறைக்கு இல்லை. இந்த விமர்சனத்திலே 9 பேர்
கலந்து கொண்டதிலே குறை இல்லை என்று சொல்லக்கூடிய
அளவுக்குஏன் சொல்லுகிறேன் என்றால் மாண்புமிகு நமது

1987 ஏப்ரல் 1] [திரு. த. இராமசாமி]

நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் அவர்கள் நிதிநிலை
அறிக்கை தாக்கல் செய்ததிலிருந்து 7, 8 தினங்களாக வரிப்
பிரச்சினையைப் பற்றித் தான் இந்தத் துறையைப் பற்றித் தான்
சொல்லப்பட்டு வந்தது.

பல்வேறு அரசியல் கருத்துக்கள் பரிமாறப்பட்டாலும் கூட
இந்தத் துறையிலே நாவலர் அவர்கள் தங்களுடைய பதிலுரை
யிலேயாவது விலக்கு அளிக்க மாட்டார்களா என்ற அளவில்
அந்த எண்ணத்தினுடைய அடிப்படையில் கடுமையாக இந்தத்
துறை விமர்சிக்கப்பட்டது. ஏற்கெனவே விமர்சிக்கப்பட்டு
விட்டதின் காரணத்தினாலே இந்த மானியக் கோரிக்கையிலே
ஏற்றிருக்கின்ற இந்த சூழ்நிலையில் ஓரளவிற்கு தப்பித்தேன் என்று
சொல்லுகிற அளவுக்குத்தான் துறையினுடைய சார்பில் உங்களுக்கு
நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய அரசினுடைய நிலையை நீங்கள்
எண்ணிப் பார்க்கவேண்டும். 1977-ல் தமிழகத்தினுடைய
முதல்வர், தமிழக மக்களுடைய இதய தெய்வமாக இருக்கிற
நம்முடைய தங்கத் தலைவன் புரட்சித் தலைவர் அவர்கள்
முதலமைச்சர் பொறுப்பிற்கு வந்தார்கள். தமிழகத்தினுடைய
கஜானா சாவியை புரட்சித் தலைவர் அவர்களுடைய கையிலே
நாட்டு மக்கள் ஒப்படைத்தார்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து
நடைபெறுகின்ற இந்த ஆண்டு வரை சுமார் 10 ஆண்டுக்
காலமாக இந்த ஆட்சி, சிறப்பான முறையிலே, நடந்து கொண்
டிருக்கின்ற இந்தக் காலம் வரை கட்சி பேதங்களுக்கு அப்பாற்
பட்டு நின்று நடுநிலையோடு நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களே
யானால் கடந்த காலத்திலேயிருந்து இந்த துறையினுடைய
நிலையைப் பார்க்கிறபோது பல்வேறு வரிவிதிப்புகளை குறைத்
திருக்கிறோம் என்று தான் சொல்லவேண்டும்.

பல்வேறு வணிகச் சங்கங்கள் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற
குறைகளை நீங்கள் தீர்த்து வைக்க வேண்டுமென்று சொல்கிற
போது அரசு அதிகாரிகளை அழைத்துப் பேசி அதற்கான முறை
களை கையாளப்பட்டு நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்கிற
நேரத்திலே ஆண்டு ஒன்றுக்கும் சலுகை அளிக்கப்பட்டிருக்கிற
நிலை கடந்த காலத்திலேயிருந்து நமக்கு கண்ணாடியாக இருக்
கின்றது. அதைப்போல கடந்த ஆண்டிலே இந்த நிதிநிலை
அறிக்கையைத் தாக்கல் செய்கிற போது பல்வேறு சலுகைகள்
நம்முடைய வணிகப் பெருமக்களுக்கு அளிக்கப்பட்டன என்பதை
நாம் மறந்துவிட முடியாது. ஏழை எளிய மக்கள், அன்றாடம்
உழைக்கின்ற மக்கள் சொல்லியிருக்கின்ற கோரிக்கைகளையெல்
லாம் கடந்த காலத்தினுடைய புத்தகங்களை நீங்கள் எடுத்துப்
பார்ப்பீர்களேயானால் நம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள
முடியும். அந்த அளவிற்குத்தான் நிலைமைகள் கடந்த காலத்
திலும் இருந்திருக்கின்றன. சாதாரணமாக வெள்ளி வியாபாரிகள்
பல்வேறு பகுதிகளிலே இருந்தாலும் கூட சேலத்திலே ஒரு முக்கிய

மான தொழிலாக இருக்கிற காரணத்தினாலே, குடிசைத் தொழிலாக இருக்கின்ற காரணத்தினாலே, பல்வேறு தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினாலே, சோடு கின்றமெட்டி, அருங்காண் இது போன்ற பல்வேறு பொருள் களுக்கு வரிவிலக்கு செய்தார்கள். அதற்குப் பிறகு இன்றைய தினம் அந்த வணிகப் பெருமக்களின் கோரிக்கையை ஏற்று, வணிகக் சொள்முதல் இருக்கிறது, அதனால் ஏராளமான சிரமங்கள் இருக்கின்றன, ஏழை எளிய மக்கள் வாங்கிய நகைகளை திருப்பி விற்கின்ற போது அவர்களிடத்திலே நாங்கள் 2 சதவீதத்தை கழித்துக் கொண்டு கொடுக்க வேண்டி இருக்கிறது பிடித்தம் செய்ய வேண்டி இருக்கிறது, ஆகையால் ஏராளமான சிரமங்கள், இடர்பாடுகள் எல்லாம் அவர்களுக்கு ஏற்படுகின்றன என்று கோரிக்கை விடுத்தார்கள். இவைகளைக் களைந்துத் தாருங்கள் என்று கோரிக்கை மனு வைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, இந்த ஆண்டிலே கூட பல்வேறு சலுகைகள் தரப் பட்டிருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசுகிற போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்கிற போது அதிலே வணிக வரித்துறையினுடைய சார்பிலே மானியக் கோரிக்கையை வைக்கிறபோது, அதற்கு முன்னாலேயே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், அலுவலர்களையும் அழைத்து கலந்து பேசி அதற்குப் பின்னாலே சட்டப்பேரவைக்கு நீங்கள் வரவேண்டு மென்று சொல்லத்தக்க அளவுக்கு இங்கே கருத்துக்கள் சொல்லப் பட்டன. அந்த அடிப்படையிலேதான் நம்முடைய அரசு 3 பேர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு தமிழகத் தினுடைய பலவேறு பகுதிகளுக்கு சென்று வந்தது. தமிழகத்திலே திருச்சி, மதுரை, கோவை சேலம் போன்ற நான்கு நகரங்களி லேயிருந்து சுற்றியிருக்கக்கூடிய பல்வேறு வணிகச் சங்கங்களைச் சந்திக்கக் கூடிய அளவுக்கு, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு எந்தெந்த அளவிலே மாற்றங்கள் செய்யலாம், எந்தெந்த அளவிற்கு அரசுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற ஆலோசனை செய்து, கலந்து பேசி அதற்குப் பின்னாலேதான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேமாதிரி 105 வணிகச் சங்கங்கள். தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளுக்கு இந்தக் குழு சென்ற போது அரசியல்வாதிகளைச் சென்று பார்ப்பது போல, இந்தக் குழு வந்ததற்குப் பிறகு பரிகாரங்கள் காண லாம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இவர்களையெல்லாம் சந்தித்து, இந்தக் குழுவிலே உள்ள மூவரையும் சந்தித்து, இந்த இந்த அளவிலே நீங்கள் எங்களுக்கு நீக்கம் செய்து கொடுக்கஇருக்க வேண்டும் இந்த இந்த அளவுக்கு நீங்கள் உதவிகரமாக வேண்டுமென்று கோரிக்கை மனுக்களை 105 சங்கங்களுடைய சார்பில் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அதற்குப்பின்னாலே இந்தக் குழு மற்ற மாநிலங்களுக்கும் சென்றது. அந்த மாநிலங்களுக்கெல்லாம் சென்று வந்து அங்கே இருக்கக்கூடிய வரிவிதிப்புகள் எப்படி இருக்கின்றன நம்முடைய மாநிலத்திலே விதிக்கப்படுகின்ற வரிவிதிப்புகள் எப்படி இருக்

கின்றன, இதை எப்படி சீர் செய்வது என்றெல்லாம் கலந்து பேசி அதற்கான முடிவு எடுப்பதற்காக மற்ற மாநிலங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். நமது அண்டை மாநிலமான, ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களுக்கு சென்று அங்கேயுள்ள நிதி நிலைமைகளையெல்லாம் கண்டறிந்து வந்து, அதற்குப் பின்னாலே நிதித்துறையோடு கலந்து பேசி அதற்குப் பின்னாலே தான் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. ஆகையால் இந்த நிதித்துறையைப் பொறுத்த மட்டிலே ஏதோ தான் தோன்றித்தனமாக வரிவிதிப்பு செய் கிறோம் என்று பொருளல்ல, தமிழகத்திலே இருக்கக் கூடிய வணிகச் சங்கங்களையெல்லாம் அழைத்து பேசி, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து, மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு அறிந்து அதற்குப் பின்னாலேதான் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் (குறுக்கீடு)

திரு. அ. மலர்மன்னன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பேசி முடித்தவுடன் அனுமதி அளிக்கிறேன், மலர்மன்னன் உட்காருங்கள் (குறுக்கீடு) அமைச்சர் பேசி முடித்தவுடன் பேசிய உறுப்பினர்களின் சந்தேகத்தைக் கேட்க அனுமதிக்கிறேன், உட்காருங்கள்.

[பிற்பகல் 1-50]

திரு. அ. மலர்மன்னன்: துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலில் அவர் முடித்துவிடட்டும். 10 நிமிடத்தில் அவர் முடித்து விடுவார். பிறகு கேளுங்கள். அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையைப் பொறுத்த வரையில் கடந்த காலத்தில் இருந்து, குறிப்புகளைப் பார்க்கிறபோது இந்தத் துறை அரசுக்கு ஒரு பெரிய உதவிகரமான, மிக முக்கியமான துறையாக இருந்து வந்திருக்கிறது: இதை ஊனப்படுத்திவிடக் கூடாது, முடக்கிவிடக் கூடாது என்றுதான் அரசு கவனத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. வெளியே இருப்பவர்களால் மட்டுமல்ல, உள்ளே இருப்பவர்களால்கூட இதை

ஊனப்படுத்துகிற ஒரு சூழ்நிலை உருவாகிவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனத்தோடு இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. அந்த அளவுக்குத்தான் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கின்றன. கடந்த ஆண்டுகளுக்கான குறிப்புகளைப் பார்ப்பீர்களானால்-இத்துறை மூலம்
1981–82 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய்—ரூ. 591.25 கோடி
1982-83 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 696 கோடி
1983-84 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 751.18 கோடி
1984-85 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 905.55 கோடி
1985-86 ஆம் ஆண்டுக்கான வருவாய் ரூ. 1,035.13 கோடி:
இந்த நடப்பு ஆண்டில்—இன்றைய தினம் அளிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில், (பிப்ரவரி வரைதான் சொல்லிக்கப் பட்டிருக்கிறது என்றாலும்கூட, நேற்றைய முன்தினம் வரை அதாவது 30 ஆம் தேதி வரை—31 ஆம் தேதிக்கான கணக்கு வரவில்லை-கிடைத்த வருவாய் ரூ. 1,167.13 கோடியாகும். நேற்றைய கணக்கு எப்படியும் ரூ. 3 கோடிக்குக் குறையாது என்றுதான் நினைக்கிறேன். அப்படிப் பார்க்கிறபோது ரூ. 1,170 கோடியை இந்தத் துறை பெற்றுத் தந்திருக்கிறது. இதிலிருந்து என்ன பார்க்கிறோம் என்றால்—1981 ஆம் ஆண்டில் ரூ. 594 கோடி மட்டும் ஈட்டித் தந்த இந்தத் துறை இன்றைக்கு ரூ. 1,170 கோடியை எட்டிப்பிடிக்கிற அளவுக்கு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்றால் அது மிகையாகாது.

அரசு இந்தத் துறை இந்த ஆண்டு ஈட்டித் தர வேண்டும் என்று சொன்ன குறியீடு ரூ. 1225 கோடி. அந்த அளவுக்கு வசூலித்துத் தர வேண்டும் என்று அரசு நிர்ணயம் செய்திருந்தது. ஆனால் இதுவரை வந்திருப்பது ரூ. 1,170 கோடி. அதாவது ரூ. 55 கோடி அளவுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதாவது நாம் குறியீட்டைத் தாண்ட முடியாத நிலைமை ஏற் பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் கடுமையான வறட்சியின் காரணமாகவும், இயற்கையின் சீற்றங்கள் காரணமாகவும் தமிழகத்தில் விவசாயிகள் வேளாண்மையைப் பெருக்க இயல வில்லை. அதன் காரணமாக அவர்களின் வேளாண்மைப் பொருள்கள் அங்காடிக்கு வரவில்லை. ஆகவே அரசுக்கு வருவாயில்லை. வருவாய் முடக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பல்வேறு நிலைகள் உண்டாகியிருக்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக நாம் குறி யீட்டைக்கூட அடைய முடியாத அளவுக்கு நிலைமை உருவாகி யிருக்கிறது. இதையும் தாங்கிக் கொண்டு-பற்றாக்குறை பட்ஜெட்டையும் தாங்கிக் கொண்டு இந்த அரசு செயல்படுகிறது என்றால்-இந்த அரசு தன்னம்பிக்கை மிக்க அரசு-தன்னம்பிக்கை மிக்க தலைவர் தமிழகத்தின் முதல்வராக இருப்பதால் நான் அந்த அளவுக்கு இந்த அரசு பீடுநடை போடுகிறது என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அருமைச் சகோதரர் திரு. மலர்மன்னன் அவர்கள் ஒரு கலைஞருடைய பெயரைச் சொன்னார்கள். நான் அந்தக் கலைஞருடைய பெயரைச் சொல்லத் தயாராக இல்லை. திரைப் படத்தில் ஈடுபட்டிருக்கிற கலைஞர். கலைஞர் என்றால் நான் முன்னாள் முதலமைச்சரைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சினிமா துறையைப் பற்றி பேசியது எல்லாம் எக்ஸ்பஞ்சு பண்ணிவிட்டோம்........

மாண்புமிகு திரு. த. இராமசாமி: எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக வரு வதற்கு முன்னால் கலைத் துறையில், கலை வேந்தனாக இருந் தவர்கள். சக்கரவர்த்தியாக முடிசூடா மன்னனாக இருந்தவர்கள். திரைப்படத்தில் பார்க்கிறபோது மக்கள் எழுச்சியுற வேண்டும்-மக்கள் அடங்கியிருக்கக் கூடாது—அக்கிரமங்களை எதிர்த்துப் போராட வேண்டும்—நியாயத்தைக் கேட்க வேண்டும்—சமுதாய உணர்வு ஏற்பட வேண்டும்—தமிழ் சமுதாயம் உணர்வுள்ள சமுதாயமாக உருவாக வேண்டுமென்று கலைத்துறை மூலமாகப் பாடுபட்டு வந்தார்கள். அது படமாக இருந்தாலும் பாடலாக இருந்தாலும் தமிழகத்தில் அவையெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டிய கருத்துப் பெட்டகங்கள். அப்படிப்பட்ட கலையால் வளர்க்கப்பட்டவர் புரட்சித்தலைவர். புரட்சித்தலைவரால் கலை வளர்க்கப்பட்டது. ஆகவே இந்த இரண்டும் பின்னி இருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இன்றைய தினம் சில கலைஞர் களுடைய கையிலே அந்தத் துறையிருப்பதால் அந்த வரியைப் போட்டோம் என்று சொன்னார்கள். நிச்சயமாக இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்போது பேசியது குற்றச்சாட்டு. இது விளக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. த. இராமசாமி; எதற்காகச் சொல்லு கிறேன் என்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகு மான்கான் அவர்கள் தயவுசெய்து உணர்ச்சிவசப்பட வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிச் சொன்னது குற்றச்சாட்டு அல்ல. ஒரு கற்பனையான வாதம். இதனாலே வந்ததா அதனாலே வந்ததா என்ற கற்பனையான வாதம். வரி போடவில்லை என்று அமைச்சர் சொல்லுகிறார். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாரைப் பற்றியும் இந்த நேரத்தில் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. எங்களுடைய தலைவர் வளர்த்த முறையில் நான் சொல்லுகிறேன். அதைச் சொல்ல எங்களுக்கு உரிமை இருக்கிறது. இந்த நாட்டு மக்களுக்கு இதைச் சொல்லுவது எங்களுடைய கடமையாகும். அந்த உணர்வின் அடிப்படையிலே இந்த நேரத்தில் நான் சொல்லியாக

வேண்டும். ஏதோ கலைஞர் கையில் கலை உலகம் இருப்பதாக நினைத்துக்கொண்டு ** சொன்னார்கள். அதற்காகத்தான் நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது, இந்த நேரத்தில் நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது நீக்கியாச்சு. நீக்கியதைப் பற்றி நீங்களே பேச வேண்டாம்,

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு வழக்கறிஞர். பலருக்கு அவர் எடுத்துக்காட்டாக இங்கே நடந்து கொள்ள வேண்டும். நானும் சட்டமன்ற உறுப்பினராக வந்த காலத்திலேயிருந்து அவரது நடவடிக்கையை பார்க்கிறேன். நேற்றுக்கூட * * நடவடிக்கையைப் பார்த்தேன்.

வழக்கறிஞர்கள் முன்மாதிரியாக இருந்து எங்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் இந்தச் சபையை சிறந்த முறையில் நடத்திச் செல்ல முடியும். ஆகவே அவர்கள் நல்ல உதாரணமாக விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையை தட்டும் பலத்த ஒலி) அதே நேரத்தில் அவருக்குத்தான் பேசத் தெரியும், அவருக்குத்தான் எல்லாம் தெரியும் என்று நினைப்பார்களேயானால், நிச்சயமாக அது நடக்காது என்பதை தெள்ளத் தெளிவாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு இன்றைய தினம் தமிழகத்து முதல்வர், புரட்சித் தலைவர், கலைத் தொழிலாக இருந்தாலும் சரி, எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி, வளமான தொழிலாக வளர்க்க வேண்டும் என்று மிகுந்த கவனமாக இருக்கிறார் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

அதைப் போலவே, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் ஒரு கருத்தைச் சொன்னார். தமிழகத்திலே இருக்கக் கூடிய 63 சோதனைச் சாவடிகளில் விருதுநகரில் அதிகமாக வைத்திருக் கிறார்கள், அந்த நான்கு சோதனைச் சாவடிகளையும் எடுத்து விடலாம் என்று சொன்னார்கள். அத்தனையும் இருக்க வேண்டிய தில்லை, ஏதாவது ஒன்று, இரண்டு இருக்கலாம் என்று சொன் னார்கள். தமிழகத்திலே இருக்கக் கூடிய 63 சோதனைச் சாவடிகளில் பொதுவாக சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் 9 சாவடிகள் அமைந்திருக்கின்றன, திருச்சியிலே 4 சோதனைச் சாவடிகள் அமைந்திருக்கின்றன, சேலத்திலே 4 சோதனைச் சாவடிகள் அமைந்திருக்கின்றன. ஆகவே வணிகம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதிகமாக இருக்கக் கூடிய இடத்திலே வரி ஏய்ப்பு இருக்கக் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடுதான் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு அமைக்கப்பட்டதல்ல இவைகள். விருதுநகரில் 20 ஆண்டுக் காலமாகவே நான்கு சோதனைச் சாவடிகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானிய கோரிக்கை யின்மீது பதில் அளிக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொல்லுகிற கருத்தை நான் மறுக்கவில்லை. இதற்கு முன்னால் பேசுகின்றபோது இந்தப் பக்கத்திலேயிருந்து பேசினார், இப்போது மறுபுறத்திலேயிருந்து பேசிக்கொண்டிருக் கிறார். இப்போது அங்கே போய் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருக்கிறார். உறுப்பினர் தன்னுடைய இருக்கை யிலிருந்து பேச வேண்டும் என்று துணை சபாநாயகர் தெரிவிக்க வேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அனுமதிக்கப்பட்ட இருக்கையிலிருந்து கொண்டுதான் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார். இந்த துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் பற்றிய ஒரு கருத்தை இங்கே வலியுறுத்திச் சொன்னார். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் பேசுகின்றபோது ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதற்கான விளக்கங்களை கேட்டு அரசாங்கப் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய நம்பிக்கையை பெற்று வந்திருந்தாலும், அதிலே நான்கு பேர் வணிகர்களாக இருக்கக்கூடியவர்கள், இந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்கள், தங்களுடைய அனுபவபூர்வ மான கருத்துக்களை யோசனைகளை எடுத்து வைத்திருக் கிறார்கள், எதிர்காலத்திலேயாவது நடைமுறையிலே கொண்டு வர வேண்டும் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதெல்லாம் அருமையான யோசனைகள். அவற்றையெல்லாம் அரசாங்கம் கவனத்திலே வைத்துக் கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சோதனைச் சாவடிகள் மொத்தமாக எடுத்துவிட வேண்டும் என்று....

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப்படுகிறது.

அமைச்சரவர்கள் பேசுகிறபோது * * என்று பேசியது நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சோதனைச் சாவடிகள் எல்லாம் கொள்ளைக்குத் தலைவாசல் ஆக இருக்கின்றதென்ற கருத்தை நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. தெய்வநாயகம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதனாலே சோதனைச் சாவடிகளை நீக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. பொதுவாக சோதனைச் சாவடிகள் என்னும்போது யாரும் பயப்பட வேண்டியதில்லை. அரசாங்கம், அன்றாடம் உழைக்கும் மக்களை, வணிக மக்களைக் கருத்திலே கொண்டுதான் வரிவிதிப்பு செய்கிறது. ஆகையால் எல்லாவிதமான கருத்துக்களையும் தெரிந்துதான், அறிந்துதான், ஆய்ந்துதான் வரி விதிப்பு செய்கிறது அரசாங்கம். அந்த அடிப்படையிலே அவர்களிடத்திலே வரிகளை வாங்குகிறோம்; ஆகையால் சோதனைச் சாவடிகள் என்று வரும்போது, சட்டத்தை எல்லாம் மீறி, சோதனைச் சாவடிக்கு வரும்போது அங்கே தணிக்கை செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இரயில் போய்க்கொண்டிருக்கிறது. டிக்கட் எடுத்திருக்கிறோம். அப்போது டி.டி.ஆர். வரும்போது டிக்கட் காண்பியுங்கள் என்றுதான் கேட்பார். அவர் சோதனை செய்யக்கூடாது என்று சொல்வதற்கு எந்த விதியிலும் இடமில்லை. ஆகவே சோதனை என்பது மிக மிக அவசியம். அந்த அடிப்படையிலேதான் சோதனைச் சாவடிகள் அமைந்திருக்கின்றன. பொதுவாக சோதனைச் சாவடிகள் மூலம் இன்றைய தினம் அரசுக்குக் கிடைத்து இருக்கிற தொகையைச் சொல்கிறேன். 1985-86 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் செயலாக்கப் பிரிவினரால் வரி ஏய்ப்புத் தொகை கண்டுபிடிப்பு ரூபாய் 40 கோடியே 36 இலட்சம். அதிலே வசூலானது 2 கோடியே 86 இலட்சம் ரூபாய். மற்றவை நிலுவையில் உள்ளது. 1986 ஆம் ஆண்டிலே தமிழ் நாட்டிலே செயலாக்கப் பிரிவினரால் வரி ஏய்ப்பு கண்டுபிடிப்பு தொகை 59 கோடியே 48 இலட்சம். அதில் வசூலான தொகை 4 கோடியே 12 இலட்ச ரூபாய். மீதி நிலுவையில் உள்ளது. செயலாக்கப் பிரிவினரால் சோதனைச் சாவடிகள் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை பற்றிய கணக்கு இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இன்றைய தினம் சோதனைச் சாவடிகள் மூலமாக வரி எய்ப்பவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கத்தான் அந்த அமைப்புகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்ன போது, இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். அதிகாரிகள் தவறுகள் செய்கிறார்கள் என்று ஒட்டுமொத்தமாகச் சொன்னார்கள். ஒட்டு மொத்தமாக அனைத்து அதிகாரிகளும் தவறு செய்வதாக நாம் கருத முடியாது. எல்லா மட்டத்திலும், எல்லா அமைப்பிலும் அப்படி இருக்கத்தான் செய்யும். நம்முடைய சமுதாயத்திலே அப்படிப்பட்ட பண்பு இருக்கிறது. பல நேரங் களில் சில அதிகாரிகள் தவறு செய்யலாம். ஒட்டுமொத்தமாக எல்லோரும் தவறு செய்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. இருந்தாலும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் ஆதாரங்களோடு தருகிற போது, அரசு அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட் டிருக்கிறேன். இங்கே பல்வேறு விவரங்களைச் சொல்லியிருக் கிறார்கள். நேரம் இருந்தால் இன்னும் சொல்லிக்கொண்டிருக் கலாம். இந்த அரசைப் பொறுத்தமட்டில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பல ஆண்டுகளாக ஒரு கோரிக்கை இருந்து வந்தது. பக்கத்து மாநிலங்களுக்குச் சென்று அங்கே வாகனங்கள் வாங்குகிறார்கள், அதனால் நம்முடைய அரசுக்கு இழப்பு ஏற்படு கிறது என்றும் அந்த நிலை தமிழ் நாட்டிலே இருக்கக்கூடாது, அண்டை மாநிலத்தில் என்ன வரி விதிப்பு இருக்கிறதோ அதைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைய தினம் அதைக் குறைத்திருக்கிறோம். ஒரு கார் வாங்கினால் 5,000, 6,000 ரூபாய் குறைகிறதென்று சொல்லுமளவுக்கு நிலைமைகளைச் செய்திருக் கிறோம். ஆகவே உற்பத்திப் பொருள்களானாலும் சரி, தீக்குச்சி போன்ற தொழிலானாலும் சரி, அவற்றைக் கருத்திலே கொண்டு தான் அரசு இருக்கிறது. இங்கே பல்வேறு கருத்துக்களை வழங்கி யிருக்கிறார்கள். அவற்றை அரசு நிச்சயமாக கருத்திலே கொள்ளும், உறுப்பினர்களுடைய அருமையான யோசனைகளை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளும் என்று சொல்லி அமைகிறேன்.

திரு. அ. மலர்மன்னன்: ஒரே ஒரு கேள்வி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்ச ரவர்கள் பதிலிலே திருச்சி, மதுரை, கோவை போன்ற நகரங் களுக்கு மூவர் குழு போய், அங்கேயுள்ள வியாபாரிகளின் குறை பாடுகளை அறிந்து, அதற்குப் பின்னர்தான் இந்த மானியக் கோரிக்கை தயாரிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது ஒன்றுதான். வருகின்ற 6 ஆம் தேதி அவர்கள் கொடுத்த அத்தனை கோரிக்கைகளும் நிராகரிக் கப்பட்டதால் முழு கடையடைப்பு தமிழ்நாடு முழுவதும் செய்யப் போவதாக வியாபாரிகள் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் குழு அந்த வியாபாரிகளைச் சந்தித்து அவர்களுடைய குறைகளை நீக்கியிருக்குமானால் இன்றைக்கு அந்த வேலை நிறுத்தத்திற் கான காரணம் இல்லையே. இதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டும்.

அடுத்து என்போர்ஸ்மென்ட் விங், சோதனைச் சாவடிப் பற்றிச் சொன்னார்கள். சோதனை சாவடி என்று நான் சொல்லும்போது வேதனை சாவடி வரி ஏய்பார். தலைவாசல் என்ற நிலை இருக்கின்றது. இன்றைக்கு அதை நான் நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதற்கான பொறுப்பையும் நான் ஏற்கிறேன். அந்தச் சோதனை சாவடிகள் மூலமாக எந்த அளவுக்கு வரிப் பணம் வந்திருக்கின்றது, இதனால் அந்தத் துறைக்கு எவ்வளவு செலவாகிறது என்பதையும் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இரண்டையும் பற்றி சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தவறாக தெய்வநாயகம் என்று சொல்லிவிட்டேன். மாண்புமிகு சகோதரர் திரு. மலர்மன்னன் அவர்கள்தான் அந்த கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். சோதனை சாவடி, வேதனை சாவடி என்று எதிரும் புதிருமாக இப்படிப்பட்ட வசனங்களைப் போட்டு சொல்லியிருக்கின்றார்கள். எங்களுக்கும் அது கை வந்த கலை தான். இல்லை என்று சொல்லவில்லை. ஆகையினாலே இன்றைய தினம் சோதனை இல்லாமல் விட்டுவிடச் சொல்கிறார்களா? செலவாகிறது என்று சொன்னால் வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்க இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாமா? ஆகவேதான் சோதனை சாவடி அவசியம் என்று இந்த அரசு நினைக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல நீங்கள் கேட்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில்லை. அதனாலே அரசுக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறது? அதனாலே ஒரு அரசாங்கம் பொருளாதார முறையிலே முடக்கப்படுமானால், தமிழ் சமுதாயத்திற்காகப் போடப்பட்டிருக்கின்ற வளர்ச்சித் திட்டங்கள் முடக்கப்பட்டு விடுமே என்ற கருத்தில்தான் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினருக்கு ஒரே ஒரு சந்தர்ப்பம்தான்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த விஷயத்தைப் பற்றி மேலும் விளக்கமாகத் தெரிந்துகொள்வதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். அதிகாரிகள் பற்றி நான் குறிப்பிடுவதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதிகாரிகள் எல்லாமே தவறு செய்கின்றார்கள் என்று நானும் குறிப்பிடவில்லை. சிலபல இடங்களிலே தவறு நடக்கலாம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்கின்றார்கள். காஷ்மீர் அரசு செய்திருப்பதைப்போல முறைகேடு இருந்தால்தானே அந்த ஆய்வுகளிலே கண்டுபிடிக்கப்படும். ஆகவே முறைகேடாக அவர்கள் சொத்து சேர்த்திருக்கின்றார்கள் என்பதை கண்டறிவதற்காக என்று காஷ்மீர் அரசு அறிவித்ததைப் போல அதற்கு ஒரு கமிஷனை அறிவித்து விசாரணை நடத்த என்ன தடை அரசுக்கு இருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் விதியின்படி அவர்கள் சொத்து பற்றி விவரம் தரவேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே அந்த விதிமுறைகளின் கீழ் கண்காணித்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மானியத்திலே பேசும்போது வரி இல்லாத சரக்குக்கு அடிஷனல் சர்சார்ஜ் விதிக்கப் பட்டிருப்பது பற்றி கேட்டேன். அதாவது செகண்ட் சேல்ஸ். ஒரு முனை வரிவிதிப்புக்கு இப்போது அதிகப்படி அடிஷனல் சர்சார்ஜ் போடப்பட்டிருக்கிறது. இது சரிதானா? அப்படி போட முடியுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வணிகராகவும் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அண்ணன் ஆறுமுகம் அவர்கள் அந்த துறையிலே கொஞ்சம் கவனமாக இருந்துகொண்டுதான் கேள்வியை கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பொதுவாக ஒரு முனை வரி என்று வருகிறபோது, எல்லா பொருள்களையும் அரசாங்கத்தில் ஒரு முனை வரியாகத்தான் கொண்டு வரவேண்டும் என்று ஆவலோடு இருந்தாலும்கூட மேலே சொல்லியிருக்கக்கூடிய அந்த கமிஷன் சிபாரிசு பண்ணி இருந்தாலும் அமுல் படுத்தவேண்டுமென்று அரசு, பல்வேறு முனைகளிலே இருக்கக்கூடிய பொருள்களை ஒரு முனைக்கு கொண்டு வருகிறபோது, அரசாங்கத்தை சில நேரங்களிலே, சிலர், ஒரு சிலர், அத்தனை பேரையும் நான் சொல்லவில்லை, ஒரு சிலர், அவர்கள் முதலில் எங்கே அந்த சரக்குகளை வாங்கினார்கள் என்று அறிய திடீரென்று இரண்டாம் முறை அந்த அதிகாரிகள் பார்க்கிறபோது, ஒரு முனை வரி பொருள்களை பார்க்கிறபோது அந்த பில்-ஐ வைத்திருப்பார்கள். அந்த பில் எங்கே வாங்கியது என்றால், அந்த இடத்திலே ஆளே இருக்காது. அந்த அட்ரசே இருக்காது. சம்பந்தப்பட்ட இடத்தில் மைதானமாக இருக்கும். ஆகவே போலித்தனமாக அந்த பில் சில இடங்களிலே இருக்கின்றது. அதை கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காக முதல் முனை என்பதை இரண்டாம் முனையாக மாற்றுவோமானால் ஓரிடத்திலேயாவது அரசினுடைய வரியைப் பெற்றுவிடலாம், அரசுக்கு வரி இழப்பு ஏற்படாது என்ற அளவிலேதான் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருந்து வியாபாரிகள் சங்கம் ஒரு வாரத்திற்கு அவர்கள் வியாபாரத்தை சஸ்பெண்ட் செய்வதாக அறிவித்திருக்கிறதே, ஒரு விளம்பரம் வந்திருக்கிறதே, அந்த செய்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு, அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைத் தவிர்ப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கை பத்திரிகையிலே மற்ற இடங்களிலே எல்லாம் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட, மாண்புமிகு நிதி அமைச்சர் நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் அவர்கள் நேற்றையதினம் அது சம்பந்தமாக பதில் அளித்து இருக்கின்றார்கள்.

(பிற்பகல் 2–10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ஈ.வே.கி.ச. இளங்கோவன், கோ. வீரய்யன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் எ.எஸ்.ஏ. ஆறுமுகம், கே, சுப்பராயன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்-என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,65,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2-4-1987) காலை 10-00-மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(ஆ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 28-11-1986 ஆம் நாளிட்ட 3304 ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1984) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

58. சென்னை, இந்திய பிராணிகள் நல வாரியத்திற்கு சொந்தமான எம்.எஸ்.எம். 4369–எண்ணுள்ள நடமாடும் பிராணிகள் சிகிச்சை வண்டிக்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து உள்துறையின் 26-12-1986 ஆம் நாளிட்ட 3598 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

59. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராவி படுபொருட்கள் (கட்டுப்பாடு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 27-10-1986 ஆம் நாளிட்ட 1374 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

90. கோரிக்கை எண். 4 தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்.)

91. 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய்-வரவினங்கள்) மீதான அறிக்கையில் வணிக வரிகள்—அறக்கட்டளைத் துறை மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1982-83) 21-வது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை.

92. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972-73 ஆம் ஆண்டிற்கான (வருவாய்-வரவினங்கள்) குறித்து பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த முதலாவது அறிக்கை மற்றும் குழுவின் (1980-82) பதிமூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கைப் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை.

93. 1982-83-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழிந்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை.

இணைப்பு.

(51 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)
மானியக் கோரிக்கை எண் 4.

தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், ஏனைய வணிக வரிச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் விற்பனை வரியாக வசூலிக்கப்பட்ட தொகை, 1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு உரிய வருவாயில் 68 சதவீதமாகும். 1981-85-ல் வணிக வரிகள் வாயிலாக ரூ. 905.32 கோடி வருவாய் கிட்டியது. 1985-86-ல் ரூ. 1,035.13 கோடி கிட்டியது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் சுமார் 13 சதவீதம் கூடுதலாகும்.

2. வணிகவரித் துறை பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது:—

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தைய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஒட்டல்கள் தங்கும் இல்லங்களில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

3. கடந்த ஐந்தாண்டுகளில் வணிகவரித் துறை வசூல் செய்த வருவாயும் இத்துறைக்கு ஏற்பட்ட செலவும் வருமாறு:—

ஆண்டு. (1)	வருவாய். (2)	செலவு. (3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1981–82	59,425.00	778.31
1982–83	69,604.09	942.59
1983–84	75,118.00	1,067.55
1984–85	90,532.00	1,230.66
1985–86	103,513.00	1,380.00
1986–87	105,980.00 (1987 பிப்ரவரி வரை)	1,065.00 (1986 நவம்பர் வரை.)

1986-87 ஆம் ஆண்டில் 1987 பிப்ரவரி வரை ரூபாய் 105,908.00 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் அதே கால அளவில் வசூலான தொகை ரூபாய் 92,982.00 இலட்சமாகும். இத்தொகை சென்ற ஆண்டைவிட ரூபாய் 12,998.00 இலட்சம் அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. அதாவது 14 சதவீதம் அதிகரித்துள்ளது.

4. வணிகவரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல்:—

வணிகவரி அலுவலகங்களுக்கு வரும் வணிகப் பெரு மக்களுக்கும், வணிகவரித் துறைப் பணியாளர்களுக்கும் தேவை யான வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் படிப்படியாக வணிகவரி அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. தற்போது (விழுப்புரத்திலுள்ள ஒன்று நீங்கலாக) அனைத்து உதவி ஆணையாளர்கள் (செய லாக்கப் பிரிவு) அனைத்து எல்லைப் பகுதி உதவி ஆணையாளர்கள் (புதுக்கோட்டை, அருப்புக்கோட்டை, நாமக்கல், திருவண்ணா மலை, கரூர், விழுப்புரம் ஆகிய ஆறு இடங்களிலுள்ள அலுவலகங் கள் நீங்கலாக) நிருவாகம்-செயலாக்கம் ஆகிய இரு பிரிவுகளையும் கொண்ட வணிகவரித் துறையின் அனைத்து துணை ஆணை யாளர்கள் கோயம்புத்தூரிலுள்ள துணை ஆணையாளர் (செய லாக்கம்) அலுவலகம் நீங்கலாக ஆகியோரின் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. 276 வரி விதிப்பு வட்டங்களில் 91 வரிவிதிப்பு வட்டங்கள் அரசுக் கட்டிடங்களில் உள்ளன. எஞ்சியுள்ள அலுவலகங்களுக்குரிய கட்டிடங்கள் படிப் படியாகக் கட்டி முடிக்கப்பெறும்.

நடப்பாண்டில் (1986-87) பின்வரும் புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன; அவை

(i) தற்போது கோயம்புத்தூரிலுள்ள வணிகவரிகள் கட்டிடத்தின் நான்காவது மாடி.

(ii) சென்னை, கிரீன்வேய்ஸ் சாலையிலுள்ள மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்ட அலுவலகத்தில் வணிகவரி அலுவலகங்களுக்கான கூடுதல் மாடிகள்.

(iii) கும்பகோணம், திருப்பூர் ஆகிய இடங்களிலுள்ள வணிகவரி அலுவலகங்களுக்கான கூடுதல் மாடிகள்.

வேலூர், நாகப்பட்டினம். திருவாரூர் ஆகிய இடங்களிலுள்ள வணிகவரி அலுவலகங்களுக்கான கூடுதல் மாடிகளின் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுள்ளது. சென்னை, கிரீம்ஸ் சாலையிலுள்ள வணிகவரி கட்டிடத் தொகுதியின் பல மாடிக் கட்டிடத்தின் புதிய இணைப்பு விரைவில் கட்டத் தொடங்கப்படும்.

புதிதாக அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்.

மொத்தம் ரூ. 67.32 இலட்சம் செலவில் கோயம்புத்தூரிலுள்ள வணிகவரி அலுவலகத்தின் இணைப்புக் கட்டிடம், நாகர்கோயிலுள்ள வணிகவரி அலுவலகத்திற்கான கூடுதல் மாடிகள், தூத்துக்குடியிலுள்ள வணிகவரி அலுவலகத்திற்கான சுற்றுச் சுவர்களுடன் கூடிய கூடுதல் கட்டிடம், திருச்சி, நீதிமன்ற வளாகத்திலுள்ள வணிகவரி அலுவலகத்திற்கான இணைப்புக் கட்டிடம் ஆகியவை 1987-88 ஆம் ஆண்டில் கட்டக் கருதப்பட்டுள்ளது. இதற்காக பகுதி 2 திட்டத்தின் கீழ், 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 29 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

5. வணிகவரிச் சோதனைச் சாவடிகள்.

தமிழ்நாட்டில் வணிகவரித் துறை சம்பந்தமாக 63 சோதனைச் சாவடிகள் உள்ளன. அவற்றுள் பின்வரும் 14 சோதனைச் சாவடிகள் தற்போது அரசுக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. முதல் 12 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசுக் கட்டிடங்களிலும், எஞ்சியுள்ள 2 ஓரளவு நிரந்தரமான அரசுக் கட்டிடங்களிலும் செயல்படுகின்றன.

1. இரும்புலியூர்-தாம்பரம்.
2. பூவிருந்தவல்லி.
3. புழல்.

4. இராணிப்பேட்டை.
5. ஓசூர்.
6. கே. ஜி. சாவடி.
7. மீனாட்சிபுரம்.
8. காட்பாடி.
9. சின்னசேலம்.
10. புளியறை I.
11. சன்னூரப்பட்டி.
12. கடம்பர்கோயில்.
13. தோப்பூர்.
14. லண்டன்பேட்டை.

ஏனைய 49 சோதனைச் சாவடிகள், புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகைகளில் அல்லது தனியார் கட்டிடங்களில் செயல்படுகின்றன. களியக்காவிளையில் ரூ. 4 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சோதனைச் சாவடிக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்புக்கு ஒப்புதலளிக்கப்பட்டு, விரைவில் பணி மேற்கொள்ளப்படும். 1986–87 ஆம் ஆண்டில் பூவிருந்தவல்லியிலும், ஓசூரிலும் இருவழிச் சோதனைச் சாவடிகள் பெரிய சோதனைச் சாவடிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக தொடர்ந்து நடைபெறுகின்றன. ஆண்டொன்றுக்கு ரூ. 4.71 இலட்சம் தொடரினச் செலவில், இராணிப்பேட்டை, கே.ஜி. சாவடி ஆகிய இரு இடங்களிலும் இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கான 1987–88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.46 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

6. செய்தித் தொடர்பு வசதிகள்.

பெரும்பாலும் அனைத்து வரிவிதிப்பு வட்டங்களுக்கும் தொலைபேசி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. புதிதாகப் பிரிக்கப்பட்ட வரிவிதிப்பு வட்டங்களுக்கும் தொலைபேசி வசதிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும்.

7. வரிவிதிப்பு, வட்டங்களை வலுப்படுத்தல், பிரித்தல், சீரமைத்தல் முதலியன.

1986-87 ஆம் ஆண்டில் பணிச்சுமை மிகுந்த வரிவிதிப்பு வட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு 10 வரிவிதிப்பு வட்டங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. 1987-88 ஆம் ஆண்டில் பணிச் சுமை மிகுந்த மேலும் சில வரிவிதிப்பு வட்டங்கள் திருத்தியமைக் கப்பட்டு புதிதாக 4 வரிவிதிப்பு வட்டங்கள் அமைக்கப்படும். இதேபோன்று, 1987-88 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் IV மற்றும் VII ஆகிய பணிச்சுமை மிகுந்த இரு வணிகவரி மண்டலங் களும் சீரமைக்கப்பட்டு கூடுதலாக ஒரு மண்டலம் அமைக்கப்படும். இத்திட்டங்களும் வணிகவரித் துறையின் பல்வேறு அலுவலகங் களிலும், ஆணையாளர் அலுவலகத்திலும் கூடுதல் பணியாளருக் கான திட்டங்களும் 1987-88 ஆம் ஆண்டிற்கான ரூ. 15.93 இலட்சம் மொத்தம் நிதியொதுக்கத்துடன் ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 2.85 இலட்சம் தொடராயினச் செலவிலும் ரூ. 18.72 இலட்சம் தொடரினச் செலவிலும் 1987-88 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். இத்திட்டங்களில், சென்னை, விற்பனைவரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தில் (பிரதான ஆயத்தில்) துறை உறுப்பினர் ஒருவரின் பதவித்தரந்தை இணை ஆணையாளர் பதவித் தரத்திற்கு நிலை உயர்த்துதல், கணிக்கைக்குப் பொறுப்பு வகிக்கத்தக்க வகையில் வணிகவரி இணை ஆணையாளர் பதவி ஒன்றைக் கூடுதலாக உருவாக்குதல் ஆகியவையும் அடங்கும்.

8. கூடுதல் ஆயத்தீர்வை:

துணி, சர்க்கரை புகையிலை ஆகியவற்றின்மீது 1957 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதித்து வருகிறது. இக்கூடுதல் ஆயத்தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயில் மாநில அரசுக்கு பங்கு கிடைப்பதால் இப்பொருட்கள் மீது மாநில அரசு விற்பனை வரி விதிக்க முடியாது. மேற்கூறிய மூன்று இனங்களில் போதுமான வருவாய் கிடைக்கும் பொருட்டு ஆயத்தீர்வையின் வீதந்தை, அதாவது அந்த மூன்று இனங்களின் மதிப்பிற்கான (Value of clearance) சதவீதமாக, உயர்த்துவது அவசியம் என்று இந்த அரசு, மத்திய அரசை வற்புறுத்தும். அதே சமயத்தில் திரிபாதி குழுவின் பரிந்துரை களின்படி வனஸ்பதி, மருந்துபொருட்கள் மற்றும் மருந்துகள், சிமிட்டி, காகிதம் மற்றும் காகித அட்டை, பெட்ரோலியப் பொருட்கள் ஆகிய ஐந்துப் பொருள்களைப் பொறுத்தவரையில், கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கக் கருதுவதையும் மாநில அரசு எதிர்க்கிறது. 2-11-1983 அன்று புதுதில்லியில் மத்திய நிதி அமைச்சர் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில் மேற் சொன்ன ஐந்து பொருட்களின் மீது விற்பனை வரிக்குப்பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணித்தரமாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஏனைய

சில மாநிலங்களிலிருந்தும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இவை குறித்து மாநில அரசுகளுக்கிடையே கருத்து ஒருமைப் பாட்டைக் கொண்டு வருவதற்காகத் தொடர்ந்து முயற்சிகள் செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

9. சில கூடுதல் இனங்கள் மீது விற்பனை வரி விதித்தல்:

1982 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (46-வது திருத்தம்) சட்டத்திற்குக் குடியரசு தலைவரின் இசைவு 2-2-1983 அன்று பெறப்பட்டது. மாநிலங்களுக்கிடையே ஆன ஒப்படைச் சரக்கு போக்குவரத்து, பணி ஒப்பந்தங்கள், தவணைக் கொள்முதல், பொருட்களைக் குத்தகைக்கு விடுதல். சட்டப்படிக்கு இணைக்கப் படாத சங்கங்களுக்கு செய்யப்படும் விற்பனை (உணவு மற்றும் பானங்கள்) வழங்குகின்ற வகையில் செய்யும் விற்பனை ஆகிய வற்றிற்கு வரி விதிக்க இச்சட்டம் வகை செய்கின்றது. மேற் சொன்ன இனங்கள் வரி விதிப்பு வரம்புக்கு அப்பாற்பட்டதாக இருந்து வந்தன, மாநிலங்களிடையே ஆன ஒப்படை சரக்கு போக்குவரத்து வரி கணிசமான கூடுதல் வருவாய்க்கு வழி செய்யும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இவ்வகையில் விரைவில் சட்டமியற்றுவதற்கு அரசு இவ்விஷயத்தை எடுத்துக் கொண்டுள்ளது. பணி ஒப்பந்தங்கள், தவணைக்கொள்முதல், குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றின் மீது வரிவிதிப்பது தொடர் பாக தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம் திருந்தப்பட்டது.

10. (i) வணிக வரித்துறைப் பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை.

சென்னையில் உள்ள வணிக வரித்துறைப் பணியாளர் பயிற்சி நிறுவனம் வணிக வரித்துறை அதிகாரிகளுக்குத் தொடர்ந்து பயிற்சியளித்து வருகிறது. இதற்கு வணிகவரிகள் துணை ஆணை யாளர் பதவித்தரத்தில் இயக்குநர் ஒருவர் தலைவராக இருக்கிறார். இரு உதவி ஆணையாளர்கள் (வணிகவரிகள்) ஒரு வணிகவரி அதிகாரி ஆகியோர் அடங்கிய ஆசிரியர் குழு இந் நிறுவனத்தில் உள்ளது. இந்நிறுவனத்தில் பயிற்சிக்கான பொருட்கள், மதிப்பூதியம் பெறும் ஆசிரியர் குழு, புத்தகங்கள் முதலான இனங்கள் மீது தேவையான செலவினங்களுக்காக ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ. 1,20,000 (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம்) அரசு முன்னரே அனுமதி வழங்கியுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில், ரூ. 16,000 செலவில் கூடுதல் சாதனங்களும், காட்சி-செவிப்புல விளக்கச் சாதனமும் வாங்குவதற்கு வகை செய்யக் கருதப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் வணிகவரி அதிகாரிகளுக்கும் உதவி வணிக வரி அதிகாரிகளுக்கும் ஆறு வார காலமும், துணை வணிகவரி அதிகாரிகளுக்கு மூன்று வார காலமும் பணியிடப் பயிற்சி அளிக்கின்றது. ஒரே சமயத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் 20 வணிக வரி அதிகாரி அல்லது துணை வணிகவரி அதிகாரி அல்லது உதவி வணிகவரி அதிகாரிகள் வீதம் இரண்டு தொகுதியினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

1986-87 ஆம் ஆண்டில் உதவி வணிகவரி அதிகாரிகளுக்கு (88 பயிற்சியாளர்) 5 தொகுதி பயிற்சிகளும், வணிகவரி அதிகாரிகளுக்கு (66 பயிற்சியாளர்) 4 தொகுதி பயிற்சிகளும், துணை வணிகவரி அதிகாரிகளுக்கு (76 பயிற்சியாளர்கள்) 4 தொகுதி பயிற்சிகளும் பணியிடப் பயிற்சியை இந்நிறுவனம் அளித்தது. பயிற்சி வகுப்புகளின் இறுதியில், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலும், மத்திய விற்பனை வரிச் சட்டத்திலும் தேர்வுகள் நடத்தப்படுவதுடன் இப்பயிற்சியாளர்களின் சாதனைத் திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, பயிற்சி வகுப்புகள் முடிந்தவுடன் வணிகவரி ஆணையாளருக்கு ஒவ்வொரு பயிற்சி வகுப்பு பற்றிய சாதனைத்திறன் அறிக்கை அனுப்பப்படுகின்றது. அனைத்து பயிற்சி வகுப்புகளிலுமே பயிற்சியாளர்களின் ஒட்டு மொத்த சாதனைத் திறன் மனநிறைவு அளிப்பதாக உள்ளது.

மேலும், பொதுத் துறை நிறுவனங்களில் விற்பனை வரி குறித்த விவகாரங்களை கவனிக்கும் அதிகாரிகள், விற்பனை வரிச் சட்ட விதித் துறைகளை முறையாகப் புரிந்து கொண்டு நன்முறையில் தமது கடமைகளைச் செய்ய அவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் திட்டங்களை இந்நிறுவனம் மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் 20 பயிற்சியாளர் வீதம் 10 பணி நாட்கள் பயிற்சி வகுப்பு நடத்தப்படும். இந்த ஆணைக்கிணங்க, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அனுப்பும் பல்வேறு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இக்கூட்டுறவு நிறுவனங்களுக்கான பயிற்சி வகுப்பு முடிந்தவுடன், தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் தொழில் பிரிவுகளுக்கு இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

(ii) கடந்த ஆண்டினைப் போலவே, இந்த ஆண்டும், வணிகவரித் துறையின் இரண்டு முதுநிலை அதிகாரிகளை புதுடில்லி, பொது நிதி கொள்கைக் குறித்த தேசிய நிறுவனத்திற்கு புதிதாகப் பயிற்சி பெறுவதற்கு அரசு முகமையில் அனுப்பியுள்ளது.

11. ஆலோசனைக் குழுக்கள்:

விற்பனை வரி நிர்வாகம் குறித்த கருத்துப் பரிமாற்றம் செய்யவும் வர்த்தகர்களான பொது மக்களின் கருத்து கணிப்பு என்ன என்பதை அறியவும் உதவும் வகையில் பல்வேறு நிலைகளில் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்து வருகிறது. அவற்றின் பங்கு என்ன என்பது கீழே விவரிக்கப்பட்டுள்ளது:—

(i) மாவட்ட அளவிலான குழுக்கள்:

மாவட்ட அளவிலான குழுக்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைவர்களாக இருக்கின்றனர். அரசு சார்பு உறுப்பினர்களுடன் வர்த்தக சபை, வணிகச் சங்கங்கள், கூட்டுறவு, உழவுத் தொழில் சார்பு அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அரசுச் சார்பற்ற உறுப்பினர்களாக அதில் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுக்கள் வணிகவரிச் சட்டங்கள் நடைமுறைகள் தொடர்பாக வர்த்தகத் துறைக்கே உரித்தான பிரச்சினைகளை விவாதிக்கின்றன. அவற்றில் காணும் குறைகளைக் களைவதற்கான ஏற்பாடுகளை எடுத்து கூறுகின்றன. மேலும், விற்பனை வரிச் சட்டங்கள் விதிகளின் நிர்வாகம் தொடர்பான விஷயங்களில் துறைக்கு ஆலோசனை அளிக்கின்றன. இக்குழுக்களின் முடிவுகளும், ஆலோசனைகளும், நிர்வாக மேம்பாடு கருதியும் வர்த்தக சமூகத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைக் கையாளவும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

மூன்றாண்டு கால அளவிற்கு மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களை மாற்றியமைக்குமாறு வணிகவரி அறநிலையத்துறையின் 27-9-1984 ஆம் நாளிட்ட 1094 ஆம் எண் அரசாணையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ii) மாநில அளவிலான ஆலோசனைக் குழு:

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு வணிகவரிகள்—அறநிலையத்துறையின் 1-10-1984 ஆம் நாளிட்ட 1104 ஆம் எண் அரசாணையின்படி, 1-10-1984 முதற்கொண்டு 2 ஆண்டு காலத்திற்கு மீண்டும் அமைக்கப்பட்டது. வணிகவரிகள் அறநிலையத்துறையின் 12-8-1986 ஆம் நாளிட்ட 828 ஆம் எண் அரசாணையில், இக்கால அளவு 31-3-1987 வரையிலும் மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அமைப்பு முறை பின்வருமாறு:—

வணிகவரிகள் துறை அமைச்சர்—தலைவர்.

வேளாண்மைத்துறை அமைச்சர்—உறுப்பினர்.

ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்—உறுப்பினர்.

வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அரசு இணை/துணைச் செயலாளர்—செயலாளர்.

வணிகவரிகள் துறையின் அதிகாரிகள் (அதில் குறிப்பிட்டுள்ள படி)—அழைப்பாளர்கள்.

வர்த்தக சபை, வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகள் (அதில் குறிப்பிட்டுள்ளபடி)—நியமன உறுப்பினர்.

(iii) வணிகர்கள் நல ஆலோசனைக் குழு:

வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் 6–11–1985 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணையின்படி வணிகர்கள் நல ஆலோசனைக் குழுவொன்று இரண்டாண்டுகளுக்கு அமைக்கப்பட்டது. வணிக வரிகள் துறை அமைச்சர் இதற்குத் தலைவராவார். நிதி அமைச்சர், தொழில் அமைச்சர், ஊரகத் தொழில் அமைச்சர் ஆகியோர் இக்குழுவின் அலுவலர் முறை உறுப்பினர்களாவார். அத்துடன் அரசு சார்பற்ற 13 உறுப்பினர் களும் அரசு அதிகாரிகளான 3 உறுப்பினர்களும் இதில் இடம் பெற்றுள்ளனர். இக்குழு வியாபாரிகளின் பிரச்சினைகளையும், சிக்கல்களையும் அறிய முயற்சிக்கிறது; அவர்களின் சிக்கல்களைத் தீர்த்து பரிந்துரைகள் செய்வது குறித்து ஆலோசிக்கிறது.

(iV) குறை தீர்க்கும் பிரிவு:

குறை தீர்க்கும் பிரிவு ஒன்று 1984 செப்டம்பரில் ஏற்படுத்தப் பட்டது. வணிக வரிகள் இணை ஆணையாளர்-I இதன் தலைவ ராவார், வணிக வரிகள் துணை ஆணையாளர் (வரைவுப் பிரிவு) வணிக வரிகள் உதவி ஆணையாளர் (சட்டம்) ஆகியோர் இப் பிரிவின் உறுப்பினர்களாவர். வணிக சமூகத்தினரின் குறைகளைக் கேட்டு, அவற்றை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற் கென்றே இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

		1985.	1986
இந்த ஆண்டில் வரப்பெற்ற மனுக்கள்	..	365	330
நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டவை	..	313	318

13ↄ தகவல் தொகுப்புப் பிரிவு:

வணிக வரி ஆணையாளர் அலுவலகத்தில் தகவல் தொகுப்புப் பிரிவு தொடர்ந்து செயல்படுகிறது. விற்பனை வரி தொடர்பான புள்ளி விவரங்களை கணக்கிட்டு பொறி மூலம் தொகுப்பதே இப்பிரிவின் முக்கியப் பணியாகும். பொருள் வாரியான மொத்த வியாபாரத் தொகை, விதிக்கப்பட்ட வரி முதலிய தகவல்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்பு அதிகாரிகளால் I.P.–1 படிவங்களிலும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் விவரங்கள் I.P. 2 படிவங்களிலும், இவ்விரு சட்டங்களின்கீழ் வராத ஆண்டு விற்பனைத்தொகை விவரம் சம்பந்தப்பட்ட ஆண்டுக்காக ஒவ்

வொரு வணிகரின் வரி விதிப்பு பதிவுருக்களின் அடிப்படையில், வரிவிதிப்பு அதிகாரிகளால் IP 3 படிவங்களிலும் கொடுக்கப் படுகின்றன. அத்துடன், ஒரு லட்சம் ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை உள்ள வியாபாரிகளிடமிருந்து ஒவ்வொரு ஆண்டின் அரையாண்டிற்காக பொருள் வாரியான தற்காலிக புள்ளி விவரமும், வரி விவரமும் திரட்டப்பட்டு, வரவு-செலவுத் திட்ட நோக்கங்களுக்காக தகவல் தொகுப்பு பிரிவில் வகைப்படுத்தப்படுகின்றன.

ஆய்வு ஆண்டில் 1984–85 வரி விதிப்பு ஆண்டுகள் தொடர் பான விவரங்களைத் தொகுக்கும் பணி தகவல் தொகுப்பு பிரிவில் நிறைவு செய்யப்பட்டது. 30–9–1986 உடன் முடிவடையும் அரையாண்டு தொடர்பான தற்காலிகக் கணக்கு புள்ளி விவரங்கள் தற்போது இப்பிரிவில் சரிபார்க்கப்பட்டு, அரசு தகவல் தொகுப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றன. 1986–87 ஆம் ஆண்டில் 1985–86 ஆம் வரி மதிப்பீட்டு ஆண்டு தொடர்பான தகவல்கள் சரிபார்க்கப்பட்டன.

கர்நாடக மாநிலத்திலுள்ள வணிக வரிகள் துறையில் கணக் கீட்டுப் பொறி மூலம் தகவல் கொடுக்கும் முறை வணிக வரிகள் துறையால் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இந்த கணக்கீட்டுப் பொறியியல் முறையினை பின் வருமாறு நீட்டிப்பது என்று முடிவு செய்யப்பட்டது:—

(i) வணிகர்களின் அகர வரிசைப் பட்டியை கணக்கீட்டுப் பொறி மூலம் தொகுத்தல்;

(ii) வணிகப் பொருட்கள் வரியான வருவாய் விவரங் களைத் திங்கள் தோறும் கணக்கீட்டுப் பொறி மூலம் தொகுத்தல்;

(iii) ஒரு முனை வரி விதிப்பிற்குரிய பொருட்களின் இரண்டாவது விற்பனைக்கு கேட்கப்பட்டுள்ள வரி விலக்கினை ஒப்பிட்டுச் சரிபார்த்தல்;

(iv) சோதனைச் சாவடி புள்ளி விவரங்களை ஒப்பிட்டுச் சரிபார்த்தல்.

சென்னை, கிரீம்ஸ் சாலை, வணிக வரிகள் கட்டிடத்தில் கணக்கீட்டு பொறி ஒன்றை நிறுவ, அரசு ஆணை பிறப்பித் துள்ளது. இவ்வகையில் தொடராயினச் செலவாக ரூ. 15.50 இலட்சத்திற்கும், பராமரிப்புக்காக ஆண்டொன்றுக்கு தொடரும் செலவாக ரூ. 1.71 இலட்சத்திற்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது. இது விரைவில் நிறுவப்படும் சாப்ட்வேர் சாதனங்கள், வாங்கு வதற்காக தொடராச் செலவாக ரூ. 1.05 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. பணியாளர் செலவு குறித்து பொருந்தமான நிலையில் ஒப்புதலளிக்கப்படும்.

14. அமைப்பு-செயல் முறைப் பிரிவு:

இப்பிரிவுக்கு வணிக வரி அதிகாரி ஒருவர் தலைவராவார். இப்பிரிவின் செயல் நோக்கங்களில் குறிப்பிட்ட துறையின் தொடர்ந்து வரும் வளர்ச்சி காரணமாக வரி மதிப்பீட்டு அலுவலகங்களில் எழுந்துள்ள பணியின் அளவை திட்டவட்ட முறையில் ஆய்வு செய்வது, தேவையான இடங்களில் கூடுதல் பணியாளர் நியமனத்திற்கு ஆலோசனைக் கூறுவது ஆகியவை அடங்கும். இப்பிரிவு கீழ்க்காணும் பணியினங்களையும் கவனித்து வருகிறது:—

(i) தகவல் அளிக்கின்ற தனிப்பட்டவர்களுக்கு பரிசு வழங்குதல்;

(ii) துறை அலுவலர்களுக்கு சிறப்பு மிகு பணிக்கான முதல்வரின் தகுதிச் சான்றிதழ், மொத்தத் தொகை வழங்குதல் போன்ற பணி இனங்களையும் இது கவனிக்கிறது.

நடப்பு ஆண்டில், தகவல் அளித்த எழுவருக்கு ரொக்கமாக 20,975 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இவ்வகையில் 7,100 ரூபாய் வழங்கப்பட்டது.

15. சட்டங்களில் சில முக்கியமான திருத்தங்கள்:

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம்: சட்டம் எண். 40/86.

44, 45 ஆம் பிரிவுகளின் செயல் நோக்கத்திற்காக, ''சரக்கு வண்டிகள்'' என்ற சொற்றொடரின் கீழ் வரும் வண்டிகளைத் திட்டவட்டமாக வகைப்படுத்துவதே இத்திருத்தச் சட்டத்தின்படி கொண்டுவரக் கருதியுள்ள முக்கியமான திருத்தமாகும். பொருட்கள் எடுத்துச் சொல்லப்படுகின்ற எவ்வகை ஊர்தியினையும் சோதனை செய்ய இத்திருத்தம் இயலச் செய்துள்ளது.

சட்ட எண். 41/86.

20 ஆம் பிரிவினைத் திருத்தியதன் மூலமும் வணிகரெனப் பதிவு செய்ய ஒருவரின் குறைந்த அளவு விற்று முதல் 75,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. ஆண்டொன்றுக்கான பதிவுக் கட்டணம் 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதல் வணிக இடத்திற்கான கட்டணம் 20 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

3. சட்ட எண். 42/86.

ஒப்பந்தப் பணிகள் மீது வரி விதித்ததால் வரி மதிப்பீடுகளை இறுதி செய்வதில் சில நடைமுறை பிரச்சினைகள் எழுந்தன. எனவே 42/86 ஆம் எண். திருத்தச் சட்டத்தின் மூலம் அடங்கல் திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இது

26-6-1986-லிருந்து செயலுக்கு வந்தது. ஒப்பந்தப் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக உண்மையில் செலவிட்ட தொழி லாளர், ஏனைய கட்டணங்கள் வகையில் அத்தகைய தொகை மீது பிடித்தம் செய்ய வகை செய்யும் வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 15-12-1986 ஆம் நாளிட்ட 1277 ஆம் எண் அரசாணை மூலம் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளின் 6 B (b) விதியில் திருத்தம் செய்யப்பட்டது. மேலும் 1-10-84-க்கு முன்பு மேற்கொள்ளப் பட்ட ஒப்பந்தப் பணிகள் மீதான வரி விதிப்பிலிருந்து அரசு விலக்களித்துள்ளது.

4. சட்டம் எண். 43/86

வரி ஏய்ப்பிற்கு உள்ளாகின்ற சில பொருட்களின் மீது வரி விதிக்கும் வகையில் ஒரு முனை விதிப்பைப் பிரித்து இரு நிலைகளில் வரி விதிப்பதன் மூலம் வரி ஏய்ப்பு செய்ய இயலத் தக்க சில பொருட்களின் மீது வரி விதிப்பதற்காக புதிய வரி விதிப்பு திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. வரி விலக்கு பெறுவதற்காகக் கணக்குகளை திருத்தி அதன் மூலம் பொதுவாக வருவாய் இழப்பு ஏற்படுவதை தடுத்து வருவாய் பெறுவதை உறுதி செய்யும் நோக்குடன் விற்பனையில் இறுதி நிலையில் வரி விதிக்கப்படுகின்றது. அதே சமயம், மதிப்பு உயர்வதால் வரியின் அளவும் அதிகரிக்கச் செய்யும். எவர்சில்வர் பொருட்கள் முதன் முதலில் இம்முறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

5 சட்டம் எண். 44/86

முதன்மைச் சட்டத்தின் கீழ் வரிச் சலுகைகளை மூலப் பொருட்கள் துணைப் பொருட்கள், செய்முறைப்படுத்தும் பொருட்களுக்கும் இச்சலுகைகளை நீட்டிப்பதுடன் ஒப்பந்தப் பணிகளில் பயன்படுத்துவதற்கு வாங்கிய பொருட்களுக்கும் அனுமதிப்பதே இத்திருத்தத்தின் சிறப்பு அம்சமாகும்.

6. சட்டம் எண். 76/86

மேல் முறையீடுகளை தாக்கல் செய்வதில் ஏற்படும் கால தாமதங்களை மன்னித்துவிட பல்வேறு மேல்முறையீட்டு அதிகாரிகளின் அதிகாரங்களை இத்திருத்த சட்டம் கட்டுப் படுத்துகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையற்ற கால தாமதங்களை மன்னித்து அனுமதிப்பதன் மூலம் ஏற்படும் நிருவாக இடர்பாடுகள் காரணமாக இத்திருத்தம் அவசியமாயிற்று.

7. சட்டம் எண். 78/86

சென்னை உயர்நீதி மன்றத்தின் சில தீர்ப்புகளின் காரணமாக எழுகின்ற சில இடர்பாடுகளைக் களையும் வகையில், இத்திருத்தச் சட்டத்தின் மூலம் 13, 24 ஆம் பிரிவுகள் திருத்தியமைக்கப் பட்டன.

வரி மதிப்பீடுகள் முடிந்த பின்னர் நீண்ட காலம் கழித்து காணப்படும் விலை வேறுபாட்டின் காரணமாக, திருத்தியமைக்கும் அவசியம் ஏற்படும் வரி மதிப்பீடு வரி மதிப்பீடு தொடர்பான செயல் நோக்கத்திற்காக 16-C ஆம் பிரிவு என்ற புதிய விதித் துறையும் சேர்க்கப்பட்டுள்ளது.

8. சட்டம் எண். 79/86

''ஒப்பந்தப் பணிகள்'' பொருள்களைக் ''குத்தகைக்கு'' விடுதல் தொடர்பான பணி வணிகரொருவர் [illegible] எனப் பதிவு செய்து கொள்வதற்கான விற்று முதல் [illegible] வரையறை 40,000 ரூபாயென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் [illegible]:

77/86 ஆம் எண். சட்டத்தின் மூலம் 17-12-1986 லிருந்து 172 என்ற புதிய பதிவு கொண்டு வரப்பட்டுள்ளது.

172. எந்த வகை விசையினாலும் இயக்கப்படும் [illegible] கப்பல்கள், நீராவிக் கப்பல்கள், [illegible], [illegible], விசைப் படகுகள், டிராலர்கள், [illegible], [illegible] கப்பல் களும் அவற்றின் உட்பகுதி, [illegible], [illegible], [illegible] பாகங்களும்—முதல் விற்பனை முனையில் [illegible].

தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்:

சட்டம் எண். 35/86.

தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 1986 ஆம் ஆண்டு [illegible] சட்டத்தின் மூலம் 1-4-1986 ஆம் நாளிலிருந்து [illegible]. [illegible] மூலம், கூடுதல் வரி விதிப்பதற்கான [illegible] வரி விதிக்கத் தக்க விற்று முதல் ரூ. 3 இலட்சத்திலிருந்து ரூ. 10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதுடன் வரி வீதங்களும் பின்வருமாறு திருத்தப் பட்டுள்ளன.—

(i) வரி விதிக்கப்படத்தக்க மொத்த விற்று முதல் ரூ. 10 இலட்சம் முதல் ரூ. 40 இலட்சம் வரை—வரி விதிக்கத்தக்க விற்று முதலின் 1.25 சதவீதம்.

(ii) வரி விதிக்கத்தக்க விற்று முதல் [illegible] மேற்படின்—வரி விதிக்கத்தக்க விற்று முதலில் 1.5 சதவீதம்.

தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்:

1. சட்டம் எண். 45/86

இச்சட்டத்தின் II ஆம் எண் விவர அட்டவணையைத் திருத்தி யதன் மூலம் நீலகிரி, பெரியார் மாவட்டங்களிலுள்ள சில நகராட்சி களின் தரம் உயர்த்தப்பட்டன.

2. சட்டம் எண். 46/86

இச்சட்டத்தின் II ஆம் எண் விவர அட்டவணையைத் திருத்தி யதன் மூலம் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள சில நகராட்சிகளின் தரம் உயர்த்தப்பட்டன.

3. சட்டம் எண். 47/86

இத்திருத்த சட்டத்தின் மூலம் 5-A, 5-B ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டு அதன்படி இணக்க வரி விதிப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள திரையரங்கங்களுக்கு இணக்க வரிவிதிப்பு வீதத்தை 10 சதவீதமாக உயர்த்திட வழி வகை செய்யப் பட்டுள்ளது.

4. சட்டம் எண். 48/86

மதுரை மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் பிரிக்கப் பட்டதைத் தொடர்ந்து, புதியதாக அமைக்கப்பட்ட மாவட்டங் களான மதுரை, அண்ணா, இராமநாதபுரம், காமராஜ், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இச்சட்டத்தின் I மற்றும் II ஆம் எண் விவர அட்டவணைகள் திருத்தப்பட்டன.

தமிழ்நாடு 198[illegible] ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரி விதிப்புச் சட்டம்.

37/86 ஆம் எண் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவந்ததன் மூலம் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் உள்ளதைப் போன்று உணவகம் நடத்துபவர்கள் பதிவு செய்யவும், உரிய கட்டணத்தையும் ஏனைய இடை நிகழ் காரியங்களுக்கான தொகையையும் செலுத்தவும் வகை செய்து தமிழ்நாடு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப் படும் ஆடம்பர வசதிகள் மீது வரிவிதிப்புச் சட்டத்தின் விதித் துறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அதே சமயம் வரி வீதமும் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது.—

(அ)	தங்கும் இடவசதிக் கட்டணம் நாள் ஒன்றுக்கு அறை ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு குறையாமலும் ஆனால் (குளிர்பதன வசதி, தொலைகாட்சி, வானொலிஇசை, கூடுதல்படுக்கைகள் மற்றும் அது போன்றவற்றிற்கான கட்டணங்கள் உட்பட, ஆனால் உணவு, பானம், தொலைபேசி அழைப்புகள் தொடர்பான கட்டணங்கள் நீங்கலாக) 100 ரூபாய்க்கு குறைவாக இருப்பின்.	இத்தகைய கட்டணத்தில் 10 சதவீதம்.

(ஆ) இத்தகைய கட்டணம் அறையொன்றுக்கு நாள் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு குறையாமலும் ஆனால் 200 ரூபாய்க்கு குறைவாகவும் இருப்பின்.	இத்தகைய கட்டண வீதத்தில் 15 சதவீதம்
(இ) இத்தகைய கட்டணம் நாளொன்றுக்கு அறையொன்றுக்கு 200 ரூபாயும் அதற்கு அதிகமாகவும் இருப்பின்.	இத்தகைய கட்டணத்தில் 20 சதவீதம்

16. வருவாய் வசூல்.

A. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

1981–82 ஆம் ஆண்டிலிருந்து 1986–87 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

கால அளவு. (1)			மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்.)
1981–82	..	..	44,937.50
1982–83	..	..	53,782.95
1983–84	..	..	58,840.00
1984–85	..	..	71,896.00
1985–86	..	..	82,446.00
1986–87 (1987 பிப்ரவரி வரை)	..	..	84,749.00

1986–87 ஆம் ஆண்டில் (1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாயை இதற்கு நிகரான முந்தைய ஆண்டான 1985–86 ஆம் ஆண்டு வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 10,634 இலட்சமாகும் (14 சதவீதமாகும்).

B. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டம் :

1981–82 ஆம் ஆண்டிலிருந்து 1986–87 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

கால அளவு. (1)			மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்)
1981–82	.	..	9,554.98
1982–83	..	..	11,597.34
1983–84	..	..	11,822.00
1984–85	..	..	13,569.00
1985–86	..	..	15,006.00
1986–87 (1987 பிப்ரவரி வரையில்)			15,540.00

1986–87 ஆம் ஆண்டில் (1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாயை இதற்கு நிகரான முந்தைய ஆண்டான 1985–86 ஆம் ஆண்டு வருவாயுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 2,145 இலட்சமாகும் (16 சதவீதமாகும்).

C. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் :

1981–82 ஆம் ஆண்டிலிருந்து 1986–87 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

கால அளவு. (1)			மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்)
1981–82	..	..	3,146.11
1982–83	..	..	3,642.02
1983–84	..	..	3,926.00
1984–85	..	..	4,488.00
1985–86	.	..	5,328.00
1986–87 (1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்)			5,235.00

[1987 ஏப்ரல் 1

1986–87 ஆம் ஆண்டில் (1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டங்களின் கீழ் கிடைத்த வருவாயை முந்தைய 1985–86 ஆம் ஆண்டில் இதற்கு நிகரான கால அளவில் கிடைத்த வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 4.18 இலட்சமாகும் (9 சதவீதமாகும்). இணக்கவரி ஏற்பாட்டுத் திட்டம், மூன்று மாநகராட்சிகள் அதாவது சென்னை, மதுரை, கோயம்புத்தூர், மற்றும் 9 தனி நிலை நகராட்சிகள் அதாவது சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், திருச்சி, தஞ்சாவூர், பொள்ளாச்சி, தூத்துக்குடி, உதகமண்டலம் ஆகியவை நீங்கலாக அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து செயலிலுள்ளது.

இவ்விரு சட்டங்களும், கேளிக்கைகள்மீது வரி விதித்த வகை செய்கின்றன. தொகை செலுத்துவதன் பேரில், மக்கள் அனுமதிக்கப்படும் திரைப்படக் காட்சிகளுக்கும், குதிரைப் பந்தயங்களுக்கும் மட்டும் வரிவிதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வரி மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும், அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. அத்துடன், தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் அடிப்படை கேளிக்கை வரித் தொகையில் 90 சதவீதம் தொகையும், சம்பந்தப்பட்ட அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. வரி இணக்கம் செய்துகொள்ளும் திட்டம் செயலில் இருக்கின்ற பகுதிகளில் கிடைக்கும் வருவாய், இரண்டாம், மூன்றாம் நிலை நகராட்சிகளைப் பொறுத்தமட்டில், அரசுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையே 40:60 என்ற வீதத்திலும் முதல்நிலை, தேர்வுநிலை நகராட்சிகளைப் பொறுத்தமட்டில், அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையே 35:65 என்ற வீதத்திலும் ஒதுக்கப்படுகிறது.

D. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் வரிச் சட்டம் :

சென்னையிலும் (கிண்டி), உதகமண்டலத்திலும், குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. [இதனை, தமிழ்நாடு அரசு, குதிரைப் பந்தயத்துறை 9–4–86-லிருந்து எடுத்துக்கொண்டுள்ளது. உள் (குற்றத்தடயப் பொருள் அறிவியல்) துறையின் 9–4–86 ஆம் நாளிட்ட 973 ஆம் எண் அரசாணையைக் காண்க]

1987 ஏப்ரல் 1]

1981–82 ஆம் ஆண்டிலிருந்து 1986–87 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

கால அளவு. (1)			மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்)
1981–82	..	..	454.63
1982–83	..	..	450.88
1983–84	..	..	378.00
1984–85	.	..	392.00
1985–86	..	..	455.00
1986–87 (1987 பிப்ரவரி வரையில்)	..	..	212.00

1986–87 ஆம் ஆம் ஆண்டில் (1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாயை இதற்கு நிகரான முந்தைய ஆண்டான 1985–86 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாயுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த ஆண்டில் குறைந்துள்ள தொகை ரூ. 189.00 இலட்சமாகும். இக்குறைவு சென்னையிலும், உதகமண்டலத்திலும் குதிரை பந்தயம் நடத்துவதை நிறுத்திவிட்டதால் ஏற்பட்டதாகும்.

E. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரிவிதிப்புச் சட்டம் :

1981–82 ஆம் ஆண்டிலிருந்து 1986–87 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

கால அளவு. (1)			மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்)
1981–82	..	..	107.31
1982–83	..	..	130.88
1983–84	..	..	150.00
1984–85	..	..	181.00
1985–86	..	..	272.00
1986–87 (1987, பிப்ரவரி வரையில்)	..	..	239.00

[1987 ஏப்ரல் 1

F. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம் :

இச்சட்டத்தின் கீழ், 1986–87 ஆம் ஆண்டில் (1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) கிடைத்த வருவாய் ரூ. 5 இலட்சமாகும். அப்புதுச்சட்டம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் தேதி முதல் செயலுக்கு வந்தது. மேலும் இச் சட்டத்தில் வரையறுத்துள்ள வரம்புக்குள் இவ்வரி வீதங்களை அரசு 1–4–87-லிருந்து தகுந்தவாறு திருத்தியமைத்துள்ளது.

17. 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி தொழில் துறையினரும் வர்த்தகர்களும் உழவர்களும் பொது மக்களும் பயனுறும் வகையில் 23–3–1987 முதல் கீழ்க்கண்ட சலுகைகளை அரசு அளித்துள்ளது :—

கீழ்க்கண்ட இனங்களுக்கு வரி வீதமானது கீழே குறிப்பிட்டுள்ளபடி குறைக்கப்படுகின்றது :—

வரிசை எண்ணும் பெயரும்.	தற்போதைய வரி வீதம்.	குறைக்கப்பட்ட வரி வீதம்.
	(விழுக்காடு.)	
(1)	(2)	(3)
1 நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் அணு பொருட்கள் மற்றும் பாகங்கள்.	6	4
2 மோட்டார் ஊர்திகள்	9	5
3 50 க.செ. கொள்ளளவிற்கும் அதிகமாக உள்ள இன்ஜினைக் கொண்ட இரண்டு சக்கர ஊர்திகள்.	15	8
4 நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் 50 க.செ. கொள்ளளவிற்கும் குறைவாக உள்ள இன்ஜினைக்கொண்ட இரண்டு சக்கர ஊர்திகள் மற்றும் மொப்பட்கள்.	15	4
5 மின்சக்தி உற்பத்தி செய்யும் பொறி சம்பந்தப்பட்ட பாகங்கள் (Generator Parts).	12	8

1987 ஏப்ரல் 1]

6 விசைக் கலப்பைகள் (Power Tillers)	8	6
7 நாப்தால்ஸ் (Nophthols) ..	5	4
8 குறிப்பிட்ட பிளாஸ்டிக் மூலப்பொருட்கள்.	5	4
9 மோட்டார் ஊர்திகள் இழுவை ஊர்திகள் ஆகியவற்றின் இணைப்பு மற்றும் உதிரிப் பாகங்கள்.	15	12
10 ஜிப்சம் தாது (Mineral Gypsum).	5	3.5

ஏற்கெனவே, மாநில அரசு மத்திய அரசுத் துறைகள் மற்றும் இந்திய ரயில்வே துறை வாங்கும் முதல் அட்டவணையின் கீழ் உள்ள பெரும்பான்மையான பொருட்கள் மீதான சலுகை விற்பனை வரியான 4 விழுக்காட்டை தமிழ்நாட்டில் அமைந்துள்ள பிற மாநிலங்களின் அரசு துறைகளுக்கும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம், தமிழ்நாடு மின் வாரியம் ஆகியவற்றிற்கும் நீட்டிக்கப்படுகிறது.

குறைந்த வரி விதிப்பான 5 விழுக்காடு, ஒப்பந்த வேலைகள் சம்பந்தப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்படாத இனங்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது.

இந்திய எல்லைக்கப்பால் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை அடைக்கப் பயன்படும் பொருட்களுக்கு, ஏற்றுமதிக்கும் முந்திய கடைசி விற்பனை முனையிலுள்ள வரி மீது விலக்களிக்கப்படுகிறது.

குறிப்பிடப்பட்ட சாயப் பொருட்களின் 5 விழுக்காடு பல முனை வரி, 5 விழுக்காடு ஒரு முனை வரியாக மாற்றப்படுகிறது.

நெறிமுறைப்படுத்தும் நடவடிக்கையின் பால், கச்சா மற்றும் பதப்படுத்தப்பட்ட தோல் ஆகியவற்றின் மீதான வரிவிதிப்பு முறை, கச்சா தோல் நிலையில் கடைசி கொள்முதல் முனையில் 2 விழுக்காடும், பதப்படுத்தப்பட்ட நிலையில் முதல் விற்பனை முனையில் 2 விழுக்காடும் என மாற்றம் செய்யப்படுகிறது.

பழைய மற்றும் சிதைந்த அல்லது அடித்து மாற்றப்பட்ட பழைய நகைகள், மற்றும் பாலாமறல் (Palamaral) வெள்ளி உட்பட வெள்ளி அல்லது தங்கத்தால் செய்யப்பட்ட மற்ற ஆபரணங்கள் கொள்முதல் செய்யும் வணிகர்கள் செலுத்தும் கொள்முதல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

வரி அமைப்பினை மேலும் நெறிமுறைப்படுத்தும் நடவடிக்கையின் பால் கீழ்க்கண்ட இனங்கள் முதல் விற்பனை முனையில் அவற்றிற்கு எதிரே குறிப்பிட்ட வீதங்களில் ஒரு முனை வரி விதிப்பின் கீழ் கொண்டு வரப்படுகிறது.—

(அ) பனை கொழுப்பு அமிலம் (Palm Fatty acid). 5 விழுக்காடு

(இ) குறிப்பிடப்பட்ட கிரானா பொருட்கள். (Specified Kirana goods) 8 விழுக்காடு

கையினால் செய்யப்படும் தீக்குச்சிகள் தயாரிக்கும் சிறு உற்பத்தியாளர்களும், குடிசைத் தொழில்களும் பயன் அடையும் வீதத்தில் வரி விலக்கிற்கான ஆண்டு விற்பனை வரம்பு ரூ. 50,000 லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்படுகிறது. ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகைப்பட்ட விற்பனைத் தொகைகளுக்கு கீழே விவரிக்கப்பட்ட வீதத்தில் வரி விதிக்கப்படுகிறது.—

ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் ரூபாய் 2,50 இலட்சம் வரை. 1 விழுக்காடு

ரூபாய் 2.50 இலட்சத்திற்கு மேல் ரூபாய் 5 இலட்சம் வரை. 2 ,,

ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் .. .. 3 ,,

வரி ஏய்ப்பைத் தடுக்கும் நடவடிக்கையாக 23–3–1987-ல் இருந்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.—

வரிசை எண்ணும் இனத்தின் பெயரும். (1)		விற்பனை முனை மற்றும் வீதம். (2)
1	ஏலக்காய்	5 விழுக்காடு பலமுனை வரி.
2	வெளி மாநிலத்திலிருந்து கொள் முதல் செய்யப்படும் வெல்லம்.	முதல் விற்பனை முனையில் 8 விழுக்காடு ஒரு முனை வரி.
3	தமது மாநிலத்திற்குள் கொள் முதல் செய்யப்படும் வெல்லம்.	முதல் கொள்முதல் முனையில் 8 விழுக்காடு ஒரு முனை வரி.
4	இரும்பு, அலமாரி, பாதுகாப்புப் பெட்டகங்கள் முதலியன.	முதல் விற்பனை முனையில் 10 விழுக்காடு மற்றும் கடைசி விற்பனை முனையில் 5 விழுக்காடு.

5	மேலே இனம் 4-ல் கூறப்பட்ட இனங்கள் தவிர அனைத்து வீட்டு அலுவலக தளவாடங்கள்.	முதல் விற்பனை முனையில் 6 விழுக்காடு மற்றும் கடைசி விற்பனையில் 4 விழுக்காடு.
6	மோட்டார் ஊர்திகள், இழுவை ஊர்திகள் ஆகியவற்றின் இணைப்பு மற்றும் உதிரிப் பாகங்கள்.	முதல் விற்பனை முனையில் 8 விழுக்காடு மற்றும் கடைசி விற்பனை முனையில் 4 விழுக்காடு.
7	டையர் மற்றும் டியூப்புகள் ..	முதல் விற்பனை முனையில் 6 விழுக்காடு மற்றும் கடைசி விற்பனை முனையில் 3 விழுக்காடு.

கேளிக்கை வரிகளை நெறிமுறைப்படுத்தும் நடவடிக்கையாக இணக்க வரி நடைமுறையில் இல்லாத இடங்களில் தனித்தனியாக ஆறு வீதமான வரிகளை விதிப்பதற்குப் பதிலாக, ஒட்டு மொத்தமாக ஒரே வரியாக திரையரங்கின் மொத்த அனுமதிக் கட்டணத்தின் 55 விழுக்காடு என்ற வரி வீதத்தை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இவ்வரி வருவாயிலிருந்து பெறப்படும் வருவாய் தற்போது 35:65 என்ற வீதத்திற்குப் பதிலாக உயர் மீதமான 30:70 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் நிதி ஆதாரங்களை திரட்டும் பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.—

முதல் அட்டவணையில் உள்ள பொருட்களுக்கு விற்பனை முனையில் அல்லாத மற்ற விவரிக்கப்பட்ட முனைகளிலும், வணிகம் செய்யும் வணிகர்களது வணிகத் தொகையின் பால் கூடுதல் விற்பனை வரியைப் பெறும் பொருட்டு, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் ,'வரி விதிக்கத்தக்க வணிகத் தொகை'' (Taxable Turn-over) என்ற தொடரை திருத்தியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும் கூடுதல் விற்பனை வரிமீது சலுகை அளிக்கக் கருதி தற்போதுள்ள வரி வீதங்களான 1.25 மற்றும் 1,5 விழுக்காடுகள் முறையே ஒரு விழுக்காடு மற்றும் 1.25 விழுக்காடு என்று குறைக்கப்படுகிறது.

வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டு, இவ்வரி விலக்கிற்கான வரையறையை சிறிது குறைக்க, ரூ. 7 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சம் வரையுள்ள வரி விதிக்கத்தக்க வணிகத் தொகையைக் கொண்ட வணிகர் மீது 0.7 விழுக்காடு என்ற வீதத்தில் வரி விதிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சமன்பாடு கருதி, விற்பனை வரி மீதான உபரி வரி இம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படுகிறது. கூடுதல் உபரி வரி விதிப்பு கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கும் அதனைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டர் வரையுள்ள புறநகர் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் மீது எதிரீடு (Set off) மற்றும் கூடுதல் மதிப்பின்மீது வரிவிதிப்பு ஆகிய கோட்பாடுகளை உள்ளடக்கிய பல முனை வரி விதிப்பு அறிமுகப்படுத்தப்படுகிறது.

ரூ. 2 இலட்சத்திற்கு மிகையாகாத வணிகத் தொகையுள்ள சில வணிகர்களுக்கு வரி விலக்குடனும் ரூ. இலட்சத்திற்கு மேல் ரூ. 5 இலட்சம் வரை வணிகத் தொகைக்கு கீழ்க்கண்ட முறையில் ஆண்டு ஒன்றுக்கு இணக்க வரி செலுத்துமுறை உணவு மற்றும் சிற்றுண்டிச் சாலைகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மீது வரி விதிக்கப்படுகிறது.—

	ரூ.
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்கு மேல் ரூ. 3 இலட்சம் வரை உள்ள விற்பனை அளவு	7,500
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 4 இலட்சம் வரை உள்ள விற்பனை அளவு.	11,250
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 இலட்சத்திற்கு மேல் ரூ. 5 இலட்சம் வரை உள்ள விற்பனை அளவு.	15,003

கீழ்க்கண்ட இனங்கள் மீதான விற்பனை வரி விதம் சற்று அதிகரிக்கப்படுகிறது:—

(அ) வெல்டிங் கம்பிகள் மற்றும் எலக்ட்ரோடுகள் 8 சதவிதம் 10 சதவீதமாக.

(ஆ) ஆஸ்பெஸ்டாஸ்—8 சதவீதம் 10 சதவீதமாக.

(இ) செங்கற்கள்—5 சதவீதம் 8 சதவீதமாக.

(ஈ) மரம்—5 சதவீதம் 8 சதவீதமாக.

(உ) விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரி பொருள் 10 சதவீதத்திலிந்து 14 சதவீதம்.

தேசிய அளவில் ஒரே விதமான வரி விதிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட இனங்கள் மீதான வரி வீதம் 10 விழுக்காடுகளுக்கு உயர்த்தப்படுகிறது:—

(அ) விலை மதிப்புள்ள கற்கள்.

(ஆ) குஷன் மற்றும் நுரைப் பொருட்கள்.

(இ) வெற்றிடக் குடுவைகள் (Vacuum Flasks)

(ஈ) சீனா பாத்திரங்கள்.

(உ) குழந்தைகளை நடத்திச் செல்லும் சக்கர ஊர்திகள்.

(ஊ) தந்தத்தாலான பொருட்கள்.

8. இத்துறை நடைமுறைகளை மாற்றியதாலும் இத்துறையில் பல மேம்பாடுகள் செய்யப்பட்டதாலும், வியாபாரம் செய்யும் பொது மக்களுக்குப் பல சலுகைகளும், வசதிகளும் அளிக்கப்பட்டதாலும், இத்துறை அதிகாரிகளுக்கும், வரி விதிக்கப் பட்டவர்களுக்குமிடையே சுமூகமான உறவு நிலவியது. இது, அரசுக்கு ஆதாயம் கிடைக்கும் வகையிலும் பொது மக்களுக்கும். வியாபாரம் செய்பவர்களுக்கும் அதிக இடர்பாடு இல்லாமலும் வணிகவரிகள் சட்டத்தை நிர்வகிப்பதற்குப் பெரிதும் உதவியது. வணிகர்களுக்குச்சேர வேண்டிய தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டி செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களை விரைவில் இணக்கம் செய்ய இயலும் வகையில், 1986, டிசம்பர் திங்களில் தொகை திருப்பிச் செலுத்தும் வாரத்தையும் வணிகவரிகள் துறை அறிவித்துள்ளது. துறைக்கும் பொதுமக்களுக்குமிடையே இது போன்ற சுமூகமான நல்லுறவும் நெருங்கிய ஒத்துழைப்பும் தொடர்ந்து நிலவும் என்று அரசு நம்புகிறது.

காப்பக நூலகம் ★ 600 008.
13650

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31. Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.